REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஓகஸ்ட் 21 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 91 இல. 197 | Monday 21, August, 2023 | 20பக்கங்கள் | 50/-

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று சிங்கப்பூர் பயணம்

**பதில் அமைச்சர்கள் நால்வர் நியமனம்**

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இன்று சிங்கப்பூர் பயணமாகிறார். ஜனாதிபதி சிங்கப்பூர் விஜயத்தின் போது அந் நாட்டின் ஜனாதிபதி ஹலீமா யெகோப்புடன் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். 06

# பிரபல போதைப்பொருள் வர்த்தகர் மொஹமட் சித்தீக் ஓமானில் கைது

**புலனாய்வுப் பிரிவினர் தகவல்**

லோரன்ஸ் செல்வநாயகம்

பிரபல போதைப்பொருள் வர்த்தகரான மொஹமட் சித்தீக் என்பவர் இந்திய பாதுகாப்பு அதிகாரிகளினால் ஓமானில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவு தெரிவிக்கின்றது.

கடல் மார்க்கமாக இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்துள்ள பிரபல நபரான மொஹமட் சித்தீக் தொடர்பில் இந்திய பாதுகாப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினர் தகவல்களை தேடிவந்துள்ள நிலையில் அவர்களினால் மேற்கொள்ளப்பட் நடவடிக்கையையடுத்து ஓமானில் அபுதாபி எல்லைக்கு அருகாமையிலுள்ள பிரதேசத்தில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைக்கு பாரியளவில் போதைப்பொருட்களை கடத்திவந்துள்ள மொஹமட் சித்தீக், இலங்கையிலுள்ள அவரது மனைவிக்கு மேலதிகமாக பாகிஸ்தானிலுள்ள பிரபல போதைவஸ்து வர்த்தகரொருவரின் தங்கையையும் திருமணம் முடித்துள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

அவர் இந்தியாவின் நேபாள எல்லைப் பிரதேசத்தில் வசித்து வந்துள்ளதாகவும் அவருடன் மாகிலன்கமுவே சஞ்சீவ மற்றும் கொதஅசங்க ஆகிய பாதாள உலக குழு நபர்களும் அங்கு தங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி இருவரும் இந்திய பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட போது, அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கிணங்க, மொஹமட் சித்தீக் கைது செய்யப்பட்டிருந்தார்.

எவ்வாறாயினும் மாகிலன் கமுவே சஞ்சீவ மற்றும் கொத அசங்க ஆகியோர் இந்தியாவில் கைது செய்யப்பட்டதாக எந்தவொரு தெளிவான தகவல்களும் கிடைக்கவில்லையென புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் வைத்து 20 கிலோ ஹெரோயின் 06

குறைபாடுகளை கண்டறியும் முகமாக

## யால தேசிய பூங்காவிற்கு ஜனாதிபதி திடீர் விஜயம்

**அமெரிக்க தூதுவர், அமைச்சர் ஹரீனும் பங்கேற்பு**



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் (19) யால தேசிய பூங்காவிற்கு விஜயம் செய்துள்ளார்.

யால தேசிய பூங்காவிற்குள் சுற்றுலாப் பயணிகள் பிரவேசிப்பதற்கான பயணச்சீட்டுகளை 06



**03** நாட்டின் நெருக்கடி நிலைக்கு தமிழ் அரசியல் கட்சிகளே காரணம்
ஐ.தே.க பொதுச் செயலாளர் ரங்கே பண்டார

## நல்லூர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பம்

**விசேட ஒழுங்குகளை மாநகரசபை செய்துள்ளது**



யாழ். விசேட நிருபர்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு நல்லூர் ஆலய சுற்று வீதிகளில் நேற்று (20) காலை முதல் வீதித்தடைகள் அமைக்கப்பட்டு 06

## சுற்றுலாத்துறையில் புதிய மாற்றங்கள்



**ஒத்துழைப்போருக்கு உதவிகளை வழங்க அரசு தயார்**

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான இலக்குகளை விரைவாக அடையக்கூடிய, முன்னணி துறையாக சுற்றுலாத்துறை காணப்படுவதால், அதனை மேம்படுத்துவதற்கான பல முக்கிய தீர்மானங்களை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகஜனாதிபதிரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இதன் போது அரச மற்றும் தனியார் துறையின் பங்களிப்பை அதிகளவில் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும், ஒத்துழைப்புக்களை வழங்கும் தரப்பினருக்கு அவசியமான வசதிகளை அரசாங்கம் பெற்றுக்கொடுக்கும் என்றும் உறுதியளித்தார். ஹில்டன் ஹோட்டல் 06

மொரட்டுவை பல்கலைக்கழக

## மாணவன் கிளிநொச்சியிலுள்ள வீட்டில் தற்கொலை

லோரன்ஸ் செல்வநாயகம்

மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர் ஒருவர் கிளிநொச்சியில் உள்ள அவரது வீட்டில் வைத்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி விவேகானந்த நகர் பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதான சந்திரமோகன் தேனுஜன் என்ற மாணவரே இவ்வாறு 06



**03** அரிசி தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை
சிறுபோகத்தில் தாராளமான செய்கை

1976 ஆம் ஆண்டு உடன்படிக்கை;

## நாம் 80 வீதமான கடல் விளை நிலங்களை இழந்துள்ளோம்

கோப்பாய் குறூப் நிருபர்



1976 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை மூலம் கச்சதீவு எமக்குரிய கடற்பரப்பாக அங்கீகரிக்கப்பட்ட நிலையில் நாம் 80 வீதமான கடல் விளை நிலங்களை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். தமிழ்நாட்டு மீனவர்கள் மாநாட்டில் கச்சதீவை மீட்போம் 06

இலங்கையின் பாதுகாப்பே இந்தியாவின் கரிசனை;

## இலங்கை இந்திய இருதரப்பு விடயங்களில் தீவிர கவனம்

இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட



இலங்கை இந்திய எதிர்கால இருதரப்பு ஒத்துழைப்புகள் முதலீடு மற்றும் இணைப்பில் அதிக கவனம் செலுத்தும் என இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார். புதுடில்லியின் தேசிய பாதுகாப்பு 06

## SLTB பஸ்களில் பயணச்சீட்டு வழங்காவிடின் முறையிடலாம்

**விரைவில் விசேட வேலைத்திட்டம் அறிமுகம்**



பயணச்சீட்டு வழங்காத இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கு விசேட வேலைத் திட்டமொன்றை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன வலியுறுத்தியுள்ளார். 06

நீதித்துறை சார்ந்த அதிகாரிகளுக்கு

## சம்பளமில்லாத வெளிநாட்டு விடுமுறை வழங்குவது நிறுத்தம்

**நீதிச்சேவை ஆணைக்குழு தீர்மானம்**



நீதித்துறை அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்படும் வெளிநாட்டு விடுமுறை கோரிக்கைகளை பரிசீலிப்பதில்லை என நீதிச்சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நீதித்துறை சேவையில் நிலவும் வெற்றிடங்கள் மற்றும் 06

## USA ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கிய தமிழர்

**டெஸ்லா நிறுவனர் எலான் மாஸ்க் ஆதரவு தெரிவிப்பு**



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் இந்திய வம்சாவளி வேட்பாளருக்கு டெஸ்லா நிறுவுனர் எலான் மஸ்க் ஆதரவு தெரிவித்துள்ளார். 06

## இலங்கை - இந்திய கப்பல் சேவை

**இந்திய வெளியுறவு அமைச்சு பச்சைக்கொடி**



இந்திய வெளியுறவு அமைச்சகம் பச்சைக்கொடி காட்டியுள்ளதால் இந்தியா – இலங்கை இடையே விரைவில் படகு சேவை தொடங்க நாகப்பட்டினம் துறைமுகம் தயாராகி வருகிறது என்று அமைச்சர் எ.வ. வேலு தெரிவித்தார். குஜராத் மாநிலம் கெவடியாவில் 19வது கடலோர மாநிலங்கள் 06



**03** போலியான ஆவணங்களை தயாரித்து வாகன விற்பனை
பாணந்துறையில் மூவர் அதிரடி கைது



**03** நாட்டில் மீண்டும் டெங்கு நோயாளர் தொகை அதிகரிப்பு
இதுவரை 60,030 பேர் பாதிப்பு



**03** முச்சக்கரவண்டி சேவை முறையான ஒழுங்குபடுத்தலுக்கு
ஆட்டோ சாரதிகள் சங்கம் தெரிவிப்பு




நாட்டில் நிலவும் கடும் வறட்சி காரணமாக பல்வேறு பகுதிகளிலும் சுமார் 2 இலட்சம் மக்கள் குடிநீரின்றி பாதிப்படைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் நாடளாவிய 15 மாவட்டங்களிலுள்ள 06

மின்கம்பத்தில் மோதிய மோட்டார் சைக்கிள்;

## யாழ்.நெல்லியடியில் அதிகாலை கோர விபத்து

**இரு இளைஞர்கள் ஸ்தலத்தில் பலி**

நாகர்கோவில் விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோவில் சந்தை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (20) அதிகாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் ஸ்தலத்திலே உயிரிழந்துள்ளனர். வேகக் 06

## அரசின் தேசிய வேலைத் திட்டங்களுக்கு SJB ஆதரவு

**சஜித் பிரேமதாச பகிரங்க அறிவிப்பு**



நாட்டை மீட்பதற்குத் தேசிய ஒருமைப்பாடு மற்றும் இணக்கப்பாடு கொண்ட தேசிய வேலைத்திட்டமொன்று அவசியம். அவ்வாறான வேலைத்திட்டத்துக்கு ஆதரவு வழங்கத் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் நடந்த ஊடக சந்திப்பில் கலந்துக்கொண்டு 06

## ரஷ்ய விண்கலம் லூனா- 25 நிலவில் மோதியது

**ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் உத்தியோகபூர்வ அறிவிப்பு**

நிலவின் தென்துருவத்தில் ஆராய்ச்சிக்காக ரஷ்யாவினால் அனுப்பப்பட்ட விண்கலம் நிலவில் மோதியுள்ளது.

ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் உத்தியோகபூர்வமாக இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

நிலவின் தென் துருவத்தில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக லூனா 25 என்ற இந்த விண்கலத்தை ரஷ்யா கடந்த 10ஆம் திகதி விண்ணில் செலுத்தியது. இந்தியாவின் சந்திரயான் – 3 விண்கலத்துக்கு 06

# நகர்வலம்









இந்து சமய கலாசார திணைக்களமும் பாணந்துறை சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானமும் இணைந்து ஏற்பாடு செய்த அமாவாசை விரத, தர்ப்பனங்களை நிறைவேற்றும் பணி வெள்ளவத்தை கடற்கரையில் அண்மையில் நடைபெற்றது.

## நெற்காணிகளை வரைபடமாக்கும் திட்டம்

**அநுராதபுரம் மேற்கு மேற்கு தினகரன் நிருபர்**

நாடளாவிய ரீதியில் நெற்காணிகளை வரைபடமாக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் நெற் காணிகளின் உண்மையான அளவை மதிப்பிடுவதற்கு GEO Goviya ஊடாக வரைபடமாக்கல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை முழுமையாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் குறித்த காணிகள் அளவீடு செய்யும் போது விவசாயிகளிடமிருந்து எந்த கட்டணமும் அறவிடப்படுவதில்லை என விவசாய அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இருந்த போதும் சில விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் விவசாயிகளிடமிருந்து பணம் சேகரிப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளதுடன் இது தொடர்பில் விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நெற் காணிகளை அளவீடு செய்யும் போது எந்த ஒரு நபரோ அல்லது உத்தியோகத்தரோ பணம் அறவீடு செய்தால் விரைவில் மாவட்ட விவசாய உதவி ஆணையாளருக்கு அறிவிக்குமாறு விவசாயிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## மாகாண மட்டப் போட்டியில் கலந்து கொள்ள மூன்று மாணவர்கள் தகுதி

**(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)**

கெகிராவ கல்வி வலய சிங்கள, தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற ஆங்கில மொழித் தினப் போட்டியில் பலாகல கல்விக் கோட்ட நெல்லியகம முஸ்லிம் மகா வித்தியாலய மூன்று மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்று வடமத்திய மாகாண மட்டப் போட்டியில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் என்.ஏ.எம்.ரமீஸ் தெரிவித்தார்.தரம் 11 பிரிவில் ஐ.எப்.ரீஹா கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தையும், தரம் 12 பிரிவில் எம்.எப்.எப்.ரஹ்னா சொல்வதெழுதலில் முதலாம் இடத்தையும், தரம் 13 பிரிவில் எம்.எச். இஸட்.சல்மி பேச்சுப் போட்டியில் முதலாம் இடங்களைப் பெற்றுள்ளனர். மேலும் கோட்ட மட்டத்தில் பலாகல கோட்டத்தில் நெல்லியகம முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து கலந்து கொண்டவர்களில் பதின் நான்கு மாணவர்கள் முதலாம் இடத்தையும், எட்டு மாணவர்கள் இரண்டாம் இடத்தையும், ஆறு மாணவர்கள் மூன்றாம் இடத்தையும் பெற்று கோட்ட மட்டத்தில் சிங்கள,தமிழ் மொழிப் பாடசாலைகளில் அதிக படியான வெற்றிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்கள்.இவர்களில் முதலாம் இடத்தையும் இரண்டாம் இடத்தையும் பெற்ற மாணவர்கள் வலய மட்டப் போட்டியில் கலந்து கொண்டனர். கெகிராவ கல்வி வலயத்தில் தரம் 11 பிரிவில் கட்டுரை வரைதலில் முதலாம் இடத்தைப் பெற்ற ஐ.எப். ரீஹா கடந்த முறை நடைபெற்ற கட்டுரைப் போட்டி நிகழ்ச்சியிலும் வடமத்திய மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று அகில இலங்கை மட்டப் போட்டியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## 14 வயது மாணவியொருவர் மது அருந்திய சம்பவம்

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

கெக்கிராவ பகுதியிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் கல்வி பயிலும் 14 வயது மாணவியொருவர் மது அருந்திய நிலையில் பாடசாலைக்கு வந்திருந்தமை தொடர்பில் கெக்கிராவ பொலிஸார் மேற்கொண்டு வரும் விசாரணைகள் தொடர்பான அறிக்கையினை தமக்கு வழங்குமாறு கெக்கிராவ வலயக்கல்விப் பணிப்பாளர் பொலிஸாரிடம் எழுத்து மூலம் கேட்டுக் கொண்டுள்ளார். சில தினங்களுக்கு முன்னர் கெக்கிராவ நகரின் திப்பெட்டுவ பகுதியிலுள்ள பாடசாலையில் கல்வி பயிலும் மாணவி மது அருந்திய நிலையில் பாடசாலைக்கு வந்திருந்தபோது பாடசாலைக்கு முன்னால் வீதிக்கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கு தெரியவந்த நிலையில் குறித்த மாணவியை பொலிஸார் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக கெக்கிராவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அறிவித்ததை அடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன் மாணவியின் உடல் நிலையை பரிசோதனை செய்வதற்காக வேண்டி அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். இச்சம்பவம் சமூக வலைத்தலங்கள் மற்றும் ஊடகங்களில் வெளிவந்துள்ள நிலையில் கல்வி அமைச்சினால் வலயக்கல்வி பணிமனை ஊடாக விசாரணைகளின் அறிக்கை கோரப்பட்டுள்ளதை அடுத்தே விசாரணைகளை மேற்கொண்டு வரும் கெக்கிராவ பொலிஸாரிடம் கெக்கிராவ வலயகக் கல்விப் பணிப்பாளர் விசாரணை அறிக்கையினை கோரியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## "Sunshine Super Star" 3s ஆளுமை விருது வாசுகி பி வாசுக்கு



தினகரன், தினகரன் வாரமஞ்சரி, சங்கவி பிலிம்ஸ் பிரைவட் லிமிட்டட், கலைஷ்ரீ கலை மன்றம், அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் என்பன இணைந்து நடத்தும் மாதம் ஒரு ஆளுமையை கௌரவிக்கும் நிகழ்வு எதிர் வரும் 2023.08.30ஆம் திகதி மாலை 3 மணிக்கு கொழும்பு 11, புறக் கோட்டை, ஐந்து லாம்புச் சந்தியிலுள்ள பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமரின் முன்னிலையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் கௌரவ அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார். இந்த கௌரவிப்பு விழா, சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் தலைவர் துரைராசா சுரேஸ், கலைஷ்ரீ கலை மன்றத்தின் தலைவர் கலைஷ்ரீ, அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் தலைவர் எஸ். விஜேராஜ், கலை இயக்குனர் தனா ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கௌரவிக்கப்படும் நபர் "Sunshine Super Star என்ற பட்டத்துடன் 3s என்ற விருது வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவார்.

இந்த ஆளுமை விருதை பெறுதற்குரிய தகுதியை இம்முறை திருமதி வாசுகி பி வாசு பெற்றுள்ளார். இவர் தனியார்துறை ஆசிரியையும் சமூக சேவகியும் தையற்கலை ஆசிரியையும், கவிதை, கட்டுரை, சிறுகதை, எழுத்தாளருமாவார்.



அநுராதபுர மாவட்ட நாச்சியாதீவு தாருல் ஹிக்மா அஹதியா பாடசாலையின் "அல் ஹிக்மா" மாணவர் சஞ்சிகை வெளியீடு நேற்று ( 20 ) நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் அஹதியா நிர்வாக தலைவர் அஷ் செய்க் ஏ.எம்.எஸ். சபீக் ( தீனி ) தலைமையில் இடம் பெற்றது. இந் நிகழ்வின் முதலாவது சஞ்சிகையை நாச்சியாதீவு பள்ளி வாசல்கள் நிர்வாக தலைவர் தேசமான்ய அல் ஹாஜ் ஏ.ஆர்.எம். தாரிக்கிடம் அஹதியா பாடசாலை அதிபர் எம். பி.எம்.ரோஜானி வழங்குவதை காணலாம்.

**(திறப்பனை தினகரன் நிருபர்)**

## அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் கலாரத்ன விபூஷண் விருது வழங்கும் விழா

**2023.09.17 காலை 10 மணிக்கு வத்தளை, ஹெந்தலை சந்தியிலுள்ள நகர சபை மண்டபத்தில்**



அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் வருடாந்தம் நடத்தும் கலாரத்ன விபூஷண் விருது வழங்கும் விழா ஐந்தாவது தடவையாக எதிர் வரும் 2023.09.17ஆம் திகதி காலை 10 மணிக்கு வத்தளை, ஹெந்தலை சந்தியிலுள்ள நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமரின் முன்னிலையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் கௌரவ அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார். அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் தலைவர் எஸ். விஜேராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் 2019ஆம் ஆண்டு முதலாவது விருது வழங்கும் விழாவை கொழும்பு 11, கதிரேஷன் வீதியிலுள்ள அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்துக்கு அருகில் உள்ள கதிரேஷன் மண்டபத்தில் நடத்தியது. இதன்போது 70 கலைஞர்களையும் சமய, சமூக சேவையாளர்களையும் விருதுகள் வழங்கி கௌரவித்தது.

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் 2020ஆம் ஆண்டு இரண்டாவது விருது வழங்கும் விழாவை கொழும்பு 11, கதிரேஷன் வீதியிலுள்ள அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்துக்கு அருகில் உள்ள கதிரேஷன் மண்டபத்தில் நடத்தியது. இதன்போது 160 கலைஞர்களையும் சமய, சமூக சேவையாளர்களையும் விருதுகள் வழங்கி கௌரவித்தது.

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் 2021ஆம் ஆண்டு மூன்றாவது விருது வழங்கும் விழாவை கொழும்பு 11, கதிரேஷன் வீதியிலுள்ள அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்துக்கு அருகில் உள்ள கதிரேஷன் மண்டபத்தில் நடத்தியது. இதன்போது 150 கலைஞர்களையும் சமய சமூக சேவையாளர்களையும் விருதுகள் வழங்கி கௌரவித்தது. அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் 2022ஆம் ஆண்டு நான்காவது விருது வழங்கும் விழாவை கொழும்பு 07, புதிய நகர சபை மண்டபத்தில் நடத்தியது. இதன்போது 150 கலைஞர்களையும் சமய, சமூக சேவையாளர்களையும் விருதுகள் வழங்கி கௌரவித்தது.

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் 2023ஆம் ஆண்டு ஐந்தாவது விருது வழங்கும் விழாவை எதிர் வரும் 2023.09.17ஆம் திகதி காலை 10 மணிக்கு வத்தளை, ஹெந்தலை சந்தியிலுள்ள நகர சபை மண்டபத்தில் நடாத்தவுள்ளது. இதன்போது 120 கலைஞர்களையும் சமய, சமூக சேவையாளர்களையும் விருதுகள் வழங்கி கௌரவிக்கவுள்ளது.

இதுவரை காலமும் கொழும்பு மாவட்டத்தில் விருது வழங்கும் விழாவை நடத்தி வந்த அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் முதல் தடவையாக கம்பஹா மாவட்டத்தில் நடத்தவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தலாவ குளத்தில் வெளிநாட்டு கைக்குண்டு



**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

தலாவ பொலிஸ் பகுதிக்குட்பட்ட குமாரஎலிய கிராமத்தில் அமைந்துள்ள குளத்தில் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக் குண்டொன்றை கண்டு பிடித்துள்ளதாக தலாவ பொலிசார் தெரிவித்தனர். தலாவ முதுன்கம வித்தியாலயத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள குமாரஎலிய. குளத்தில் இருந்து வீட்டுக்கு சென்று கொண்டிருந்த சிறுவன் ஒருவர் அதனை கண்டு இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற அவரது தந்தையிடம் தெரிவித்த பின்னர் அவர் தலாவ பொலிசாருக்கு வழங்கிய தகவலின் பேரில் குறித்த ஸ்தலத்திற்கு விஜயம் செய்த பொலிசார் அதனை கைப்பற்றியுள்ளனர்.

## பாடல் எழுதும் போட்டியில் வெற்றி



சிறுவர்களுக்கான பாடல் எழுதும் போட்டியில் வெற்றிகொழும்பு, பம்பலப்பிட்டி முஸ்லிம் லேடிஸ் கல்லூரியில் தமிழ் இலக்கிய நிகழ்வையொட்டி பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. இங்கு நடத்தப்பட்ட சிறுவர்களுக்கான பாடல் எழுதும் போட்டியில் இப்பாடசாலையில் கல்வி பயிலும் மொகமட் மொபீன் பாத்திமா முத்தீயா மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவருக்கு இதற்கு சான்றிதழும் மெடலும் வழங்கப்பட்டது.

## அநுராதபுர மாவட்டத்தில் சிறு போக நெல் அறுவடை ஆரம்பம்

**( திறப்பனை தினகரன் நிருபர் )**

அநுராதபுர மாவட்டத்தில் இம்முறை செய்கை பண்ணப்பட்ட சிறு போக நெல் வேளாண்மையின் அறுவடை தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(இச் சிறு போகத்தின் போது பாரிய, நடுத்தர,சிறிய நீர்ப்பாசன நீர் தேக்கங்களிலிருந்து இதற்கான நீர்ப்பாசன வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. நெல் வேளாண்மை தவிர மேலதிக மேட்டு நில பயிர் உற்பத்தியாக செய்கை பண்ணப்பட்ட தானிய வகைகளின் விளைச்சலும் அநுராதபுர மாவட்டத்தில் இம்முறை அதிகரித்துள்ளது. கடுகு, உளுந்து, பயறு, எள்ளு, சோளம் ஆகியவையும் அதிக விளைச்சலை இம்முறை தந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அநுராதபுர மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சிக்கும் மத்தியில் நெல் உட்பட உப உணவு பயிர் உற்பத்தியில் விவசாயிகள் ஈடுபட்டிருந்தனர். சுமார் 25 ஆயிரம் ஹெக்டயர் காணிகளில் தானிய பயிர்கள் இம்முறை செய்கை பண்ணப்பட்டிருந்தன.

அநுராதபுரம் மாவட்டத்தின் ரத்மல்கஹவெவ, தம்புத்தேகம, கஹட்டகஸ்திகிலிய, மதவாச்சி, கெப்பிதிகொல்லாவ, ராம்பாவ, பலாகல, திறப்பனை, மிகிந்தலை, கெக்கிராவ, நொச்சியாகம ஆகிய பிரதேசங்களில் இம்முறை அதிகளவான தானிய பயிர் செய்கை பண்ணப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444, 0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஒகஸ்ட் 21 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN


**தொழுகை நேரம்**

சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

# நாட்டின் நெருக்கடி நிலைக்கு தமிழ் அரசியல் கட்சிகளே காரணம்

## ஐ.தே.க பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார

வடக்கிலும் கிழக்கிலும் மொழி மற்றும் மதத்தை அடிப்படையாக கொண்டு அரசியல் கட்சிகள் ஆரம்பிக்கப்பட்டதே இலங்கை இன்று எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கான முக்கிய காரணமென ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடி நிலையை நிவர்த்தி செய்து 2048 ஆம் ஆண்டு இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்ற தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் மாத்திரமே முடியும் என்றார்.

நேற்று முன்தினம் (19) யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை தொகுதியின் கட்சி அலுவலக திறப்பு விழாவில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர்,..

இலங்கையை 2048 ஆம் ஆண்டாகும் போது அபிவிருத்தியடைந்த நாடாக மாற்ற வேண்டுமென்பதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நோக்கம்.

இலங்கையின் அனைத்து பகுதிகளும் ஒன்றிணைய வேண்டும். அனைவரும் இலங்கையர்களாக



ஒரே நாட்டில் வாழ வேண்டுமென்பதே எமது கட்சித் தலைவரின் கொள்கையாகும்.

கடந்த 1944 ஆம் ஆண்டு ஒரு கட்சியாக நாட்டில் ஆட்சி இடம் பெற்ற வேளை இலங்கை பொருளாதார நெருக்கடியை சந்தித்திருக்கவில்லை. எனினும், 1956 ஆம் ஆண்டுக்கு பின்னர் இன மற்றும் மத ரீதியில் கட்சிகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்தே நாட்டில் பிளவுகள் ஏற்படத் தொடங்கின என்றார்.

# முச்சக்கரவண்டி சேவை முறையான ஒழுங்குபடுத்தலுக்கு

## ஆட்டோ சாரதிகள் சங்கம் தெரிவிப்பு



நாட்டில் இயங்கி வரும் முறைசாரா முச்சக்கரவண்டி பயணிகள் போக்குவரத்து சேவையினால் சில முச்சக்கரவண்டி சாரதிகள் பயணிகளிடம் அநியாயமாக பணம் அறவிடுவதாக அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் தொழிற் சங்கம் தெரிவித்துள்ளது.

முச்சக்கரவண்டி சேவையை முறையான ஒழுங்குமுறைக்கு உட்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அதன் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.தற்போதுள்ள நிலைமைகளை தவிர்க்க உரிய அதிகாரிகள் உடனடி கவனம் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரத்துக்கு ரயிலில் வரும் பக்தர்களிடம் முச்சக்கரவண்டி சாரதிகள் அநியாயமாக பணம் அறவிடுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்ததையடுத்து மீண்டும் முச்சக்கரவண்டி சேவை குறித்த விவாதங்கள் எழுந்துள்ளன.

# போலியான ஆவணங்களை தயாரித்து வாகன விற்பனை

## பாணந்துறையில் மூவர் அதிரடி கைது



வாடகைக்கு எடுக்கப்பட்ட வாகனங்களை போலி ஆவணம் தயாரித்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். பாணந்துறை பிரதேசத்தில் நபர் ஒருவரிடம் இருந்து வாகனங்களை வாடகைக்கு எடுத்து சட்டவிரோதமாக விற்பனை செய்த விடயம் தொடர்பில் பாணந்துறை பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. இந்நிலையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து 36 மற்றும் 46 வயதுடைய 2ஆண்களும் 36 வயதுடைய பெண் ஒருவருமாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் விற்பனை செய்த 2 கார்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.இதன்போது 2 போலியான சாரதி அனுமதிப்பத்திரங்கள் மற்றும் போலி துறைமுக ஊழியர் அடையாள அட்டை உட்பட பல போலி ஆவணங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் பாணந்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் பாணந்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மதுபான போத்தல்களில் போலி ஸ்டிக்கர்கள்

## நிதி அமைச்சர் பகிரங்க எச்சரிக்கை

மதுபான போத்தல்களில் போலி ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டமை தொடர்பில் பதிவாகும் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களுக்கு பாரபட்சமின்றி தண்டனை வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் எவ்வளவு பெரிய மதுபான நிறுவனம் குற்றவாளியாக இருந்தாலும் சட்டத்தை நடைமுறைப்படுத்தத் தயங்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளித்த போதே அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இவ்வாறு



குறிப்பிட்டுள்ளார்.

கலால் திணைக்கள அதிகாரி அனைத்து மதுபான தொழிற்சாலைகளையும் கண்காணிப்பதற்கு கலால் திணைக்கள அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், கலால் திணைக்கள அதிகாரிகளின் தவறுகள் தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்த தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பல பகுதிகளில் உள்ள மதுபானசாலைகளில் கலால் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சுமார் 8000 போலி மது போத்தல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதன் பின்னணியில் கலால் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவரும் இருப்பதாக கூறப்படுகிறது.

மதுபான நிறுவனங்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய வரியை குறைக்க போலி ஸ்டிக்கர்கள் பயன்படுத்துவதால், கடந்த காலங்களில் மது வரி வருவாய் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரிசி தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை சிறுபோகத்தில் தாராளமான செய்கை

நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக எதிர்வரும் காலங்களில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பலாந்தோட்டை நெல் ஆராய்ச்சி நிறுவனத்துக்கு சொந்தமான பயிர் நிலங்களில் விளைந்த சிறுபோக பயிர்களை அறுவடை செய்யும் சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டு அவர் இதனை தெரிவித்தார்.



சிறுபோகத்தில், 5 இலட்சத்து மூவாயிரம் ஹெக்டெயாரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது.

எனவே, ஒரு இலட்சம் ஏக்கர் பயிர்ச் சேதம் ஏற்பட்டாலும் எந்தவொரு அரிசி தட்டுப்பாடும் ஏற்படாது.

கடந்த பெரும்போகத்தில் பாரியளவாக நெல் அறுவடை செய்யப்பட்டதால் அடுத்து வரும் பெரும்போகம் மற்றும் சிறுபோகங்களுக்கு தேவையான நெல் எம்மிடம் உள்ளது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் மீண்டும் டெங்கு நோயாளர் தொகை அதிகரிப்பு

## இந்த ஆண்டில் இதுவரை 60,030 பேர் பாதிப்பு

இந்த ஆண்டில் இது வரையான காலப் பகுதியில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 60 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

அதன்படி, இதுவரை 60 ஆயிரத்து 36 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.



இவர்களில் அதிகளவான நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

குறித்த மாவட்டத்தில் 12 ஆயிரத்து 886 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.அத்துடன், மேல் மாகாணத்தில் சுமார் 30 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் மூவாயிரத்து 446 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதற்கிடையில், கடந்த ஜனவரி மாதம் முதல் டெங்கு நோயினால் மொத்தமாக 38 மரணங்கள் பதிவாகியுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.





திருகோணமலை துறைமுகத்திலிருந்து புறா தீவுக்கான கடல்வழி சுற்றுலா பயணத்தை கடற்படை மீண்டும் ஆரம்பித்துள்ளது. திருகோணமலை துறைமுகத்திலிருந்து நிலாவெலி புறா தீவுக்கான கடல்வழி சுற்றுலா படகு சேவையை நேற்று முன்தினம் கிழக்கு கடற்படை கட்டளை பிரதித் தளபதி கொமடோர் அனில் போவத்த ஆரம்பித்து வைத்த போது.


# இலங்கையிலிருந்து தொழுநோயை இல்லாதொழிக்கும் வழிமுறைகள்

LAKE HOUSE
தினகரன்
தினகரன் வாரமஞ்சரி

## திறந்த கட்டுரைப் போட்டி

### தொனிப் பொருள்

இலங்கையில் தொழுநோய்ப் பாதிப்பு முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது தொடக்கம், அந்நோயைக் கட்டுப்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான வரலாற்றுத் தகவல்கள் உங்களது கட்டுரையில் உள்ளடங்கியிருப்பது அவசியம்.

### பரிசுத் தொகை

முதலாம் பரிசு: 50,000 ரூபா
இரண்டாம் பரிசு: 25,000 ரூபா
மூன்றாம் பரிசு : 15,000 ரூபா
10 பேருக்கு ஆறுதல் பரிசாக தலா 5,000 ரூபா வழங்கப்படும்

### கட்டுரையின் வடிவம்

இலங்கை தொடர்பான தகவல்களை மையப்படுத்தியதாக கட்டுரைகள் அமைந்திருக்க வெண்டும். கட்டுரைப் போட்டியில் பங்குபற்றுவதற்கு வயதெல்லை கிடையாது. கட்டுரைகள் உங்களது சுய ஆக்கமாக இருப்பதுடன், கட்டுரைக்கான ஆக்கத்திறன் வரம்புக்குள் அமைந்ததாகவும் இருப்பது அவசியம். கற்பனைகளைத் தவிர்த்து, ஆய்வுரீ தியில் எழுதப்பட வேண்டும். பத்திரிகைகள் மற்றும் நூல்களில் முன்னர் வெளியான கட்டுரைகளைத் தழுவியதாக இருத்தல் கூடாது. அத்துடன் வலைதளத்தில் வெளியான ஆக்கங்களை பிரதிபண்ணுவதும் தவிர்க்கப்பட வேண்டும். உங்கள் ஆக்கத்தை கணனியில் தட்டெழுத்து செய்து அனுப்பினால் வாசிப்பதற்கு இலகுவாக இருக்கும். கையெழுத்துப் பிரதிகள் தெளிவற்றிருப்பின் அவை நிராகரிக்கப்படும்.

கட்டுரைகள் அனுப்பி வைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி
shrikanth.tkn@gmail.com
editor.tkn@lakehouse.lk

முகவரி :
Editor, Thinakaran Editorial
ANCL, Lake house,
NO.35.D.R.Wijewardene Mawatha,
Colombo – 10

மேலதிக விபரங்களுக்கு
0112429277, 0772409406

சுகாதார துறைசார்ந்தவர்கள் எழுதும் கட்டுரைகள் அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டுரைகள் பேராசிரியர்கள் கொண்ட மேற்பார்வை குழுவால் பரிசீலிக்கப்பட்டே தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

தேர்வாளர்களின் முடிவே இறுதி தீர்வாக இருப்பதோடு அதற்கு எதிரான காரணங்கள் ஏற்றுக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படும்.

கட்டுரைகள் அனைத்தும் ஒகஸ்ட் 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூலுருவாக்கப்படுவதோடு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும்.


## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை



பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்

அரிய செயல்களை அவற்றுக்கு உரிய முறையான வழியில் செய்து முடிக்கும் திறமை யுடையவர்கள் பெருமைக்குரியவராவார்கள்.

# ஈவிரக்கமற்ற கொடுஞ்செயல்!

நாட்டில் நிலவிவரும் வரட்சிக் காலநிலை காரணமாக மனிதர்கள் மாத்திரமல்லாமல் வனவிலங்குகளும் கூட குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதன் காரணமாக அவை அலைந்து திரியும் நிலையும் சில பிரதேசங்களில் ஏற்பட்டுள்ளன.

தற்போது நிலவும் கடும் வரட்சியின் விளைவாக குளங்கள், ஆறுகள், நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் பெரிதும் குறைந்துவடைந்துள்ளதோடு, வனாந்தரங்களில் உள்ள பெரும்பாலான குளங்களும் நீரேந்து பிரதேசங்களும் கூட வற்றிவரண்டு போயுள்ளன. அதனால் தண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்காக கடும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துள்ள வனவிலங்குகள், மனித நடமாட்டப் பிரதேசங்களில் காணப்படும் தண்ணீர்க் கிணறுகளையும் தண்ணீர்க் குட்டைகளையும் நாடி வரக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமையைப் பயன்படுத்திக் கொள்ளும் மனிதாபிமானமற்ற ஒரு சிலர், தமது தாகத்தைத் தீர்த்துக்கொள்ள தண்ணீர் தேடிவரும் வனவிலங்குகளை சட்டவிரோதமான முறையில் சூட்சுமமாக வேட்டையாடும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர். இவ்வாறான செயற்பாடு நாட்டின் தென்பகுதி உள்ளிட்ட சில பிரதேசங்களில் பதிவாகியுள்ளது.

அதாவது தற்போதைய வரட்சிக் காலநிலையில் தண்ணீர் தேடி அலையும் வனவிலங்குகளைக் கவரும் வகையில் தண்ணீர்க் கிணறுகளுக்கு அருகில் சிறிய தண்ணீர்க் குட்டைகளை ஏற்படுத்தி வைத்து அதில் சேகரிக்கும் தண்ணீரில் நஞ்சைக் கலந்து இந்த வேட்டை மேற்கொள்ளப்படுவதாக வனசீவராசிகள் திணைக்களத்திற்கு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தண்ணீர் தேடிவரும் வனவிலங்கு, தாம் அருந்தும் தண்ணீரில் விஷம் கலக்கப்பட்டிருப்பதை முன்கூட்டியே அறிந்து கொள்வதில்லை. ஆனால் தாகம் தீரும் வரை அவை நீரை அருந்தும். ஆனால் சொற்ப நேரத்தில் அவை மயங்கிவிழுந்து விடும்.

இவ்வாறு நஞ்சூட்டப்பட்டு கொல்லப்படும் வனவிலங்கின் இறைச்சி கதிர்காமம் யாத்திரை செல்லும் பயணிகள் மத்தியில் மாத்திரமல்லாமல் ஏனைய பிரதேசங்களிலும் சந்தைப்படுத்தப்படுவதாக தெரிய வந்துள்ளது.

இவ்வாறான நிலையில்தான் வனசீவராசிகள் திணைக்களம், 'தற்போதைய சூழலில் வேட்டையாடப்பட்ட வனவிலங்கின் இறைச்சி எனக் குறிப்பிட்டு சந்தைப்படுத்தப்படும் இறைச்சியைப் பாவனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டாம்' என்றும் 'அவை விஷம் கலந்த நீரை அருந்தியதால் இறந்த வனவிலங்கின் இறைச்சி' என்றும் 'இவ்வாறான செயலில் ஈடுபடுபவர்கள் குறித்து 1992 என்ற அவசர இலக்கத்திற்கு தகவல் வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளது.

தண்ணீர் ஒவ்வொரு உயிரினத்தினதும் உயிர் வாழ்வுக்கு இன்றியமையாத ஒன்றாகும். அதனால் வனாந்தரங்களில் தண்ணீர் கிடைக்கப் பெறாவிட்டாலும் அது கிடைக்கப் பெறக்கூடிய மனித குடியிருப்பு பிரதேசங்களை நாடி வனவிலங்குகள் வருகின்றன. இந்த சந்தர்ப்பதைப் பயன்படுத்தியே சூட்சுமமான வேட்டை இடம்பெறுகின்றது.

தண்ணீர் வழங்குவது போன்று கிணறுகளுக்கு அருகில் சிறு நீர்க் குட்டைகளை ஏற்படுத்தி அவற்றில் சேர்க்கப்படும் நீரில் நஞ்சைக் கலந்து அவ்விலங்குகளை வேட்டையாடுவது எவ்விதத்திலும் நியாயப்படுத்தக்கூடியதோ, ஏற்றுக்கொள்ளவோ கூடிய செயல் அல்ல.

நீரின்றி தவிக்கும் எந்தவொரு உயிரினத்திற்கும் நீர் புகட்டுவது மாபெரும் மனதாபிமானமாகும். ஆனால் நீர் புகட்டும் போர்வையில் அவற்றை நஞ்சூட்டி கொல்வது அரக்கச் செயலே அன்றி வேறில்லை. இந்த மனிதநேயமற்ற செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதில் உச்சபட்ச கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இவ்வரட்சி காலநிலையில் தண்ணீரின்றி அலையும் வனவிலங்குகளை வேட்டையாட மேற்கொள்ளப்படும் இச் சட்டவிரோத செயற்பாட்டில் பல குற்றச்செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அவற்றில் வனவிலங்கின் தண்ணீர் தேவையை நிறைவேற்றும் போர்வையில் நீரில் விஷம் கலந்து நஞ்சூட்டுதல், அதன் ஊடாக மயங்கி இறக்கும் வனவிலங்கை வேட்டையாடுதல், அவற்றின் இறைச்சியை யாத்திரை மேற்கொள்பவர்கள் உட்பட மக்களின் பாவனைக்காக சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட பல குற்றச்செயல்கள் குறிப்பிடத்தக்கன.

அதனால் இவ்வாறான குற்றச்செயலில் ஈடுபடுபவர்கள் சட்டத்தின் முன் ஆஜர்படுத்தப்பட வேண்டும். அதற்கு தேவையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் பொதுமக்கள் அளிக்க வேண்டும். அதன் ஊடாக இவ்விதமான குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக விரைவாகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருக்கும். அந்த சட்ட நவடிக்கைகள் இவ்வாறான குற்றச்செயல்கள் எதிர்காலத்தில் இடம்பெறுவதைத் தவிர்த்து கட்டுப்படுத்தக் கூடியதாக அமைய வேண்டும். அதுவே வனவிலங்குகளின் நலன் காப்பவர்களதும் சுற்றுச்சூழல் நேயர்களதும் வலியுறுத்தல் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# உலகத் தமிழ் வர்த்தக சங்கத்தின் சார்பில் சென்னையில் மருத்துவ விருது விழா

மருத்துவத்துறையில் சிறந்து விளங்கும் மருத்துவர்களுக்கு உலகத் தமிழ் வர்த்தக சங்கத்தின் சார்பில், அச்சங்கத்தின் தலைவர் செல்வக்குமார் தலைமையில் ஏழாம் ஆண்டு மருத்துவத்திற்கான விருது வழங்கும் விழா சென்னை கிண்டியில் உள்ள நட்சத்திர விடுதியில் நடைபெற்றது.

அவ்விழாவில் நாகாலாந்து ஆளுநர் இல. கணேசன் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு விருதுகளை வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்வில் யூராலஜி நிபுணர் மருத்துவர் நித்திஷ் ஜெயின், எலும்பியல் நிபுணர் மருத்துவர் விஜய் கிஷோர், அப்பல்லோ மருத்துவ தலைமை நிர்வாக அதிகாரி நவீன், மருத்துவர் வெங்கடாச்சலம், மருத்துவர் ஜோசப் ஜென்சிங், அன்னை அருள் மருத்துவ மேலாண் இயக்குனர், பல் மருத்துவர் கார்த்திகேயன், மருத்துவர் சுபபிரியா, மெரிடியன் மருத்துவமனை இயக்குனர் மருத்துவர் டேனியல், மருத்துவர் பவித்ரா, மருத்துவர் கௌஷிக் மற்றும் பலர் கலந்து கொண்டு விருதுகளை பெற்றனர்.

இந்நிகழ்வில் பாலாஜி மருத்துவக் பல்கலைக்கழக மருத்துவ இயக்குனர் டொக்டர் குணசேகரன், தமிழ்நாடு மருத்துவ பயிற்சி தலைவர் டொக்டர் சி எம் கே ரெட்டி, மற்றும் முன்னணி மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.







# அனுராதபுரத்தில் மின்னலுக்கு பலியான மூன்று சிங்களக் குடும்பங்களுக்கு பரோபகாரி தியாகேந்திரன் நிதியுதவி

அனுராதபுரம் மிகிந்தலை தம்மன்னாவ பிரதேசத்தில் கடந்த 11.08.2023 ஆம் திகதி மின்னல் தாக்கி சம்பவ இடத்திலேயே மூன்று குடும்பஸ்தர்கள் உயிரிழந்துள்ள சோகச்சம்பவம் இடம்பெற்றிருந்தது.

அப்பிரதேச வாவியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்களே இவ்வாறு மின்னல் தாக்கி பரிதாபமாக உயிரிழந்தவர்களாவர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான தர்மசிரி ரணதுங்க (வயது 43), மூன்று பிள்ளைகளின் தந்தையான எஸ். மஹிந்த குமார (வயது 45), மூன்று பிள்ளைகளின் தந்தையான சரத் சந்திரசிரி தினநாயக்க (வயது 46) ஆகிய மூன்று குடும்பஸ்தர்களே இவ்வாறு பரிதாபமான முறையில் உயிரிழந்தவர்களாவர்.

இந்நிலையில், உயிரிழந்த மூவரினதும் குடும்பங்களின் உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் தியாகி அறக்கொடை நிதியத் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன் உதவி வழங்கியுள்ளார்.

அதற்கமைய தியாகி அறக்கொடை நிதியத்தின் இணைப்பாளரும் ஸ்ரீ லங்கா மீடியா போரத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம். ரீ.எம்.பாரிஸ் மூலம் குறித்த குடும்பங்களின் நிலைமைகளை அவர் அறிந்து கொண்டார்.

அப்பிரதேசங்களுக்கு நேரில் சென்று அக்குடும்பங்களின் துயரத்தில் பங்கெடுத்துக் கொள்ளுமாறும் நிர்க்கதியாகியுள்ள அக்குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் வழங்குமாறும் கேட்டுக் கொண்ட தியாகி அவர்கள் மூன்று இலட்சம் ரூபாய் நிதியுதவியும் அனுப்பி வைத்தார்.

அதனையடுத்து அனுராதபுரத்திற்கு சென்ற ஊடகவியலாளர் எம்.ரீ.எம். பாரிஸ் இந்த நிதியுதவியை வழங்கினார். அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மானும் இதற்கான முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கியதுடன், அப்பிரதேச பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.





இதன் போது, இக்குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் உதவித்தொகை கையளிக்கப்பட்டது. இம்மனிதாபிமான உதவியினைப் பாராட்டிய பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், தியாகி ஐயாவின் சேவை இந்த நாட்டில் நிலையான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு சகலருக்கும் முன்னுதாரணமெனவும் குறிப்பிட்டார்.

இதன் போது, தியாகி அவர்களின் தாராள குணத்தை அக்கிராம மக்கள் வெகுவாகப் பாராட்டியுடன், அவருக்கு நீண்ட ஆயுள் வேண்டி பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டனர்.

தொடர்ந்தும் இவ்வாறான மனிதாபிமான உதவிகளை தாம் வழங்கத் தயாராகவிருப்பதாக தியாகி அறக்கொடை நிதியத்தலைவர் வாமதேவன் தியாகேந்திரன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிலவுப் பயணத்தில் சாதனையை நெருங்கி விட்டது இந்தியா!

நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்வதற்காக இஸ்ரோ அனுப்பிய சந்திரயான் 3 விண்கலத்திலிருந்து லேண்டர் வெற்றிகரமாக தனியாக பிரிந்தது. இதனையடுத்து நாளைமறுதினம் 23 ஆம் திகதியன்று மாலை நிலவில் இந்த லேண்டர் தரையிறங்க உள்ள நிலையில், தரையிறங்கும் நேரத்தில் சிறிய மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

எதிர்காலத்தில் செவ்வாய்க் கிரகத்திற்கு செல்வதெனில் பூமியிலிருந்து புறப்படுவதை விட, நிலவிலிருந்து போவதுதான் எளிது என விஞ்ஞானிகள் கணித்திருக்கிறார்கள். அதேபோல நிலவின் தென்துருவப் பகுதியில் நீர் இருக்கும் விஷயத்தை சந்திரயான் 1 கண்டுபிடித்த பின்னர் நிலவை ஆக்கிரமிப்பதற்கான போட்டி உலக நாடுகள் மத்தியில் அதிகரித்துள்ளது. ஏனெனில் நீரில் இருந்து ஹைட்ரஜனை பிரித்து அதனை எரிபொருளாகக் கொண்டு இலகுவாக செவ்வாய்க் கிரகத்துக்கு போய்விடலாம். எனவேதான் இந்த போட்டி ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவும் சந்திரயான் 3 விண்கலத்தை அனுப்பியுள்ளது. ஏற்கெனவே நடந்த தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு மீண்டும் அந்தத் தவறு நடக்காதவாறு இஸ்ரோ மிகச்சரியாக இந்த மிஷனை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் கடந்த ஜூலை மாதம் 14 ஆம் திகதி பூமியிலிருந்து ஏவப்பட்ட சந்திரயான் 3 விண்கலம் பூமியின் சுற்றுவட்டப்பாதையை கடந்து, தற்போது நிலவின் சுற்றுவட்டப் பாதையில் இருக்கிறது. கடந்த சில நாட்களாக இதன் தூரம் குறைக்கப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக நிலவுக்கு நெருக்கமாக இதை விஞ்ஞானிகள் கொண்டு வந்துள்ளனர்.



இதனையடுத்து கடந்த 17 ஆம் திகதி சந்திரயான் விண்கலத்திலிருந்து விக்ரம் லேண்டர் வெற்றிகரமாக பிரிக்கப்பட்டது. இது எதிர்வரும் 23 ஆம் திகதி நிலவில் தரை இறங்க இருக்கிறது. எனவே படிப்படியாக அதன் தூரம் குறைக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது லேண்டர் நிலவுக்கு குறைந்தபட்சமாக 25 கி.மீ தொலைவிலும், அதிகபட்சமாக 134 கி.மீ தொலைவிலும் சுற்றி வருகிறது. சந்திரயான் 3 விண்கலத்திலிருந்து விக்ரம் லேண்டர் பிரிந்த பின்னர் அதன் தூரம் இரண்டாவது முறையாக வெற்றிகரமாக குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு அடுத்தகட்டமாக நிலவில் விக்ரம் லேண்டர் தரையிறக்கப்படுவது மட்டுமே மிகுதியாக இருக்கிறது. நாளைமறுதினம் 23 ஆம் திகதி மாலை 5.45 மணிக்கு இது நிலவில் மெதுவாக தரையிறங்கும் என இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியிருந்த நிலையில் தற்போது இந்த நேரம் மாற்றப்பட்டிருக்கிறது.

## நாளை மறுதினம் தரையிறங்குகிறது சந்திரயான்!

அதாவது 23 ஆம் திகதி மாலை 5.45க்கு பதிலாக 6.04 மணியளவில் விக்ரம் லேண்டர் நிலவை தொடும். இதுவரை ரஷ்யா, அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகள்தான் நிலவின் தென்துருவத்தில் லேண்டரை பத்திரமாக தரையிறக்கியுள்ளன. அப்படி இருக்கையில், இந்தியா இந்த மிஷனில் வெற்றி பெற்றால் உலக அளவில் அது பெரும் சாதனையாக கொண்டாடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# 29 வருட சேவையிலிருந்து ஓய்வுபெற்ற சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ்

சமுர்த்திப் பிரிவில் 29 வருட சேவையை அண்மையில் (09.08.2023)நிறைவு செய்துள்ள சிரேஷ்ட தலைமைப்பீட முகாமையாளர் மருதமுனை ஏ.ஆர்.எம்.சாலிஹ், பயனாளிகளுக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றியுள்ளார். 1994.01.01ஆம் திகதி சமுர்த்தி முகாமையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டு 29 வருடங்கள் மனத்திருப்தியுடன் மக்கள் சேவை செய்யக் கிடைத்தமையை அவர் மகிழ்வுடன் தெரிவித்தர்.

22 வருடங்கள் தனது பிரதேச மக்களுக்கு சேவையாற்றக் கிடைத்தமை தனக்குக் கிடைத்த பேறென்று அவர் தெரிவித்தார். இவர் தனது பதவிக் காலத்தில் கல்முனை பிரதேச மக்களுக்கென கல்முனைக்குடியிலும், மருதமுனையிலும் சமுர்த்தி வங்கிகளை அமைத்துக் கொடுக்க முன்னின்று உழைத்துள்ளார்.

அதே போன்று நற்பிட்டிமுனை மக்களின் நன்மை கருதி அவர்களுக்கான தனியான சமுர்த்தி வங்கி உருவாக்கத்தில் தனது மேலதிகாரிகளுடன் கைகோர்த்து பெரும்பங்காற்றியுள்ளார். அவ்வங்கியின் முதலாவது முகாமையாளராகவும் செயலாற்றியுள்ளார்.



சமுர்த்தி உட்கட்டமைப்பு வதிகளை மேம்படுத்தும் திட்டத்தினூடாக புதிய வீதிகள், சிறிய பாலங்கள், வடிகான்கள் அமைக்கவும் பாடுபட்டுள்ளார். 70 இலட்சம் ரூபா நிதி ஓதுக்கீட்டில் நெசவு மாதிரி கிராம வேலைத்திட்டத்தினையும் செயற்படுத்தியுள்ளார்.ஆயிரக் கணக்கான சமுர்த்திக் குடும்ப மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக சிசுதிரிய மற்றும் சிப்தொற புலமைப்பரிசில் திட்டத்தினூடாக பல மில்லியன் ரூபா புலமைப் பரிசிலாக பெற்றுக் கொடுத்துள்ளார்.

பயனாளிக் குடும்பங்களின் வருமானத்தினை மேம்டுத்திக் கொள்ள சமுர்த்தி வங்கிகளின் ஊடாக பலகோடி ரூபாய்களை கடனாகப் பெற்றுக் கொள்ள வழிகாட்டல் செய்துள்ளார்.

பொதுமக்களோடு நல்லுறவினைப் பேணி நல்ல பல வழிகாட்டல் செய்து வருகின்றார்.

_பி.எம்.எம்.ஏ.காதர்
(மருதமுனை தினகரன் நிருபர்)

## மானுடவியல்

### சுந்தரர்



129

தேவார மூவர்" என்று சிறப்பிக்கப்படும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோருள் இறைவனைத் தோழமை உணர்வோடு திருப்பாட்டுக்கள் பாடிய வகையில் தமிழிசை உலகில் சிறப்பிடம் பெறுபவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளாவார்.

திருமுனைப்பாடி நாட்டுத் திருநாவலூரில் ஆதி சைவ குலத்தில் சடையனாருக்கும், இசைஞானியாருக்கும் கி.பி 694இல் மகனாகப் பிறந்தார் எனக் கூறப்படுகிறது. இவர் நம்பி ஆரூரர் என்றும் வழங்கப்படுகிறார். இவரை அந்நாட்டு அரசன் நரசிங்க முனையரையன் என்பவர் தத்தெடுத்துக் கொண்டார். பல கலைகளில் தேர்ச்சி பெற்று திருவெண்ணெய் நல்லூரில் வளர்ந்து வந்தார். திருமண வயது வந்தபோது இவருக்கு புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் மகளோடு உறுதி செய்யப்பட்டு திருமண ஏற்பாடு நடந்தது. அப்பொழுது சிவபெருமான் முதிய அந்தணர் உருவில் திருமணப் பந்தலில் தோன்றி "ஆரூரான் என் அடிமை" எனக்கும் அவருக்கும் ஒரு பெரும் வழக்குண்டு. அவ்வழக்குத் தீர்ந்தாலன்றி திருமணம் நடக்கக்கூடாது என்று திருமணத்தைத் தடுத்தார். அப்பொழுது சுந்தரர், "ஓர் அந்தணர் மற்றோர் அந்தணருக்கு அடிமையாதல் எவ்வாறு?" என்று எள்ளி நகையாடினார். அவ்வாறு இருந்தால் அதற்கு ஆதாரமாக தம் முன்னோர் எழுதித் தந்த அடிமையோலையைக் காட்டும்படி கூறினார். "அடிமைத் தொழில் செய்வதற்குரிய நீ ஓலையைப் பார்க்க உரியவன் அல்லன்" என்று அந்தணர் கூற சுந்தரர் அந்தணர் கையிலிருந்த ஓலையைப் பிடுங்கிக் கிழித்தெறிந்தார். இதனால் ஊர்ச்சபை கூட்டப்பட்டது. அவையின் முன் தத்தம் வழக்கைக் கூற, அவையினர் முதலில் நம்பவில்லை. பிறகு முதியவர், "இவன் கிழித்தது மூல வோலையின் படி, மூல ஓலை இதோ இருக்கிறது" என்று காட்டவும், அவையினர் சுந்தரர் அம்முதியவருக்கு அடிமையாக ஏவல் செய்யவேண்டும் என்று தீர்ப்பளித்தனர். சுந்தரர் முதியவரை நோக்கி, "ஓலையில் நீர் திருவெண்ணெய் நல்லூர் என்னும் இவ்வூரைச் சேர்ந்தவர் என்று குறித்துள்ளது. உம்முடைய இருப்பிடம் எது?" என்று கேட்க, "ஒருவரும் அறியீரோ?" என்று சொல்லி முதியவர், சுந்தரரையும் மற்றவர்களையும் அழைத்துச் சென்று திருவருட்டுறை என்னும் கோயிலின் உள்ளே சென்று மறைந்தார். அனைவரும் சிவபெருமானே முதியவர் வேடத்தில் வந்து சுந்தரரை ஆட்கொண்டவர் என்பதறிந்து வியந்தனர். (தொடர்)



கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# வாழ்வில் நல்லதையெல்லாம் தந்தருளும் வரலட்சுமி விரதம்

**அம்பாளைக் கொண்டாடக் கூடிய மாதம், ஆடி. மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என்று மகாவிஷ்ணு அருளினார். அதேபோல், 'மாதங்களில் நான் ஆடி' என்கிறாள் மகாசக்தி. அப்பேர்ப்பட்ட ஆடி மாதத்தை தொடர்ந்து வரும் மிக முக்கியமான விரதம் வரலட்சுமி விரதம்.**



ஆடி மாத அமாவாசை முடிந்ததும் வளர்பிறை தொடங்கும். இந்த வளர்பிறை நாளில், பௌர்ணமிக்கு முன்னதாக வரும் வெள்ளிக்கிழமையில் வருவதுதான் வரலட்சுமி விரதம்.

எந்த வீட்டிலெல்லாம் வரலட்சுமி விரத பூஜைகள் செய்யப்படுகிறதோ... அந்த வீட்டுக்கு மகாலட்சுமி வருவாள். வருவதுடன் வீட்டிலேயே இருந்து வாசம் செய்வாள். நம் இல்லத்தில் வாசம் செய்யும் மகாலக்ஷ்மி, சும்மா இருந்து விடுவாளா? நம்மையும் நம் கஷ்டங்களையும் பார்த்துக் கொண்டு விட்டுவிடுவாளா? இதுவரை இருந்த துக்கங்களையும் கஷ்டங்க ளையும் போக்கியருள்வாள் தேவி என்கிறது புராணம்.

முதல்நாளான வியாழக்கிழமையன்று, வீட்டைச் சுத்தப்படுத்துங்கள். பூஜையறையைச் சுத்தம் செய்யுங்கள். சுவாமி படங்களை துடைத்து, சந்தனம் குங்குமமிட்டு தயார் செய்து கொள்ளுங்கள். பூஜையறையில் ஏற்றப்படும் விளக்குகளையும், தாம்பாளங்களையும் நன்றாகத் தேய்த்து வைத்துக் கொள்ளுங்கள்.

எந்த பூஜை செய்வதாக இருந்தாலும் முதல் வணக்கமும் முதல் வழிபாடும் முதல்வன் விநாயகப் பெருமானுக்குத்தானே! எனவே, பிள்ளையாரை முதலில் வணங்கவேண்டும். 'அப்பா, பிள்ளையாரப்பா. இந்த வரலட்சுமி பூஜையை உன்னை வணங்கிவிட்டுத்தான் ஆரம்பிக்கிறேன். நீதான் பூஜை நல்லபடியா நடக்க துணை இருக்கணும்' என்று வேண்டிக்கொள்ளுங்கள். அவ்வளவுதான். பூஜைக்கு அரணாக இருந்து அருளுவார் பிள்ளையாரப்பன்.

அலம்பி வைத்த தாம்பாளத்தை எடுத்துக்கொள்ளுங்கள். பூஜையறையில் கோலமிடுங்கள். இன்னொரு கோலமிட்டு, அதன் மேல் தாம்பாளத்தை வைத்துக்கொள்ளுங்கள். அதில், பச்சரிசியைப் பரப்பிவைத்துக் கொள்ளுங்கள். அரிசியின் மீது கலசத்தை வைக்கவும்.

பழங்கள், வெற்றிலை, பாக்கு, மஞ்சள், குங்குமம் முதலான மங்கலப் பொருட்களை வைக்கவேண்டும். மாதுளை, ஆரஞ்சு, விளாம்பழம், திராட்சை, மாம்பழம் முதலான பழங்களையும் லட்டு அல்லது வேறு ஏதேனும் இனிப்பு, தயிர், தேன், நெய், கற்கண்டு, கொழுக்கட்டை, பசும்பால் முதலானவற்றை நைவேத்தியத்துக்கு வைத்துக் கொள்ளவேண்டும்.

வீட்டு வாசலில், அதாவது வீட்டு நிலைவாசலில் நின்றுகொண்டு, வெளிப்பகுதியைப் பார்த்து, கற்பூர ஆராதனை காட்டவேண்டும். 'மகாக்ஷ்மியே. எங்கள் குலவிளக்கே. எங்கள் வம்ச விருட்சமே. கருணை கொண்டவளே... எங்கள் வீட்டுக்கு வா தாயே' என்று அவளை, தேவியை, லட்சுமியை, மகாலக்ஷ்மியை அழையுங்கள்.

அழைத்தால் வராமலா இருப்பாள் அன்னை? வந்துவிட்டாள். இப்போது பூஜையறைக்குச் சென்று, கலசத்துக்கு எதிரே அமர்ந்துகொண்டு, ஆவாஹனம் செய்து மகாலக்ஷ்மியை மனதார வேண்டுங்கள். கலசத்துக்கு பூக்களாலும் குங்குமத்தாலும் அர்ச்சனை செய்யுங்கள். குளிரக்குளிர பூஜைகள் செய்யுங்கள். ஸ்தோத்திரம் சொல்லுங்கள். லலிதா சகஸ்ர நாமம் பாராயணம் செய்யுங்கள்.

இதையடுத்து, நோன்புக்கயிறை கும்பத்தின் மீது அதாவது கலசத்தின் மீது சாற்றுங்கள். லட்சுமி அஷ்டோத்திரம் சொல்வது விசேஷம். தனம், தானியம் முதலான ஐஸ்வரியங்களை பெருக்கும். சுபிட்சத்தைத் தந்தருளும். 108 போற்றிகளைச் சொல்லி, மகாலட்சுமித் தாயாரை ஆராதனை செய்யுங்கள். 'தாயே, எங்கள் வீட்டில் எல்லா செல்வங்களையும் தந்து, எங்களை இன்னல்களில் இருந்து காத்தருளம்மா' என்று மனமுருகி பிரார்த்தனை செய்யுங்கள்.

அடுத்து, பூஜையை நிறைவு செய்யும் தருணம்.

உங்கள் வீட்டில் உள்ள மூத்த சுமங்கலிகள் வீட்டில் இருந்தால், அவர்களுக்கு பிரசாதங்களை வழங்குங்கள். பிரசாதம் கொடுத்துவிட்டு, அவர்களை நமஸ்கரியுங்கள். பிறகு, நோன்புச் சரடை கையில் கட்டிக் கொள்ளுங்கள்.




# 'சிங்கத்திற்கு (ஆவணிக்கு) இணையான மாதமும் இல்லை சிவபெருமானைவிட மேம்பட்ட இறைவனும் இல்லை'

தமிழ் மாதங்களில் ஆவணி ஐந்தாம் மாதமாக வருகின்றது. சூரியனை அதிபதியாகக் கொண்ட சிம்ம ராசியில் சூரிய பகவான் சஞ்சரிக்கும் காலமே ஆவணி மாதம் என்கின்றன ஜோதிட நூல்கள்.

'சிங்கத்திற்கு (ஆவணிக்கு) இணையான மாதமும் இல்லை சிவபெருமானைவிட மேம்பட்ட இறைவனும் இல்லை' என அகத்தியர் ஆவணி மாதத்தை சிறப்பித்துக் கூறியுள்ளார்.

ஆவணி மாத சிறப்புகள் பற்றி இப்பதிவில் காண்போம்.

ஆவணி மாதத்தின் சிறப்பு பெயர்

சிரவண நட்சத்திரம் என்று வடமொழியில் அழைக்கப்படும் திருவோணத்தில் பௌர்ணமி நாள் வருவதால் இது "சிரவண மாதம்" என்றும் சிறப்பிக்கப்படுகிறது. ஆவணியானது தமிழ் சூரிய மாதத்தில் "சிங்க மாதம்" என்றும் அழைக்கப்படுகிறது. இதனால் ஆவணியானது மாதங்களின் அரசன் என்ற சிறப்பினைப் பெறுகிறது.

**ஆவணி மாத திருவோண நட்சத்திரம்**

மகாவிஷ்ணு என்ற நெடிய உயர்ந்த தெய்வம், வாமனன் என்ற குட்டையான வடிவு கொண்டு பூமியை தன் காலடியால் அளக்க அவதரித்தது இந்த ஆவணி மாத திருவோண நட்சத்திரத்தில் தான் என்பது சிறப்பிற்குரியதாகும்.

**ஆவணி மாதம் சிவபெருமானுக்கு உகந்த மாதமாகும்**

சிவபெருமானின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு ஏற்ற மாதம் ஆவணியாகும். இந்த மாதம் முழுவதும் சிவனின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக பக்தர்கள் தவமிருந்து தினமும் சிவலிங்கத்திற்கு பூஜை செய்கின்றனர். இதனால் தான் இம்மாதத்தில் கூடுதலாக பல பூஜைகளும், பிராத்தனைகளும், வழிபாடுகளும் செய்யப்படுகின்றன.

**திருவிளையாடல் நிகழ்வுகள்**

கருங்குருவிக்கு உபதேசம், நாரைக்கு முக்தி, தருமிக்கு பொற்கிழி, வளையல் விற்ற லீலை, புட்டுக்கு மண் சுமந்த லீலை, நரியை பரியாக்கியது போன்ற திருவிளையாடல் நிகழ்வுகளை மக்கள் விழாக்களாகக் கொண்டாடுகின்றனர்.

பகவான் கிருஷ்ணனின் அவதாரம்

பகவான் கிருஷ்ணன், இந்த ஆவணி மாதத்தில் அஷ்டமி நட்சத்திரத்தில் பூமியில் அவதரித்தார். கிருஷ்ணர் அஷ்டமியில் பிறந்து இந்த நட்சத்திரத்துக்கு ஒரு ஏற்றம் தந்துள்ளார்.

**சதுர்த்தி தினம்**

ஆவணி மாதத்தில் வரும் வளர்பிறை சதுர்த்தி நாளில் தான் விநாயகர் அவதரித்தார். ஆவணி மாதத்தில் வரும் சங்கடஹர சதுர்த்தியை மகா சங்கடஹர சதுர்த்தியென வழிபடுகின்றனர். இந்நாளில் விநாயகரை வணங்கி, சந்திர தரிசனம் செய்தால் வாழ்வில் ஏற்படும் சங்கடங்கள் நீங்கும் என்பது ஐதீகம்.

**சபரிமலை ஐயப்பன் கோவில் நடை திறப்பு**

பிரசித்தி பெற்ற சபரிமலை ஐயப்பன் கோவிலில் ஆண்டுதோறும் மடை திறக்கப்பட்டு, பல்வேறு பூஜைகள், வழிபாடுகள் நடைபெறும். இதில் ஆவணி மாத பூஜையும் ஒன்றாகும்.

**ஆண்டின் முதல் மாதம்**

கேரளாவில் ஆவணி மாதமே ஆண்டின் முதல் மாதமாகக் கருதப்படுகிறது.

**விழாக்கள்**

ஆவணியில் விநாயக சதுர்த்தி, மகா சங்கடஹர சதுர்த்தி, கிருஷ்ண ஜெயந்தி, ஓணம் போன்ற விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

இளையான்குடி மாறநாயனார், குலச்சிறை நாயனார், திருநீலகண்ட நாயனார், அதிபத்த நாயனார் ஆகியோர்களின் குருபூஜை விழாக்கள் இம்மாதத்தில் கொண்டாடப்படுகின்றன.

**விரதங்கள்**

ஆவணி மூலம், ஆவணி அவிட்டம், வரலட்சுமி விரதம், ஆவணி ஞாயிறு, புத்ரதா ஏகாதசி, காமிகா ஏகாதசி போன்ற வழிபாட்டு முறைகளும் இம்மாதத்தில் கடைப்பிடிக்கப்படுகின்றன.

விரதங்களை பின்பற்றுவதன் மூலம் செல்வச் செழிப்பு, காரிய வெற்றி, புத்திக்கூர்மை, நன்மக்கட்பேறு, தொழில்வளம் ஆகியன பெருகும். உள்ள மேன்மை, உடல் ஆரோக்கியம் கிட்டும்.

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 50



உறுதியில்லாத மனிதன் பிறரைச் சார்ந்தே இருப்பான். தன் புத்தியையும் நம்ப மாட்டான்; தன் முடிவிலும் நிலையாக இருக்க மாட்டான். உறுதியான நிலைப்பாடு இல்லாமலும். ஒருமுகப் படுத்திய மனநிலைமை இல்லாமையினாலும் மனிதன் பலவிதமான இன்னலுக்கு ஆளாகிறான். இதனால், தன் ஆற்றல் முழுவதையும் இழக்கிறான். எந்த ஒரு செயலிலும் வெற்றியடைய, ஒருமுகப் படுத்தப்பட்ட ஆற்றல் மிகவும் இன்றியமையாதது ஆகும்.

வெற்றி அடைவதில் உறுதி கொள்ள வேண்டும். தெளிவான ஒரு முடிவு எடுத்த பின் அதை நிறைவேற்றுவதில் நம் ஆற்றல் முழுவதையும் செலவிட வேண்டும். எந்த ஒரு செயலையும் முடிவெடுப்பதற்கு முன் தனது நலம் விரும்பிகள். நண்பர்கள். அறிவு ஜீவிகள் என் பலரிடமும் எத்தனை முறை வேண்டுமானாலும் ஆலோசிக்கலாம். ஆனால் முடிவெடுத்த பின்னர், தயங்காமல் அச்செயலை முடித்து வெற்றி காண்பது ஒன்றே தன் முழு மூச்சாகக் கொள்ள வேண்டும். தனது தகுதி. தன்னுடைய திறமை ஆகியவற்றின் அடிப்படையில் தன்னம்பிக்கையுடன் செயல் புரிந்தால் வெற்றி நிச்சயம்.

இவ்வாறு தாம் மேற்கொண்ட செயல்களை துணிச்சலுடனும், கொள்கை உறுதியுடனும் தன்னம்பிக்கையுடனும். ஆண்மையுடனும் கடமையாகும். அதன் பலனை ஆண்டவனிடத்தில் விட்டு விட்டு செயல்படுத்துவது மட்டுமே நாமாக வேண்டும். கடவுள் நிச்சயம் நமக்கு முன்னேற்றத்தை தருவார். நாம் விரும்பிய வாழ்க்கையை நமக்குத் தருவார். சுயநலத்துடன் தனக்காக மட்டுமே வாழ்வது என்பது. மனித வாழ்க்கைக்கு உகந்தது ஆகாது. சுயநலத்துடன் பிறந்து, சுய நலத்துடன் வளர்ந்து, தான் மட்டுமே உண்டு. உடுத்தி வாழ்பவன் வாழ்க்கையில் வெற்றி பெற்றது போல் தெரிந்தாலும், உண்மையில் அவன் தோற்றுப் போனவனே ஆவான்.

மற்றவர்களுக்கு உதவி புரிந்து வாழ்வதே. இப்படைப்பின் நோக்கமாகும். நீர்கடலிருந்து நீராவியாகி, மழை தரும் மேகம் உருமாறி தவித்த பூமிக்கு மழையாக பொழிந்து, பிறர் நலம் பேணுகிறது. பூமியில் பெய்த மழைநீர் நதிகளாகி, கடலின் மகத்துவத்தை உணர்ந்து அதனுடன் சங்கமிக்கின்றன. மற்றவர்களை இன்பமூட்டவே காற்றும் செயலாற்றுகிறது. சூரியன். சந்திரன். நக்ஷத்திரங்கள் அல்லும் பகலும் ஒளிவீசுவதும் தனக்காக அல்ல: பிறருக்காக இவ்வாறு இயற்கைகள் யாவும், பிறர் நலம் பேணும் போது மனிதன் மட்டும் சுயநலத்துடன் செயல்படுவது தகுமா? (தொடரும்)







வரலாற்று சிறப்பு மிக்க முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகை சமேத முன்னைநாதர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தின் (2023.08.15) முன்னேஸ்வர ஊரவர் மாலை நேர திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பல பக்தர்கள் இதில் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுக் கொண்டனர்.
(உடப்பு குறூப் நிருபர்)

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19788) அசுவினி நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – கேது

**19789) பரணி நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – சுக்கிரன்

**19790) கிருத்திகை நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – சூரியன்

**19791) உரோகிணி நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – சந்திரன்

**19792) மிருகசீரிடம் நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – செவ்வாய்

**19793) திருவாதிரை நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – இராகு

**19794) புனர்பூசம் நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – குரு (வியாழன்)

**19795) பூசம் நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – சனி

**19796) ஆயில்யம் நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – புதன்

**19797) மகம் நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – கேது

**19798) பூரம் நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – சுக்கிரன்

**19799) உத்திரம் நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – சூரியன்

**19800) அசுதம் நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – சந்திரன்

**19801) சுவாதி நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – இராகு

**19802) விசாகம் நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – குரு (வியாழன்)

**19803) அனுடம் நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – சனி

**19804) கேட்டை நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – புதன்

**19805) மூலம் நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – கேது

**19806) பூராடம் நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – சுக்கிரன்

**19807) உத்திராடம் நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – சூரியன்

**19808) திருவோணம் நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – சந்திரன்

**19809) அவிட்டம் நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – செவ்வாய்

**19810) சதயம் நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – இராகு

**19811) பூரட்டாதி நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – குரு (வியாழன்)

**19812) உத்திரட்டாதி நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – சனி

**19813) ரேவதி நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – புதன்

**19814) சித்திரை நட்சத்திரத்துக்குரிய அதிபதி தெய்வம் யார்?** – செவ்வாய்

## USA ஜனாதிபதி...

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில் குடியரசு கட்சி சார்பில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விவேக் ராமசாமி போட்டியிட உள்ளதாக அறிவித்துள்ளார்.

குடியரசுக்கட்சியில் இருந்து வேறு எவரும் தன்னை எதிர்த்து போட்டியிடக்கூடாது என ட்ரம்ப் ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில், இந்திய வம்சாவளியை சேர்ந்த விவேக் ராமசாமி போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளமை அமெரிக்க அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான பரபரப்பான சூழ்நிலையில் போட்டியிடும் இந்திய வம்சாவளி விவேக் ராமசாமி என்பவரை தற்போது டெஸ்லா நிறுவுனர் எலான் மாஸ்க் வெளிப்படையாக ஆதரித்து, இரண்டாவது நாளாக டுவிட்டரில் பதிவு செய்துள்ளார்.

விவேக் ராமசாமி பேசுவதில் ஆழமான கருத்திருப்பதாக குறிப்பிட்டிருந்த எலான் மாஸ்க், தற்போது தனது நம்பிக்கையை அல்லது கொள்கையை தெளிவாக எடுத்துரைத்துள்ளார் எனவும் எலான் மாஸ்க் தனது சமூக ஊடக பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். மருந்து நிறுவனத்தை நடத்தி வரும் 37 வயதான விவேக் ராமசாமி சிறந்த தொழிலதிபர் என்பதுடன், அவரின் சொத்து மதிப்பு ரூ.4,140 கோடி என்று கூறப்படுகின்றது.

அமெரிக்க தேசிய வாதத்தில் தீவிர நம்பிக்கை கொண்ட இவருக்கு குடியரசு கட்சியில் நல்ல செல்வாக்கு இருப்பதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## ரஷ்ய விண்கலம்...

போட்டியாக இந்த ரஷ்ய விண்கலம் அனுப்பப்பட்டதுடன் சந்திரயான்3 விண்கலம் 23ஆம் திகதி நிலவில் தரையிறங்க திட்டமிட்டிருந்த நிலையில் அதற்கு முன்பதாக 21ஆம் திகதி லூனா 25 விண்கலத்தை நிலவில் தரையிறக்க ரஷ்ய விஞ்ஞானிகள் தீர்மானித்திருந்தனர்.

சுமார் 47 ஆண்டுகளுக்குப் பின் நிலவுக்கு ரஷ்யா அனுப்பிய லூனா 25 விண்கலம் கடந்த 17ஆம் திகதி வெற்றிகரமாக நிலவின் சுற்றுவட்டப் பாதைக்குள் பிரவேசித்தது.

அதனையடுத்து அதன் சுற்றுப்பாதையை குறைக்கும் பணிகள் நடைபெற்றது. அதன்படி லூனா 25 விண் கலத்தின் உயர குறைப்புகளை விஞ்ஞானிகள் மேற்கொண்டு வந்தனர்.

இத்தகைய பின்னணியில் லூனா 25 விண்கலத்தில் திடீரென்று தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதால் நிலவில் தலையிறக்குவதற்கு முன்னரான சுற்றுவட்டப் பாதையில் விண்கலத்தை செலுத்துவதில் சிக்கல் ஏற்பட்டது.

இதனால் இறுதிக்கட்ட சுற்றுப்பாதையை குறைப்பதில் பின்னடைவு ஏற்பட்டது. விண்கலத்தை திட்டமிட்டபடி அடுத்த சுற்றுப்பாதைக்கு அனுப்ப முடியாமற் போனது. தற்போதைய பாதையிலேயே ரஷ்ய விண்கலம் சுற்றி வந்தது. இந்நிலையில், ரஷ்யாவின் லூனா 25 விண்கலம் நிலவில் மோதியதாக ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. நேற்று முன்தினம் லூனா 25 விண்கலத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நிலவில் மோதிய தகவல் வெளியாகியுள்ளது. லூனா 25 விண்கலத்துடன் மீண்டும் தொடர்பை ஏற்படுத்த ரஷ்ய விஞ்ஞானிகள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை இந்திய கப்பல்...

மேம்பாட்டுக் குழுமக் கூட்டம் நேற்று நடந்தது. மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்த சோனவால் தலைமையில் நடந்த கூட்டத்தில் கடலோர மாநிலங்களின் துறைமுக அமைச்சர்கள், மத்திய, மாநில அரசுகளின் அலுவலர்கள், கடல்சார் வாரிய அலுவலர்கள் பங்கேற்றனர்.

தமிழகத்தின் சார்பில் இக்கூட்டத்தில் பங்கேற்ற தமிழக பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கூறியதாயதாவது;

தமிழகம் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதியில் நுழைவாயிலுடன் கூடிய தனித்துவமான கடற்கரையைக் கொண்டுள்ளது. அதன் கடல்சார் மற்றும் துறைமுகத் துறையைவலுப்படுத்த உறுதி பூண்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் சாகர்மாலாதிட்டத்தின் கீழ், மானியமாக தமிழக கடல் சார் வாரியத்துக்கு ரூ.120 கோடி நிதியுதவி அளித்த மத்திய அமைச்சர், மத்திய அரசுக்கு நன்றி.

இந்தியாவை சர்வதேச அளவில் இணைக்கும் வகையில் இலங்கைக்கு தொடங்கவுள்ள முதன்மையான படகு சேவைக்கு வெளியுறவு அமைச்சகம் பச்சைக்கொடி காட்டியுள்ளது. இது நாடுகளுக்கிடையே உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்தை அதிகரிப்பது மட்டுமல்லாமல், வர்த்தகத்தையும் மேம்படுத்தும்.

இப்படகு சேவையை விரைவில் தொடங்குவதற்கு நாகப்பட்டினம் துறைமுகம் தயாராகி வருகிறது.ராமேசுவரம் மற்றும் தலைமன்னார் இடையே படகு சேவையை புதுப்பிப்பதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1980ம் ஆண்டு வரை செயல்பாட்டில் இருந்த இந்தியா இலங்கை இடையிலான பாரம்பரிய கடல்வழிகளை புதுப்பிக்கும் வகையில் இத்திட்டம் இருக்கும்.

தமிழகத்தின் மத்தியில் உள்ள தொழிற்சாலை பகுதிகளுக்கு தேவையான சரக்குகளை கையாளக் கூடிய வகையில், கடலூர் பகுதியில் பெரும்திறன் கொண்ட பசுமைவளத் துறைமுகத்தை உருவாக்கவும், தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 10 மில்லியன் மெட்ரிக்டன் சரக்குகளை இத்துறைமுகம் கையாளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அரசின் தேசிய....

கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், நாட்டில் பொருளாதார மற்றும் சமூக அழிவு நடைபெற்று வருகின்றது. சுமார் 60 ஆயிரம் குடும்பங்கள் சுத்தமான குடிநீரை இழந்துள்ளன.

வறட்சி காரணமாக இலட்சக்கணக்கான ஹெக்டெயர் விவசாய நிலங்கள் அழிவடைந்துள்ளன. விவசாயிகள் உட்பட ஒட்டுமொத்த உழைக்கும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

5000 பாடசாலை ஆசிரியர்களும் ஏராளமான மருத்துவ நிபுணர்களும் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர் . இதனால், மருத்துவமனைகள் மூடப்பட்டு அறுவைச் சிகிச்சைகள் கூட இரத்துச் செய்யப்பட்டுள்ளன .

இந் நி லை யி லி ருந் து நாட்டைக் காப்பாற்றுவதற்கு தேசிய ஒருமைப்பாடு மற்றும் இணக்கப்பாடு கொண்ட தேசிய வேலைத்திட்டமொன்று அவசியம்.

வீழ்ந்த நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கான வேலைத்திட்டம் அரசிடம் இருந்தால், எதிர்க்கட்சியாக அனைவரும் அதிகபட்ச ஆதரவை வழங்க விரும்பினாலும் அவ்வாறான வேலைத்திட்டமொன்று தற்போதைய அரசிடம் இல்லை .

அரசு இந்த அரசியல் சூதாட்டங்களைத் தவிர்த்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.

இதற்கான அறிவு அரசுக்கு இல்லையென்றால், எதிர்க்கட்சியிடம் இதற்கு தேவையான அறிவையும், மனித வளத்தையும் வழங்க விரும்புகின்றோம்.

பதவிகளுக்கு அடிமைப்பட்டு நாட்டையும் மக்களையும் காட்டிக்கொடுக்க நாம் தயாரில்லை. இது போன்ற தேசத்துரோகச் செயல்களை நீங்கள் செய்ய விரும்பினால், வேறு யாரையாவது பார்த்து க்கொள்ளுங்கள் என்றார்.

## இலங்கை இந்திய....

கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்திய உறவுகளின் பரிணாமம் வாய்ப்புகளும் சவால்களும் என்பது குறித்து அவர் உரையாற்றினார்.

பொருளாதாரம், வலுசக்தி, கலாசாரம், பாதுகாப்பு மற்றும் இந்து சமுத்திரத்தில் பிராந்திய இயக்கவியல் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பின் முக்கிய விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தியுள்ளார்.

பல ஆண்டுகளாக இருநாடுகளினதும் உறவுகள் எவ்வாறு பரிவர்த்தனை கட்டத்திலிருந்து விசேட மானவையாக மாறியுள்ளன என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர் சமீபத்தில் கைச்சாத்திடப்பட்ட முயற்சிகளில் படிப்படியான முன்னேற்றத்தை காண்பதன் மூலம் எவ்வாறு இருநாடுகளிற்கும் இடையிலான உறவுகளை விசேடமானவையாக மாற்ற வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட வேளை இந்தியா தக்க தருணத்தில் ஆற்றிய உதவிகளுக்காக நன்றியை தெரிவித்துள்ள மிலிந்த மொரகொட இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

## நாம் 80 வீதமான...

என தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்த கருத்துத் தொடர்பில் அவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,..

இந்தியாவில் தேர்தல் வரப்போகிற நிலையில் அரசியல் நோக்கங்களுக்காக கச்சதீவு தொடர்பில் கருத்துக்கள் எழுவது வழமையான செயல்பாடு.

1974 ஆம் ஆண்டு இருநாட்டு மீனவர்களும் இலங்கையிலும் இந்தியாவிலும் கடற்தொழிலில் ஈடுபடலாம் என ஒரு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ் உடன்படிக்கை மூலம் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் பெரிய ஆறு மீன்பிடி படகுகள் இந்தியா கடற்பரப்புகள் சென்று தொழிலில் ஈடுபட்டு வந்தன.

1974 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை 1976 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட நிலையில் இலங்கை மீனவர்கள் இந்தியக் கடற்பரப்புக்குள்ளும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள்ளும் நுழைய முடியாது என உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த உடன்படிக்கை மூலம் கச்சதீவு கடற்பரப்பிலிருந்து இந்தியா வெளியேறிய நிலையில் இந்தியா மீனவர்களின் மீன்பிடி வலைகளை உலர்த்துவதற்கும் கச்சதீவு அந்தோணியார் திருவிழாவில் பங்குபற்றுவதற்கும் தடை ஏற்படுத்தப்படுவதில்லை என தீர்மானிக்கப்பட்டது.

1976 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மூலம் கச்சதீவு எமக்குரிய கடற் பரப்பாக அங்கீகரிக்கப்பட்ட நிலையில் கச்சதீவைக் காட்டிலும் 80 மடங்கு கடல் விளை நிலங்களை நாம் இழக்க வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டது.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டிய மீன்பிடியினால் வடக்கு கடற் தொழிலாளர்கள் தொடர்ச்சியாகப் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

ஆனால் இந்திய தரப்பில் கூறும் போது மீன்பிடிக்கச் சென்ற இந்திய மீனவர்களை சிங்கள இராணுவம் மற்றும் சிங்களக் கடற்படை கைது செய்வதாகப் பிரசாரம் செய்யப்படுகிறது.

நான் இவர்களுடைய பிரசாரத்தின் உண்மை நிலை தொடர்பில் பலமுறை இந்திய மத்திய அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் தெரிவித்துள்ளேன். ஆனால் வடபகுதியில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் நாடு முதலமைச்சருக்கும் இந்திய பிரதமருக்கும் தமிழ்நாட்டில் இருந்து இலங்கை கடற்பரப்புக்குள் ஆத்துமீறி தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் இலங்கையில் கைது செய்யப்படுகிறார்கள் என்ற உண்மையை அழுத்தமாக தெரிவிக்க வேண்டும்.

ஆகவே கச்சதீவு விவகாரம் தேர்தல்கள் வரும் போது பேசுபொருளாக மாறுவது தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேரில் உண்மை நிலையை தெரிவிக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## யால தேசிய....

விரைவாக பெற்றுக்கொள்ளும் முறைமையொன்றை தயாரிப்பது தொடர்பிலும் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார்.

வறண்ட காலநிலையினால் வற்றிப்போன நீர் கிணறுகளுக்கு நீர் வழங்கும் நிகழ்ச்சியிலும் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மற்றும் காணி மற்றும் சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

## மாணவன் கிளிநொச்சியிலுள்ள...

தற்கொலை செய்து கொண்டுள்ளதாக கிளிநொச்சி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி மாணவர் கடந்த 2021ஆம் ஆண்டு கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றவர் என தெரிவிக்கப்படுகிறது.

உள ரீதியான பாதிப்பின் காரணமாக மேற்படி மாணவர் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என பிரதேச வாசிகள் தெரிவித்துள்ள நிலையில், அவரது சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

தற்கொலை செய்து கொண்டுள்ள இந்த மாணவரின் பெற்றோர்கள் இருவரும் ஆசிரியர்கள் என்றும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் கிளிநொச்சி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## நல்லூர் ஆலய...

போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளதுடன் காவல்துறையினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று (21) ஆரம்பிக்கப்படும் நிலையில் நேற்று (20) காலையில் இருந்து நல்லூர் ஆலய சுற்று வீதிகளில் போக்குவரத்து தடை ஏற்படுத்தப்பட்டு செப்டம்பர் 16ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே திறந்து விடப்படும் என யாழ். மாநகர சபை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நல்லூர் ஆலய சுற்று வீதிகள் மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ். மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து யாழ். நகரை அடைய முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை நல்லூர் கந்தசுவாமி ஆலய இரதோற்சவம் மற்றும் சப்பர திருவிழாக்களின் போது கச்சேரி நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. நல்லூர் ஆலய சுற்று வீதிகளில் வசிப்பவர்கள் வாகனங்களை உள்ளே கொண்டு செல்ல யாழ் மாநகர சபையினால் நிபந்தனையுடனான விசேட அனுமதி அட்டை வழங்கப்பட்டுள்ளது.

நல்லூர் ஆலய வெளி வீதியைச் சூழ ஆலய நிர்வாகத்தினரால் சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் மாநகர சபையின் நீர் விநியோக வண்டி மற்றும் கழிவகற்றும் வண்டியை தவிர எக்காரணம் கொண்டும் வாகனங்கள் உட்செல்ல முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## SLTB பஸ்களில்...

ஊழியர்களால் மேற்கொள்ளப்படும் மோசடிகளே இ.போ.சபை நட்டமடைய முக்கிய காரணம் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த மோசடிகளை கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இ.போ.ச வருமானத்தில் ஒரு பகுதியை சாரதிகளும் நடத்துனர்களும் பகிர்ந்து கொள்வதாகவும், இது அன்றாட நடவடிக்கை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இதன் மூலம் இ.போ.ச நாளொன்றுக்கு பெற வேண்டிய 100 இலட்சம் ரூபாவை சாரதிகளும் நடத்துனர்களும் பகிர்ந்து கொள்கின்றனர் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இ.போ.ச பேருந்தில் ஏறிய பின்னர் பயணச்சீட்டு பெற்றுக் கொள்ளுமாறும், பயணச்சீட்டு கிடைக்காவிட்டால் புதிய முறைமையின் ஊடாக முறைப்பாடு செய்யுமாறும் போக்குவரத்து அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சுற்றுலாத்துறையில் ...

குழுமத்தின் அதி சொகுசு ஹோட்டலான (Hilton Yala Resort) ஹோட்டலை நேற்று முன்தினம் (19) பிற்பகல் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யால தேசிய பூங்காவிற்கு நாளாந்தம் பெருந்தொகையான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதால், அவர்களை இலக்கு வைத்து இப்பிரதேசத்தை பரந்தளவான அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

இன்று இந்த யால பிரதேசத்தில் உயர்தர சொகுசு ஹோட்டலை திறந்து வைப்பது மகிழ்ச்சியளிக்கிறது. அதிக நுகர்வுத் திறன் கொண்ட சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்க முடியும் என்பதோடு, முன்னேற்றத்திற்கான வாய்ப்பும் உருவாகும். அதற்காக, மெல்வா மற்றும் ஹில்டன் குழுமத்திற்கு நன்றி தெரிவித்தார்.

யால பிரதேசத்தில் சிதுல்பவ்வ மற்றும் ஆகாச சைத்திய என்ற இரண்டு புராதன வழிபாட்டுத் தலங்கள் இருந்துள்ளன. அவை இங்கிருந்த செழுமையையும் ஒற்றுமையையும் பிரதிபலிக்கின்றன.

சுற்றுலாத்துறையை ஊக்குவித்து அதை முன்னோக்கி கொண்டு செல்வதே எமது நோக்கமாகும். அதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமானது.

இந்த யால பிரதேசத்தை சுற்றுலா பிரதேசமாக அபிவிருத்தி செய்யும் போது ஒரு வலயமாக அபிவிருத்தி செய்ய வேண்டும். உடவலவ, குமன போன்ற பகுதிகள் ஒன்றோடொன்று தொடர்புபட்டதாகவே அமைந்துள்ளன. உடவலவ யானைகள் தடம், குமன வரையில் நீண்டுச் செல்கிறது.

மேலும், இப்பகுதிகளுக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான வசதிகளையும் மேம்படுத்த வேண்டும். இந்த யால பிரதேசத்தின் அபிவிருத்திக்கான திட்டத்தை முன்வைக்குமாறு வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் மற்றும் சுற்றுலா அமைச்சர் மற்றும் அந்த இரண்டு அமைச்சுகளின் அதிகாரிகளிடமும் நான் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## சம்பளமில்லாத...

சேவை தேவைகள் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு 05 வருட சம்பளமில்லாத விடுமுறையை வழங்குவதற்கு அரசாங்கம் விசேட சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையின்படி, நீதித்துறை அதிகாரிகளின் சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறையை கோரும் விண்ணப்பங்களை இந்த ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை பரிசீலிக்க முடியாது என்று நீதிச் சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நீதிச் சேவை ஆணைக்குழு அனைத்து நீதிபதிகள் மற்றும் நீதவான்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது.

## ஜனாதிபதி... ரணில்...

அத்துடன் சிங்கப்பூர் பிரதமர் லீ சியேன் லுங்,சிங்கப்பூர் பாதுகாப்பு அமைச்சர் நெங் ஹெங் ஹென், நிலைபேறு மற்றும் சுற்றாடல் அமைச்சர் கிரேஸ் பூ ஹாய் இயன் ஆகியோருடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளார்.

பரிஸ் உடன்படிக்கையின் 6ஆவது உறுப்புரை, சர்வதேச கார்பன் வர்த்தகத்தின் கீழ் பசுமை வீட்டு வாயு வெளியேற்றத்தை மட்டுப்படுத்தும் நோக்கத்துடன் குறைந்த செலவில் ஒத்துழைப்புக்களை பரிமாறிக் கொள்ள இரு நாடுகளுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சிங்கப்பூர் பிரதமருக்கும் இடையிலான கலந்துரையாடலின் பின்னர் பெரிஸ் உடன்படிக்கைக்கு அமைவாக கார்பன் சீர்ப்படுத்தல் தொடர்பில் இலங்கை மற்றும் சிங்கப்பூர் அரசாங்கங்களுக்கு இடையில் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க ஆகியோரும் ஜனாதிபதியுடன் இந்த சிங்கப்பூர் பயணத்தில் இணைந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் ஜனாதிபதி வெளிநாட்டிலிருக்கும் காலப்பகுதியில் ஜனாதிபதியின் கீழுள்ள அமைச்சுக்களை கண்காணிப்பதற்காக பதில் அமைச்சர்கள் நால்வர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதற்கமைய ஜனாதிபதி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் பதில் பாதுகாப்பு அமைச்சராகவும், நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை பதில் அமைச்சராகவும், தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் பதில் தொழில்நுட்ப அமைச்சராகவும், சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் சிறுவர் , மகளிர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராகவும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## யாழ்.நெல்லியடியில் ...

கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் இவ் அனர்த்தம் இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 31 வயது இளைஞனும், வதிரி கரவெட்டியை சேர்ந்த 29 வயது இளைஞருமே உயிரிழந்துள்ளனர்.

சடலங்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிசார் மேற் கொண்டுள்ளனர்.

## 15 மாவட்டங்களில்...

52 பிரதேச செயலாளர் பிரிவுகளில் குடிநீருக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அந்த மக்களுக்கு பவுசர் மூலம் குடிநீரை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த நிலையத்தின் பணிப்பாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் கடும் வறட்சியான காலநிலை தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் மேற்படி 52 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மொத்தமாக 54,979 குடும்பங்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வகையில் வட மாகாணத்தில் மாத்திரம் 75 ஆயிரத்து 287 பேர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 70,238 பேர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு குடிநீர் பாதிப்புக்குள்ளடங்கும் மக்களுக்கு குடிநீரை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பிரபல போதைப்பொருள்....

போதைப்பொருளுடன் சில வருடங்களுக்கு முன் மொஹமட் சித்தீக் அந்த நாட்டு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார். அவருக்கு ஆயுட்கால சிறைத்தண்டனையை அந்நாட்டு நீதிமன்றம் வழங்கியிருந்தது. அங்கிருந்து அவர் 2002 ஆம் ஆண்டு தப்பித்துள்ளதுடன் இலங்கைக்கு வந்துள்ளார்.

கடல்வழியாக இலங்கைக்கு வந்து, பொரலஸ்கமுவ பிரதேசத்தில் அவர் மறைந்து வாழ்ந்துள்ளார். அதன்போது 20 கிலோ போதைப் பொருளுடன் வாகனமொன்றில் வைத்து மேலும் பலருடன் கைது செய்யப்பட்டுள்ளார்

எவ்வாறாயினும் நீண்ட கால சிறைத் தண்டணைக்குப் பின்னர் அவர் விடுலையாகி மீண்டும் நாட்டிலிருந்து தப்பிச் சென்று துபாய் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் வாழ்ந்துள்ளார். அச்சமயம் அவர் பாகிஸ்தான் போதைப்பொருள் வர்த்தகர் ஒருவரின் மனைவியையும் திருமணம் முடித்துள்ளார்.

அவர் சீசெல்ஸ் மற்றும் மாலைத்தீவு நாடுகளுக்கும் போதைப்பொருள் அனுப்பும் வலையமைப்பபையும் மேற்கொண்டுள்ளார்.

அது தொடர்பில் நீண்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவருக்கு எதிராக சர்வதேச பொலிசார் மூலம் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அதனையடுத்து பாகிஸ்தானில் வைத்து மொகமட் சித்திக் மற்றும் வெலே சுதா ஆகியோர் பாகிஸ்தான் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டனர். எமது புலனாய்வுப் பிரிவு பாகிஸ்தானுக்கு சென்று அவர்களை இலங்கைக்குக் கொண்டு வந்தனர்.

நீண்ட விசாரணைக்கு பின்னர் அவர்களை தடுத்து வைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு அவருக்கு விளக்கமறியல் தண்டனை வழங்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 13 ஆம் திகதி அவரும் அவரது சகாக்களும் விடுதலை செய்யப்பட்டனர்

விடுதலை செய்யப்பட்ட அவர் மீண்டும் இந்தியாவுக்கு தப்பிச் சென்று அங்கு வாழ்ந்துள்ளார். அங்கு இந்திய கடவுச்சீட்டு பெற்றுக் கொண்டு அவர் பல்வேறு நாடுகளுக்கும் சென்று போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளார். இந்தியாவில் பல்வேறு குற்றங்கள் தொடர்பில் மீண்டும் தேடப்பட்ட அவர், சர்வதேச பொலிசாரால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையிலேயே ஓமானில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

# 'மலையகம் 200' பெண்களின் உரிமை குறித்த காத்திரமான கருத்து பகிர்வு அவசியமானது





## பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் தலைவி லோகேஸ்வரி

200 வருட வரலாற்றை கொண்ட மலையக மக்களில் 50 வீதம் பெண்களாக காணப்படுகின்றனர். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி நான்காவது பரம்பரையாக மலையக பெண்கள் தேயிலை, இறப்பர். தென்னை மற்றும் செம்பனை தோட்டங்களில் மலையையும், வெயிலையும் பொருட்படுத்தாது இந்த நாட்டை வளமாக்கினர். ஆனாலும் இன்றுவரையும் இப்பெண்களின் ஒரு நாள் சம்பளம் 1000 ரூபா? கேள்வி குறியாகவே உள்ளது. இப்பெண்களின் அபிவிருத்தி, உரிமை குறித்த காத்திரமான கருத்து பகிர்வு அவசியமாக இருக்கின்றது. இந்த பின்னணியில் மலையக பெண்கள் குறித்த பெண்கள் உரிமை, அபிவிருத்தி, சமூக மாற்றம் குறித்து தேசிய, சர்வதேச ரீதியாக ஆக்கப்பூர்வமான செயற்பாடுகள் மேலும் தேவைப்படுகின்றது என்று பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் தலைவி லோகேஸ்வரி தெரிவித்தார்.

'மலையகம் 200' நிகழ்வினை முன்னிட்டு பெண்கள் கூட்டமைப்பு அங்குரார்ப்பண மாநாட்டில் கலந்து கொண்ட பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் தலைவி லோகேஸ்வரி இவ்வாறு தெரிவித்தார்

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்

ஏறக்குறைய 200 வருட வரலாற்றை பதிவு செய்கின்ற இந்த பெண்கள் பற்றிய கருத்தாடல் மிக குறைந்த மட்டத்திலேயே இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச ரீதியாக பெருந்தோட்ட தொழிலாளர் அல்லது பெருந்தோட்ட மக்கள் என்ற பதம் பிரசித்து பெற்று விளங்குகின்றது.

கடந்த 200 வருடகாலமாக இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கும் சமூக அபிவிருத்திக்கும் வழிவகுத்த மலையக பெண்கள், சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து இலங்கை பொருளாதாரத்திற்கும், பௌதிக அபிவிருத்திக்கும் ஆணிவேராக இருந்து வந்தது பெருந்தோட்டதுறை பொருளாதாரமே. அண்மைக் காலங்களில் இந்த பொருளாதாரத்துறையினுடைய பங்களிப்பு குறைந்து சென்றாலும் கூட, இன்றும் நிலைத்திருக்கக் கூடிய ஒரு பொருளாதார கட்டமைப்பாக காணப்படுகின்றது.

இந்த பொருளாதார கட்டமைப்பை உருவாக்க இலட்சக்கணக்கான மலையக பெண்கள் உயிர் கொடுத்துள்ளனர். இந்த பின்னணி குறித்து விழா கொண்டாடுவது அல்ல, அனுஷ்டிக்க வேண்டியதே தேவையாக இருக்கின்றது என்றார்.

# காலி மாவட்ட முஸ்லிம் பகுதிகளுக்கு மூன்று ஜனாசா வாகனங்கள்

## அமைச்சர் மனுச நாணயக்கார




காலி மாவட்ட முஸ்லிம் மக்கள் தமது ஜனாசா நல்லடக்கத்திற்காக பயன்படுத்துவதற்கு தேவையான 'ஜனாஸா வாகனங்கள்' இல்லை என்ற பிரச்சினையை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுச நாணயக்காரவின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

ஜனாசா நல்லடக்கத்திற்காக காலி மாவட்டத்திற்கென ஒரே ஒரு வாகனம் மாத்திரமே இருப்பதாகவும், இதனால் முஸ்லிம் மக்கள் தமது ஜனாஸா நல்லடக்கத்தின் போது பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் இவர்கள் அமைச்சரிடம் தெரிவித்தனர். இதன்போது அதற்கான தீர்வை வழங்குவதாக அமைச்சர் உறுதியளித்தார். இதற்கமைவாக காலி மாவட்டத்திற்கு மூன்று ஜனாசா வாகனங்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பலப்பிட்டி துந்துவ பிரதேசத்திற்கு ஒரு ஜனாஸா வாகனமும், முஸ்லிம் மக்கள் அதிகம் வாழும் கிங்தொட்ட பிரதேசத்திற்கு ஒரு ஜனாஸா வாகனத்தையும், தலாப்பிட்டி ஜும்மா பள்ளிவாசலுக்கு ஒரு ஜனாஸா வாகனத்தையும் வழங்க அமைச்சர் தற்போது தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

அந்த வாகனங்களின் பராமரிப்பு மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சர் தலாப்பிட்டி ஜும்மா பள்ளிவாயலில் முஸ்லிம் சமூகத்தினருடன் கலந்துரையாடினார். 2004 ஆம் ஆண்டு முதல் இது வரையில் தமது அரசியல் நடவடிக்கைகளுக்கு முஸ்லிம் மக்கள் வழங்கிவரும் ஆதரவையும் இதன் போது அமைச்சர் நினைவு கூர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



வெலிப்பன்னை பகுதியைச் சேர்ந்த பல்கலைக்கழக பட்டதாரிகளின் கல்வி நடவடிக்கைக்காக கணனி உபகரணத் தொகுதி கையளிக்கும் நிகழ்வு வெலிப்பன்னை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி அலுவலகத்தில் நடைபெற்றது. மத்துகம பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும் முஸ்லிம் லீக் வாலிப முன்னணி வெலிப்பன்னை தலைவருமான ரம்ஸான் ஹமீட் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன பொருளாளர் அர்ஷத் ஸவாஹிர் கணனி உபகரணத் தொகுதியை கையளித்தார்.

படம் பேருவளை பீ.எம் முக்தார்

# அதிபர் எஸ்.ஆர் குமார் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி



**பேருவளை விசேட நிருபர்**

பயாகலை இந்துக் கல்லூரி முன்னாள் அதிபரும் பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலய தற்போதைய அதிபருமான எஸ்.ஆர் குமாரின் சேவைகளை கௌரவிக்கும் வகையில் எஸ்..ஆர் குமார் வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிகெட் சுற்றுப் போட்டி பயாகலை இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பிரதேசத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளின் கிரிக்கெட் அணிகள் இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்றியதோடு இறுதிப் போட்டி பயாகலை இந்துக் கல்லூரி கிரிக்கெட் அணிக்கும் கலைமகள் தேசிய பாடசாலை கிரிக்கெட் அணிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் கலைமகள் தேசிய பாடசாலை கிரிக்கெட் அணி வெற்றி பெற்று சம்பியனாக தெரிவாகியது.

பரிசளிப்பு விழாவில் அதிபர் எஸ்.ஆர் குமார் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இப்போட்டியை பயாகலை இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





சிலாபம் கல்வி வலயத்திற்குட்பட்ட சவரான முஸ்லிம் மஹா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூரி அதிபர் W.L.S யமீனா தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக அல்ஹிமா நிறுவனத்தின் பணிப்பாளர் நூருல்லா ( நளிமி) கலந்து கொண்டார்.பிரதம அதிதியாக கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் அப்துல் ரஹ்மான்,அல்ஹிமா நிறுவனத்தின் பணிப்பாளர் நூருல்லா நளிமி சாதனையாளர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவித்தனர்





பொதுஜன பெரமுன கட்சியின் மத்திய கொழும்பு தொகுதி சபைக் கூட்டம் கட்சியின் ஹம்பாந்தோட்டை மாவட்ட எம்.பி முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் (19) கொழும்பு குணசிங்கபுர மண்டபத்தில் நடைபெற்றது. மத்திய கொழும்பு தொகுதி அமைப்பாளர் அஜந்த லியனகே ஏற்பாடு செய்திருந்த கூட்டத்திற்கு கட்சியின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம், மத்திய கொழும்பு அமைப்பாளர் அஜந்த லியனகே, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, முன்னால் அமைச்சர் அட்மிரால் சரத் வீரசேகர,கட்சி அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

கொலன்னாவ ஏ. சுமனசேன

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளிக்கிழமை 2023.08.18
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5210 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,552,616.00
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 4 4 9 0 0 7

**Mega Power** — சீட்டிழுப்பு இலக்கம் 1558 — 18/08/2023 — 09993 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 404,628,152.00
ஆங்கில எழுத்து W — சுப்பர் இலக்கம் 01 — வெற்றி இலக்கங்கள் 43 50 58 60
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

**தன நிதானய** — தேதி 2023/08/18 — சீட்டிழுப்பு இலக்கம் 1240 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 105,611,093.60
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 08 22 42 77 — விஷேட ஆங்கில எழுத்து N
Double Chance இலக்கம் 16033

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3452 — சீட்டிழுப்பு திகதி 2023.08.18 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 73,416,624.00
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 07 61 77 80 — விசேட எழுத்து K
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 26325

**ராசி சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 519 — சீட்டிழுப்பு திகதி 2023-08-18 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,732,641.20
வெற்றி இலக்கினம் மீனம் — வெற்றி இலக்கங்கள் 05 23 37 55 — விசேட இலக்கினம் மீனம்

**லக்கி 7** — திகதி 18.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0036
வெற்றி இலக்கினம் விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 5 0 5 4 8 5
L7 இலக்கம் 3 2
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,100,893.20

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனிக்கிழமை 2023.08.19
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5211 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,637,800.00
ஆங்கில எழுத்து O — வெற்றி இலக்கங்கள் 0 1 5 3 4 3

**Mega Power** — சீட்டிழுப்பு இலக்கம் 1559 — 19/08/2023 — 35740 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 404,738,308.00
ஆங்கில எழுத்து I — சுப்பர் இலக்கம் 07 — வெற்றி இலக்கங்கள் 17 49 63 69
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

**தன நிதானய** — தேதி 2023/08/19 — சீட்டிழுப்பு இலக்கம் 1241 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 105,701,070.40
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 06 19 41 56 — விஷேட ஆங்கில எழுத்து V
Double Chance இலக்கம் 47191

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3453 — சீட்டிழுப்பு திகதி 2023.08.19 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 73,539,512.80
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 35 36 42 50 — விசேட எழுத்து J
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 28278

**ராசி சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 520 — சீட்டிழுப்பு திகதி 2023-08-19 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,846,610.40
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 02 07 30 58 — விசேட இலக்கினம் மகரம்

**லக்கி 7** — திகதி 19.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0037
வெற்றி இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 6 4 1 3 6 1
L7 இலக்கம் 0 3
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,135,998.96

# கிழக்கின் குரல்



# சித்தாண்டி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம்

**சித்தாண்டி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 15.08.2023 ஆம் திகதி நண்பகல் 12.05 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி–யது. மயில்கட்டுத் திருவிழா எதிர்வரும் 27, 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறும்.**

மறுதினம் 30 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு இடம்பெறும் தீர்த்தோற்சவத்துடன்வருடாந்ததிருவிழா நிறைவு பெறுகிறது. இவ்வாலயமானது ஈழத்தின் கிழக்குப் பிரதேசத்திலே வெருகலம்பதி முதல் உகந்தை வரையுள்ள ஆறுபடை வீடுகளில் ஒரு படை வீடாகும்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இமயமலைச் சாரலுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சிகண்டி என்னும் முனிவரினால் பிரதிஷ்டை செய்யப்பட்ட 'வேல்' மூல மூர்த்தமாக அருள்பாலிக்கும் இவ்வாலயம், சித்தாண்டி ஸ்ரீ சித்தர வேலாயுதர் என்ற அற்புதத் திருநாமம் கொண்டு அழைக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் நல்லூரிலிருந்து இங்கு வருகை தந்த சிவயோக சுவாமிகள் நல்லூரானும் சித்தாண்டியானும் ஒன்று எனக் கண்டு துதித்துச் சில நாட்கள் இங்கு தங்கி வழிபட்டுச் சென்றுள்ளார். அது மட்டுமன்றி கிழக்கின் காரைதீவு சித்தானைக் குட்டி சுவாமிகள் பல நாட்களாக இத்திருத்தலத்திலே தங்கியிருந்து வேலாயுதத்தினை வழிபட்டு தன்னைச் சூழ்ந்திருந்த சிறியவர்கள், முதியோர்களுக்குப் பல அற்புதங்களையும், சித்துக்களையும் செய்தின் புற்றதாக பெரியோர்கள் வாயிலாக அறிய முடிகியது.

பல முனிவர்களினாலும், சித்தர்களினாலும் போற்றித் துதிக்கப்பட்ட பழைமை வாய்ந்த, புகழ் பெற்றதுமான ஆலயம் இதுவாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவனவற்றைக் கொண்டதுமாக அமைந்துள்ளது.

சிகண்டி என்ற முனிவர் இங்கு வந்து சிறு குடிசை அமைத்து தம்மிடமிருந்த பொன் வேலை வைத்து பூசித்து வழிபட்டதோடு, இப்பிரதேச மக்களுக்கு அருள் பாலித்துள்ளார். இவரை ஆண்டி என்றும் மக்கள் அழைத்தமையினால்நாளடைவிலே சித்தாண்டி என்ற பெயர் வந்தது.

ஆலயத்தின் கிழக்கு வாசலிலே கம்பீரமான தோற்றமுடைய இராஜ கோபுரம் கட்டப்பட்டுள்ளது.

ஆலய வெளிவீதி வளாகச் சூழலிலே நல்ல குளிர்ச்சியான வயது கூற முடியாத நிழல் தரும் வம்மி, மகிளை என பல மரங்களும் உள்ளன. இந்த மர நிழல் சோலைகளின் மத்தியிலேதான் ஆலயம் அமைந்துள்ளது.

அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்திற்குச் செல்லு முன் சித்தாண்டி_ வாழைச்சேனை பிரதான வீதியருகிலே தலைவாசலிலே விநாயகப் பெருமானுடைய ஆலயம் அழகுற அமைந்திருக்கிறது. இங்கு முதலில் இந்த விநாயகரை வணங்கிய பின்னரேதான் முருகனுடைய ஆலயத்திற்குச் செல்ல வேண்டும்.

இந்த விநாயகர் ஆலயத்தின் பின்புறமாக முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் முழு உருவச் சிலையும் சிகண்டி முனியின் சிலையும் உள்ளன.

யோக சுவாமி, சித்தானைக்குட்டி சுவாமி, கொச்சிக்கடை சுவாமி ஆகியோரின் நற்கடாட்சம் பெற்றது இந்த புண்ணியதலம். இலங்கேஸ்வரர் என்னும் சோழமன்னனின் ஆதிக்கமும் இங்கு இருந்ததாக வரலாறு கூறுகின்றது.



சோழர் கால ஆதிக்கம் இலங்கையிலே நிழவிய காலத்திலே இவ்வாலயத்தின் நிர்வாகக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்வாலயம் தேசத்துக் கோயில் என்றும், குடிமரபு பிறளாத திருப்படைக் கோயில்களில் ஒன்று என்றும் போற்றப்படுகிறது. யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்கள் தங்கிச்செல்லும் பிரதான இடம் சித்தாண்டி.

கதிர்காமம் உற்சவ காலங்களிலேயாழ்பாணம், கிளிநொச்சி,வவுனியா,திருகோணமலை,மன்னார் முல்லைத்தீவு,வெருகல் போன்ற இடங்களிலிருந்து பாதயாத்திரையாக வருகின்ற பல அடியார்கள் இங்குள்ள தாராளமான இடவசதியுடைய மடத்திலே தங்கவைக்கப்பட்டு, அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்ட பின்னர் மாமாங்கம் நோக்கி வழி அனுப்பி வைப்பதும் இன்றும் நடைமுறையிலே உள்ளது.

**_தேசகீர்த்தி இ. சீதாராமன்**
**ஆலய வண்ணக்கர்**

## கராத்தே போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பதக்கம்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**







கிழக்கு மாகாண சோட்டோ கராத்தே கழகம் (SKO) ஏற்பாட்டில் கராத்தே பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு இடையிலான கராத்தே சுற்றுப்போட்டி கழகத்தின் தலைவர் கே.ரி.பிரகாஷ் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட கராத்தே தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் கலந்து கொண்டார். மாவட்ட அரசாங்க அதிபர் கலாநிதி பத்மராஜா, மாகாண நிர்வாக செயலாளர் கலாநிதி கோபாலரெத்தினம், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார், பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாகாண சோட்டோ கராத்தே கழகமானது கடந்த 30 வருட காலமாக இயங்கி வருகிறது. இதன் மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் தற்காப்பு கலையான கராத்தே பயிற்சியினைப் பெற்று வெளியேறியுள்ளனர். கராத்தே வீரர்கள் இலங்கையிலும், சர்வதேசத்திலும் பல போட்டிகளில் பங்குபற்றி சாதனைகளைப் படைத்துள்ளனர்.

எதிர்காலத்தில் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான போட்டி, பாடசாலைகளுக்கு இடையிலான போட்டி, விளையாட்டுத் துறையினரால் நடத்தப்படும் போட்டி ஆகியவற்றை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கழகத் தலைவர் கே.ரி.பிரகாஷ் தெரிவித்தார்.

இங்கு உள்ளக ரீதியில் நடத்தப்பட்ட கராத்தே சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கம், பரிசுகள் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.

## அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தை பார்வையிட்ட முனவ்வறா மாணவர்கள்

**ஒலுவில் மத்திய விசேட நிருபர்**



அக்கரைப்பற்று முனவ்வறா கனிஷ்ட கல்லூரி மாணவர்களின் ஒரு நாள் கல்விச் சுற்றுலாவின் ஒரு அங்கமாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தை பார்வையிட அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அம்மாணவர்களை இன்முகத்துடன் வரவேற்ற அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் W.M.S.B. விஜயதுங்க தலைமையிலான குழுவினர் மாணவர்களை வரவேற்று அழைத்துச் சென்று பொலிஸ் நிலைய நடவடிக்கைகளை காண்பித்தனர்.

இந்நிகழ்வில் பொலிஸ் உத்தியோகத்தர்களான அனீஸ், தாஹிர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மாணவர்களை வரவேற்று உபசரித்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு பாடசாலைச் சமூகம் சார்பாக நன்றிகளையும் வாழ்த்துக்களையும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர் ஆகியோர் தெரிவித்திருந்தனர்.

## மண்டூருக்கு படையெடுக்கும் யானைகளால் மக்கள் அச்சம்!

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசமும் தொல்லைகளும் அதிகரித்து வருகின்றன. அப்பகுதியில் தொடர்ச்சியாகத் தங்கி நிற்கும் காட்டு யானைகளை அப்புறப்படுத்தி விட்டு யானைப் பாதுகாப்பு வேலைகளை அமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்ற போதிலும் அக்கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படவில்லை. இது குறித்து அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். தாங்கள் அச்சத்துடன் வாழ்வதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை(19.08.2023) படுவானகரைப் பிரதேசத்தின் மண்டூர் பகுதில் மக்கள் குடியிருப்புக்கு அருகில் காட்டு யானைகள் கூட்டமாக நின்றதை இங்கு காணலாம்.

## அக்கரைப்பற்றில் ஐஸ் போதைப்பொருள், கஞ்சாவுடன் இருவர் கைது

**பாலமுனை தினகரன் நிருபர்**

கஞ்சா மற்றும் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட இரு நபர்களை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி கே.சமீம் உத்தரவிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாகாமம் வீதியில் கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 750 மில்லிகிராம் கஞ்சாவும் அட்டாளைச்சேனையில் பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 45 மில்லி கஞ்சாவும், 90 மில்லிகிராம் ஐஸ்போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சாகாமம் வீதியில் கைதான சந்தேக நபர் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம். சதாத், பொலிஸ் சார்ஜன்ட்களான தாஹீர், அனஸ் ஆகியோர் குறித்த பிரதேசத்திற்கு சென்று நபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே சந்தேக நபருக்கு இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரனைகளை அக்கரைப்பற்று பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அக்கரைப்பற்று நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் கிரிக்கட் போட்டி





**பாலமுனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று நீதிமன்ற சட்டத்தரணிகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியில் அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கும், சட்டத்தரணிகளுக்குமிடையில் நல்லுறவை கட்டியெழுப்பும் வகையில் சிநேகபூர்வமாக ஏற்பாடு செய்யப்பட்ட இக்கிரிக்கட் சுற்றுப் போட்டி மாவட்ட, நீதவான் நீதிமன்றங்களின் நீதிபதி எம்.எச்.எம். ஹம்சாவின் வழிகாட்டலில் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் எம்.எம். பகிஜ் தலைமையில் பள்ளிக்குடியிருப்பு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இச்சுற்றுப் போட்டியில் சட்டத்தரணிகள் அணி, நீதவான் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அணி, மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அணி ஆகிய மூன்று அணிகள் பங்குபற்றியிருந்தன.இறுதி போட்டியில் மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அணியும், சட்டத்தரணிகள் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அணி 153 ஓட்டங்களைப் பெற்றது. 154 என்ற வெற்றி இலக்கை நோக்கி எதிர்த்தாடிய சட்டத்தரணிகள் அணி 107 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. 46 ஓட்டங்களால் மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அணி வெற்றி பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை மேல்நீதிமன்ற நீதிபதி ஜே.றொக்ஷ் ,கௌரவ அதிதிகளாக அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா, சம்மாந்துறை மாவட்ட நீதிபதி ரீ.கருணாகரன், கல்முனை மாவட்ட நீதிபதி ஏ.எம்.எம். றியாழ், நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணிகளான எம்.எம்.அப்பாஸ், எஸ்.எம்.ஏ.கபூர் ஆகியோரும் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணியினருக்கு வெற்றிக் கிண்ணத்தை வழங்கி வைத்தனர்.

## பொத்துவில் அல்-பஹ்றியாவில் ஆசிரியர்கள் பற்றாக்குறை

**ஒலுவில் விசேட நிருபர்**

அக்கரைப்பற்று வலயக் கல்வி வலயத்திற்குட்பட்ட பொத்துவில் அல்பஹ்றியா வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தரம் 01 தொடக்கம் க.பொ.த. (சா/த) தரம் வரை 17 வகுப்புகளைக் கொண்ட இப்பாடசாலை தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.சா/த பரீட்சை என்பவற்றில் முதல் நிலையில் உள்ளது.

இப்பாடசாலையில் கடந்த 2022ம் ஆண்டு முதல் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், தகவல் தொழிநுட்பம் ஆகிய பாடங்களுக்குரிய ஆசிரியர்கள் பற்றாக்குறையாக காணப்படுவதால் மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சியடைந்து காணப்படுவதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் வலயக் கல்வி அலுவலகம் என்பவற்றிக்கு பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டதாகவும், இது தொடர்பாக எவ்வித நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனவும் பெற்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மாணவர்களின் நலனை கருத்திற் கொண்டு ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையின் நூற்றாண்டை முன்னிட்டு கிரிக்கட் போட்டி

**கல்குடா தினகரன் நிருபர்**





வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையின் நூற்றாண்டை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அந்நூரியன்ஸ் கிரிக்கட் பியஸ்ரா 2023 கிண்ணத்தை 2013ம் ஆண்டு அணியினர் தனதாக்கிக் கொண்டனர்.

வாழைச்சேனை அந் நூர் தேசிய பாடசாலையின் நூற்றாண்டை முன்னிட்டு பழைய மாணவர்களுக்கிடையிலான ஆறு ஓவர்களைக் கொண்ட கிரிக்கட் சுற்றுப்போட்டி பாடசாலை மைதானத்தில் இடம் பெற்றது. இதில் 28 அணிகள் கலந்து கொண்டன. இறுதிப்போட்டிக்கு 2013ம் ஆண்டு அணியினரும் 2017ம் ஆண்டு அணியினரும் பங்கு பங்குபற்றினர்.

முதல் துடுப்பெடுத்தாடிய 2013ம் ஆண்டு அணியினர் ஆறு ஓவர் முடிவில் ஐந்து விக்கட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களை பெற்றனர். அவர்களை எதிர்த்து துடுப்பெடுத்தாடிய 2017ம் ஆண்டு அணியினர் ஆறு ஓவர்களில் ஐந்து விக்கட்டுக்களை 53 ஓட்டங்களைப் பெற்றனர். 2013ம் ஆண்டு அணியினர் 09 ஓட்டங்களால் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

சிறந்த தொடர் ஆட்டநாயகனாகவும் துடுப்பாட்ட வீரராகவும் 2013ம் ஆண்டு அணியின் வீரர் கே.எம்.இல்ஹாம் தெரிவு செய்யப்பட்டதுடன் சிறந்த பந்து வீச்சாளராக 2007ம் ஆண்டு அணியின் வீரர் எம்.சி.றிபாஸ் தெரிவு செய்யப்பட்டார். இளம் வீரருக்கான விருது 2015ம் ஆண்டு அணியின் வீரர் எம்.ஏ.சி.எம். பாஸில் தெரிவு செய்யப்பட்டதுடன் 'லெஜன்' வீரருக்கான விருதுக்கு 1995ம் ஆண்டு அணியின் வீரரான ஏ.எல்.எம். நௌபர் தெரிவு செய்யப்பட்டதுடன் சிறந்த பிடி எடுப்பிற்கான விருது 1994ம் ஆண்டு அணியை சேர்ந்த வீரர் எம்.ரீ.வை. அறபாத் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்.

## சீனி பாணியை தேன் என சுற்றுலா பயணிகளுக்கு விற்பனை செய்தவர் சுகாதார துறையினரால் கண்டுபிடிப்பு

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட புதிய காத்தான்குடியில் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளுக்கு சுத்தமான தேன் என ஏமாற்றி சீனிப்பாணியை விற்பனை செய்த நபர் ஒருவர் நேற்றுக் காலை(20) சுகாதாரத் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டார். குறித்த நபர் தப்பியோடிய போதிலும் அவரிடம் இருந்து ஆறுக்கும் மேற்பட்ட சீனிப் பாணிகளைக் கொண்ட போத்தல்கள் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட சீனிப்பாணிகளை கொண்ட போத்தல்கள் குறித்த இடத்திலேயே அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. புதிய காத்தான்குடி அல் அக்சா பள்ளிவாயலுக்கு வருகின்ற உள்ளூர் சுற்றுலாப் பயணிகளை ஏமாற்றி குறித்த நபர் சீனிப் பாணியை சுத்தமான தேன் எனக் கூறி ஏமாற்றி ஒரு போத்தல் 2000 ரூபா வரை விற்பனை செய்து வந்திருக்கிறார்.

பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பட்ட தகவலை அடுத்து ஸ்தலத்துக்கு விரைந்த பொது சுகாதார பரிசோதகர் குறிப்பிட்ட நபரை மடக்கிப்பிடித்த போது குறித்த இடத்திலிருந்து அவர் தப்பியோடி இருக்கிறார். இருந்தபோதிலும் சுகாதாரத் துறையினர் அவரிடம் இருந்த சீனிப் பாணி போத்தல்களை கைப்பற்றி அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசத்தைக் கட்டியெழுப்பும் மூன்று செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் பணியில் அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவை

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை என்ற எங்களுடைய அமைப்பு முஸ்லிம் சமூகம் சார்ந்த சமூகப் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் தருணத்தில் பொதுவாக இந்நாட்டு மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணக்கருவுக்கு இணங்க நாட்டைக் கட்டியெழுப்புகின்ற செயற்றிட்டத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இந்த இரத்ததானத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. நாட்டை கட்டி எழுப்புகின்ற செயற்றிட்டத்தின் கீழ் மூன்று வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

முதலாவது இரத்ததானம், இதன் மூலம் இந்நாட்டினுடைய எல்லா மக்களும் பயனை அடைவார்கள். இரண்டாவது மரம் நடுகை ஆகும். மூன்றாவது பொதுச் சிரமதானம் செய்தல். இந்த மூன்று திட்டங்கள் நாட்டு மக்கள் அத்தனை பேருக்கும் நன்மை பயனைத் தர வேண்டும் என்ற நோக்கிலேயே இத்தகைய செயற்றிட்டத்தை நாடளாவிய ரீதியில் நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம்.

அத்தோடு எங்கள் வை. எம். எம். ஏ பேரவையின் கிளையினர் மிகவும் வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றனர். இன்று எல்லோரும் இயந்திர மயமான வாழ்க்கை முறையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தில் தங்களுடைய காலம் நேரங்களை ஒதுக்கி இந்த இரத்தான முகாம்களில் கலந்து கொண்டு இரத்தங்களை வழங்கி வைப்பதற்காக வருகை தந்த உங்கள் அத்தனை பேருக்கும் எமது அமைப்பின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த வேலைத் திட்டம் இவ்வமைப்பின் தேசியத் தலைவராக நானும் பொதுச் செயலாளராக இங்கே அமர்ந்துள்ள சஹீட் எம். ரிஸ்மி அவர்களும் செயற்படும் கால கட்டத்திலே தான் இந்தத் திட்டத்தை அமுலுக்கு கொண்டு வந்தோம். அவை இன்று வெற்றிகரமான முறையில் நாடெங்கும் மேற்கொள்ளப்பட்டு வருவதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.













அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர் சஹீட். எம். ரிஸ்மி,....

நாட்டுக்கு நல்ல காரியம் ஒன்றைச் செய்வதற்காக மூவினத்தைச் சேர்ந்த மக்களும் பௌத்த தேரர், பொலிஸ் அதிகாரிகள், அரச உத்தியோகஸ்தர்கள் எனப் பல தரப்பட்ட பல்லின மக்கள் கலந்து கொண்டமை வரவேற்கத்தக்க அம்சமாகும். இவ்வமைப்பு 1917 ஆம் ஆண்டு கொழும்பு முகத்துவாரத்தில் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு. அதன் பின்பு 1950 களில் இதன் எல்லாக் கிளைகளையும் ஒன்று சேர்த்து ஒரு பேரவையாக இந்த வை. எம். எம். ஏ. அமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்த வை. எம். எம். ஏ. பேரவை என்றால் இலங்கையில் ஏனைய இனங்களுக்கிடையே காணப்படும் வை. எம். சி. ஏ. மற்றும் வை. எம். பி. ஏ. போன்ற அமைப்புக்களைக் கொண்டதாகும். நான் செயலாளராகவும் நபீழ் தலைவராகவும் இருக்கின்ற கால கட்டத்தில் நாட்டை கட்டியெழுப்புவோம் என்ற செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வேலைத் திட்டத்தை திறன்படச் செய்கின்ற கிளை அமைப்புக்களைத் தெரிவு செய்து ஒவ்வொரு பேராளர் மாநாடுகளிலும் விருதுகள் வழங்கி வருகின்றோம். நாடளாவிய ரீதியில் 169 கிளை அமைப்புக்கள் காணப்படுகின்றன. இந்தக் கிளைகளில் ஒன்றுதான் பலகொல்ல வை. எம். எம். ஏ. ஆகும். கொரோனா தொற்றுக் காலத்தில் வைத்தியசாலைகளில் இரத்த வங்கிகளில் பாரியதொரு தட்டுப்பாடு நிலவியது. இக்கால கட்டத்தில் சுகாதார அமைச்சு வைத்தியசாலைகளுக்கு இரத்ததானம் வழங்குமாறு அவசர வேண்டுகோள்களை முன்வைத்தன. இந்த இக்கட்டான நிலையில் கூட இரத்த தானங்களை வழங்கினோம். இப்பிரதேசத்தில் முதல் முறையாக இந்த இரத்ததானம் வழங்கும் நிகழ்வு ஆரம்பிக்கப்படுகிறது. இதில் விஹாராதிபதி, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பல தரப்பட்ட உத்தியோகஸ்தர்கள் இங்கு சமுகமளித்துள்ளமை வரவேற்கத்தக்க அம்சமாகும்.

இத்தகைய எல்லோருடைய கூட்டு முயற்சியின் ஊடாகத்தான் எமது நாட்டின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப முடியும். ஒரே இடத்தில் தலைமைத்துவங்கள் ஒன்று சேர்வது என்பது கற்ற அனுபவங்களோடுதான் ஆகும். கிளை மட்டத்திலுள்ள தலைவர்கள் இன்னும் நிறைய விடயங்களை கற்றுக் கொள்ள வேண்டும். அந்த வகையில் மூத்தவர்களுடைய ஆலோசனைகளையும் இங்கு வருகை தந்துள்ள சமயத் தலைவர்களது ஆலோசனைகளையும், பொலிஸ் அதிகாரிகளுடைய ஆலோசனைகளையும் உள்வாங்கி உங்கள் பணிகளைச் செய்து கொண்டு செல்லுதல் வேண்டும்.

இந்த நாட்டின் பல பாகங்களிலும் போதைப் பொருள் தொடர்பான பிரச்சினைகள் எழுந்துள்ளன. கண்டி மாவட்டத்திலும் ஓரளவு தாக்கத்தை உண்டு பண்ணியுள்ளன. இங்கு ஒரு சில வாலிபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம். போதை ஒழிப்பு விடயத்தில் உலகளாவிய ரீதியில் செயற்படும் அமைப்புடன் இணைந்து செயற்படும் அமைப்பு என்ற வகையில் பலகொல்ல விஹாரையினை மத்திய நிலையமாகக் கொண்டு பொலிஸாரின் ஒத்துழைப்போடும் வாலிபர்களையும் இணைத்துக் கொண்டு செயற்படுதல் வேண்டும். இவற்றை எவ்வாறு தடுக்கலாம் என்பது பற்றியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல் சம்பந்தமாகவும் நாங்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.









நான் வை. எம். எம். ஏ. பேரவையில் தேசிய சமூகப் பிரச்சினைகள் தொடர்பான விவகாரங்களுக்குப் பொறுப்பாக இருந்து செயற்பட்டு வருகின்றேன். அந்த வகையில் களுத்துறை மாவட்டத்தல் ஓர் ஊரில் மதுபான சாலை திறப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. தேசிய நல்லிணக்க சபையினால் ஊரின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு எல்லோரும் சேர்ந்து அதற்கு எதிரான போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இன்று நாடளாவிய ரீதியில் மதுபானசாலைகள் திறக்கப்படுவதாக அங்காங்கே மதுபான சாலை திறப்பதற்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஊடக வாயிலாக அறிகின்றோம். இங்கேயும் அந்த மதுபான சாலை திறப்பதை தடுப்பதற்கான முயற்சிகளை நாம் அனைவரும் சேர்ந்து மேற்கொள்ளுவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

முஸ்லிம் வாலிபர் சங்கத்தினால் முதல் தடவையாக ஏற்பாடு செய்துள்ள இரத்த தானம் வழங்கும் வைபவத்தில் கலந்து கொள்ளுவதில் நான் பெருமகிச்சியடைகின்றேன்.

பலகொல்ல பௌத்த நிலையத்தின் விஹாராதிபதி தெல்பொத்த தம்மஜோதி தேரர்.

**முஸ்லிம் வாலிபர் சங்கத்தினால் முதல் தடவையாக ஏற்பாடு செய்துள்ள இரத்த தானம் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு ஆசீர்வாதம் வழங்குவதில் பெருமகிச்சியடைகின்றேன். நாங்கள் மனிதர்களாக மனிதர்களை நேசித்தல் வேண்டும். இந்த மனித நேயத்தை பாதுகாத்தல் வேண்டும். இந்த மனித சமூகத்திற்காக சேவையாற்றுபவர்களுக்கு தைரியத்தையும் சக்தியும் இறைவன் வழங்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.**

**தெல்தெனிய வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி.**

**இந்த வை. எம். எம். ஏ. அமைப்பினால் இப்பிரதேசத்தில் முதல் தடவையாக இரத்த தானம் வழங்கும் நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளனர். அதனை மிகவும் சிறந்த முறையில் ஏற்பாடுகள் செய்துள்ளார்கள். இவர்கள் இந்தளவுக்கு ஆரம்ப வைபவத்தை ஏற்பாடுகள் செய்திருப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்க வில்லை. முஸ்லிம் சமூக அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து இப்படியான பெரு நிகழ்வாக நடத்துவது என்பதினைக் காண்பது அரிது. இந்த ஏற்பாடுகள் வெற்றியளிக்க வேண்டும் என்பதுடன் எதிர்காலத்திலும் ஆறு மாதத்திற்கு ஒரு தடவையாவது சரி அல்லது ஒரு வருடத்திற்கு ஒரு முறையாவது தொடர்ந்து செய்ய வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.**

**அதே போன்றுதான் இங்கு நாம் கண்ட விடயம் தான் இஸ்லாமிய மார்க்க சமயத் தலைவர்கள் பௌத்த சமய பெரிய விஹாராதிபதி போன்றவர்களை இந்த இரத்த தான நிகழ்வுக்கு வரவழைத்து இருப்பது வரவேற்கத் தக்க அம்சமாகும். இதில் பல்லின சமயத் தலைவர்களையும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளச் செய்தமையும் ஒரு நல்ல வேலைத் திட்டமாகும். இத்தகைய நல்லதொரு வேலைத் திட்டத்திற்கு எங்களால் இயன்றளவு பங்களிப்பை வழங்கத் தயாராக இருக்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.**

**பலகொல்ல பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி கிரிசாந்த**

**இந்த நிகழ்வுக்கு எம்மை அழைத்தமைக்கு நான் மிக்க நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதோடு மகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் இந்த ஏற்பாட்டினைச் செய்த பலகொல்ல வை. எம். எம். ஏ அமைப்புக்கு விசேடமாக நாங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**இரத்த தானம் வழங்குவது என்பது ஒரு புண்ணி காரியமாகும். அதேபோன்று சிங்கள, தமிழ், மு ஸ்லிம் மக்கள் இணைந்து இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்தமையானது நல்ல ஆரம்ப முயற்சியாக அமைந்துள்ளது. அந்த வகையில் பிரஜா பொலிஸ் பிரிவினால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டத்திற்கு மிகவும் அத்தியாவசியமான விடயம் இது. இந்த ஆரம்ப நிகழ்வுக்கு ஏற்பாட்டினை செய்த அமைப்புக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**இரத்த தானம் செய்தல் மிகவும் அத்தியாவசியமான ஒன்று. நோயாளியின் உயிரைக் காப்பதற்காக மிகவும் பெறுமதிக்க காருண்ணிய சேவையாக இந்த இரத்த தானம் செய்யும் சேவையை நாம் மிகவும் மதிக்கின்றோம்.**

**பலகொல்ல வை. எம். எம். ஏ. கிளையின் தலைவர் ஏ. எம். எம். ரியாஸ், உப தலைவர் ஜே. எம். சுபியான், செயலாளர் என். எம். எம். அக்ரம், உப செயலாளர் ஏ. பி. எம். இல்லியாஸ், பொருளாளர் எல். எம். சிராஜ், எம். எப். எம். பஸால் ஹாபிஸ் (ஹூமைய்தி) ஆலோசகர் ஐ. எம். புவாட் (ஹூமைய்தி) ஆகியோர்களுடன் செயற் குழு உறுப்பினர்கள் என். எம். இம்ரான், என். எம். இஸாக், எச். எம். பௌஸர் அலி, எம். மத்ஹி எம். எஸ். எம். சல்மான் ஆகியோர் இணைந்து இவ்வேலைத் திட்டத்தை திறன்படச் செய்தனர்.**



இக்பால் அலி

# நுவரெலியாவில் விறகு சேகரிக்க சென்ற இளைஞர்கள் மீது குளவிக் கொட்டு

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்பரக்கலை தோட்டத்தில் விறகு சேகரிக்கச் சென்ற ஆறு இளைஞர்கள் நேற்று குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

குளவிக் கொட்டுக்கு இலக்கான இளைஞர்கள் பிரதேச மக்களால் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர். விறகு சேகரிக்கச் சென்ற போது, அப்பகுதியிலிருந்த மரத்தில் காணப்பட்ட குளவிக் கூடு கலைந்து இளைஞர்களை தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறான குளவிக் கொட்டு சம்பவங்கள் தொடர்ச்சியாக பெருந்தோட்டங்களில் இடம்பெறுவதாகவும் இதுதொடர்பில் தமக்கு தீர்வொன்றை பெற்றுத்தருமாறும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ரயிலில் மோதுண்டு யுவதி உயிரிழப்பு

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டு இளம் யுவதியொருவர் உயிரிழந்துள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டக்கலை கிறிஸ்லஸ்ஃபாம் எனும் இடத்தில் வைத்தே இவ்விபத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலும் இச்சம்பவத்தில் உயிரிழந்த பெண் ஹற்றன் ருவன்புர பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய சுப்பிரமணியம் இமேக்கா என அடையாளம் காணப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# மலையக தோட்டத் தொழிலாளர்கள் குத்தகைக்கு கொடுக்கப்படவில்லை

(ஊவா சுழற்சி நிருபர்)

## நிர்வாகங்களே குத்தகைக்கு விடப்பட்டன என்கிறார் வடிவேல் சுரேஷ்

பெருந்தோட்ட தோட்டத் தொழிலாளர்களை குத்தகைக்கு வழங்கவில்லை. தோட்ட நிர்வாகங்களையே குத்தகைக்கு வழங்கியுள்ளோம் என இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

மாத்தளை, எல்கடுவ பிளான்டேசன் ரத்வத்த கீழ் பிரிவில் மூன்று குடியிருப்புக்கள் தோட்ட நிர்வாகத்தால் அகற்றப்பட்டமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ரத்வத்த கீழ்பிரிவு தோட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படக் கூடிய தண்டனை ஏனைய தோட்ட அதிகாரிகளுக்கும் ஓர் பாடமாக அமைய வேண்டும். மாத்தளை, எல்கடுவ பிளான்டேசன் ரத்வத்த கீழ்பிரிவில் மூன்று குடும்பங்கள் உள்ளடங்கலாக 14 பேர் வசித்து வருகின்றனர். நேற்றுமுன்தினம் அதிகாரிகள் சகிதம் வருகை தந்த உதவி முகாமையாளர், வீட்டை உடைத்து பொருட்களுக்கும் சேதம் ஏற்படுத்தியுள்ளார். இது கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும். பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை இன்று வீடு இல்லாமல் நிர்க்கதியாக நிற்கின்றனர்.



200 வருடங்களாக நாட்டின் பொருளாதாரத்தை தன்னுடைய முதுகெலும்பு தேயும் வரை தோளில் சுமந்த ஒரு சமூகத்தை நடுத்தெருவில் நிறுத்தி வேடிக்கை பார்க்கின்றோம்.

பாராளுமன்றத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக என்னுடைய குரல் ஒலிக்கும். மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்விடயத்தில் ஒற்றுமையாக கரம் கோர்த்து செயற்பட வேண்டும். இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கிடைக்க வேண்டும். இல்லாவிட்டால் தோட்ட நிர்வாகத்தினர் பாரியதொரு புரட்சி போராட்டத்தை எதிர்கொள்ள நேரிடும். பாதிக்கப்பட்டவர்களுக்கு அவ்விடத்தில் வீடு ஒன்று மீண்டும் அமையப் பெற வேண்டும் என்றார்.

# இரத்தினக்கல் அகழ்வுகளால் மாசடையும் ஆறுகள்

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

பாரியளவில் பெகோ இயந்திரங்களை பயன்படுத்தி இரத்தினக்கல் அகழ்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதால் அப்பகுதியிலுள்ள ஆறுகள் மாசடைவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால் அப்பகுதியிலுள்ள ஆறுகளில் குளிக்கமுடியாத நிலைமை உருவாகியுள்ளதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டினர்.

கடும் வரட்சி நிலவும் இக்கால கட்டத்தில் ஆற்றுநீரை பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குருவிட்ட போபத்எல்ல மூலம் சுத்தமான நீர் வழிந்தோடும் எல்லாவள ஆற்றில் தற்சமயம் மாசடைந்த நீர் கலந்துள்ளதால் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# முப்படை ஓய்வூதியர்களின் கிரிக்கெட் சுற்றுப்போட்டி!



(காவத்தை தினகரன் விசேட நிருபர்)

எஹலியகொடை பரகடுவ முப்படையினரின் ஓய்வுபெற்ற சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏழு பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி நேற்றுமுன்தினம் (19) சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க தலைமையில் பரகடுவ நாரத கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க தலைமையில் நடைபெற்ற போட்டியில் கல்வி மற்றும் விளையாட்டில் திறமைகளை வெளிப்படுத்திய பரகடுவ பிரதேச மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் எஹலியகொட உள்ளூராட்சி சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ஹரிஸ் கிரியெல்ல உட்பட ஓய்வுபெற்ற முப்படையினரும் கலந்து கலந்துகொண்டனர்.

# குளவிக்கூடுகளால் ஆபத்து !

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

நல்லதண்ணி வழியாக சிவனொளிபாதமலைக்கு செல்லும் வீதியில் குளவிக் கூடுகளால் பெரும் அச்சுறுத்தல் நிலவுவதாக சுற்றுலாப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

நல்லதண்ணி நகரிலிருந்து சிவனொளிபாதமலைக்கு செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள புத்தர் சிலையில் 24 குளவிக் கூடுகள் உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

தற்போது இப்பகுதியில் கடுமையான வெப்பமான காலநிலை நிலவுகின்றது. காகங்கள், கழுகு போன்ற பறவைகள் குளவிக் கூடுகளை தாக்கும் பட்சத்தில், அப்பகுதியால் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஆபத்து ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

ஆகையால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் நல்லதண்ணி வன பாதுகாப்பு அதிகாரிகள் முன்வந்து குளவிக் கூடுகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கண்டி எசல பெரஹராவுக்கான விசேட ரயில் சேவைகள்

(அக்குணை குறூப் நிருபர்)

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் எசல பெரஹராவை முன்னிட்டு விசேட புகையிரத சேவைகள் நடைபெறவுள்ளன.

மேற்படி விசேட புகையிரத சேவை எதிர்வரும் 25ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடாத்த திட்டமிட்டுள்ளதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, மாத்தளை, பதுளை, நாவலப்பிட்டி ஆகிய இடங்களிலிருந்து கண்டியை நோக்கி விசேட சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ரந்தோலி பெரஹரா நடைபெறும் காலங்களில் அதிகமான பொதுமக்கள் கண்டிக்கு வருகை தருவது வழக்கம்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக வருகை தராத பெரும்பாலான மக்கள் இம்முறை அதிகளவில் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வவுனியாவில் மதுபானசாலையில் தாக்குதல்: குடும்பஸ்தர் உயிரிழப்பு ஒருவர் கைது

(வவுனியா விசேட நிருபர்)



வவுனியாவிலுள்ள மதுபானசாலையொன்றில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பஸ்தர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில், வவுனியா, மகாறம்பைக்குளம் காந்தி வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பிரதீபன் (தீபன்) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வவுனியா, பூந்தோட்டம் பகுதியிலுள்ள மதுபானசாலைக்கு சென்றிருந்த இளம் குடும்பஸ்தரை அங்கு மதுஅருந்திக் கொண்டிருந்த இருவர் அழைத்து தாக்கியுள்ளனர். இதனால் படுகாயமடைந்த குடும்பஸ்தர் வவுனியா பொது வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட போதும் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார். இச்சம்பவம் தொடர்பில் தடயவியல் பொலிஸாரின் துணையுடன் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய பிரதான சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தாக்குதல் இடம்பெற்ற இடத்திலிருந்த சான்றுப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்களை உடன் கைது செய்யுமாறும் பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். இதுதொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வடக்கின் உதயம்

# மதுபானசாலையை அகற்றக்கோரி முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை

(ஓமந்தை விஷேட நிருபர்)



முல்லைத்தீவு உண்ணாப்பிலவு பகுதியில் அமைக்கப்பட்ட மதுபானசாலைக்கு பொதுமக்கள் , பொது அமைப்புக்கள் இணைந்து எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் உண்ணாப்பிலவு பகுதியில் புதிதாக சில்லறை மதுபானசாலையொன்று இம்மாதம் 15 ஆம் திகதி திறக்கப்பட்டுள்ளது. இதனை கிராம மக்கள், பொதுஅமைப்புகள் எதிர்த்துள்ளதுடன், பிரதேச செயலாளருக்கு கடிதமொன்றையும் கையளித்துள்ளனர்.

கடிதம் வழங்கப்பட்டு இதுவரையில் மதுபானசாலையை அகற்ற எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையெனவும் கிராமமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். மதுபானசாலை அமையப்பெறும் இடத்துக்கு 100 மீற்றர் தூரத்தில் பாடசாலைகளோ, தேவாலயங்கள், ஆலயங்கள் இருக்கக் கூடாது என்பது விதிமுறையாக உள்ள போதும் இக்கிராமத்தில் பாடசாலை அருகிலிருப்பதால் பாடசாலை மாணவர்கள் போதைக்கு அடிமையாகும் அபாயமுள்ளதாக கிராமமக்கள் தெரிவிக்கின்றனர்.

# கசிப்பு, கஞ்சா கலந்த மாவாவுடன் இரு இளைஞர்கள் கைது

(யாழ். விசேட நிருபர்)

கசிப்பு மற்றும் கஞ்சா கலந்த மாவா பாக்குடன் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டை பகுதியில் வைத்து நேற்றையதினம் ஞாயிற்றுக்கிழமை சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு மற்றும் 21 கிராம் 450 மில்லிகிராம் கஞ்சா கலந்த மாவா போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மாணவனை தாக்கிய உடற்கல்வி ஆசிரியர் கைது

(சாவகச்சேரி விசேட நிருபர்)

கொடிகாமம் பகுதியில் பிரபல பாடசாலையொன்றில் க.பொ.த சாதாரண தர வகுப்பு மாணவனை தாக்கிய குற்றச்சாட்டில் உடற்கல்வி ஆசிரியர் கொடிகாமம் பொலிஸாரால் கடந்த 18ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

கொடிகாமம் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த 16 வயது மாணவனை உடற்கல்வி ஆசிரியர் தாக்கியுள்ளதாக தெரியவருகின்றது. இதில் பாதிக்கப்பட்ட மாணவன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

அதேசமயம் மாணவனின் தந்தை கொடிகாமம் பொலிஸாருக்கு இதுதொடர்பாக வழங்கிய முறைப்பாட்டையடுத்து உடற்கல்வி ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்த உடற்கல்வி ஆசிரியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான ஆசிரியரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கொடிகாமப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



மலையகத் தமிழ் மக்களுடைய 200 வருட வரலாறு' எனும் நூல் அறிமுகவிழா நேற்று புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பைகளும் வழங்கிவைக்கப்பட்டன. மேலும் இந்நிகழ்வில் விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான மனோகணேசன், செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ஆ.ஜோன்சன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சாவகச்சேரியில் அதிகரிக்கும் திருட்டுச் சம்பவங்கள்

(சாவகச்சேரி விசேட நிருபர்)

சாவகச்சேரியில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் திருட்டு சம்பவங்கள் தொடர்பில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரிப் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் அண்மைக்காலமாக பகல் மற்றும் இரவு வேளைகளில் வீடுகள் உடைக்கப்பட்டு பெறுமதிமிக்க தங்க ஆபரணங்கள் மற்றும் பெறுமதியான உடைமைகள் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனவே பொதுமக்கள் தங்களின் பெறுமதியான உடைமைகளை பாதுகாப்பாக வைப்பதுடன் வீட்டை விட்டு வெளியேறும் போது கதவு மற்றும் ஜன்னலை பாதுகாப்பாக பூட்டி விட்டு செல்லுமாறும் அறிவுறுத்தியுள்ளார். மேலும் அருகிலுள்ள நம்பிக்கையான ஒருவருக்கு தெரியப்படுத்தி விட்டு செல்வதும் சிறந்தது. அத்துடன் தங்களின் பிரதேசத்தில் அறிமுகம் இல்லாதவர்களின் நடமாட்டம் தொடர்பாக கூடிய கவனம் செலுத்துவதுடன், சந்தேகத்திற்கிடமான வாகனங்களின் இலக்கங்களை குறித்து வைப்பதும் திருட்டுச் சம்பவங்களை தடுப்பதற்கு வசதியாக அமையும்.

ASIA ASSET FINANCE PLC
A Finance Company with a Golden Heritage
Muthoot Group Company

# ஏசியா அசட் பினான்ஸ் பிஎல்சி

## 2023 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியியல் அறிக்கைகள்

### 2023 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான முக்கிய நிதியியல் தரவுகள் (கணக்காய்வுக்குட்பட்டது)

| மில்லியன் ரூபாவில் | நடப்பு காலம் 01.04.2022 இலிருந்து 31.03.2023 வரை | முன்னைய காலம் 01.04.2021 இலிருந்து 31.03.2022 வரை |
|---|---|---|
| வட்டி வருமானம் | 5,392 | 2,576 |
| வட்டிச் செலவு | (3,651) | (1,324) |
| **தேறிய வட்டி வருமானம்** | **1,741** | **1,252** |
| வர்த்தக செயற்பாடுகளின் இலாபங்கள்/ (நட்டங்கள்) | - | - |
| ஏனைய வருமானம் | 615 | 607 |
| செயல்பாட்டு செலவினங்கள் (பெறுமதி இழப்பு நீங்கலாக) | (1,398) | (1,117) |
| அபராதம் | - | (10) |
| பெறுமதி இழப்பு | (556) | (493) |
| **வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | **402** | **239** |
| வரிகள்*** | (107) | (120) |
| **வரிக்கு பின்னரான இலாபம்/(நட்டம்)** | **295** | **119** |

***மறைமுகமான வரிகளை உள்ளடக்கியது (நிதிச் சேவைகளில் VAT போன்றவை) மற்றும் நேரடியான வரிகள் (நிறுவன வருமான வரி)

### 2023 மார்ச் 31இல் உள்ளவாறு முக்கிய நிதியியல் தரவுகள் (கணக்காய்வுக்குட்பட்டது)

| மில்லியன் ரூபாவில் | 2023 மார்ச் 31ஆம் திகதியின்படி | 2022 மார்ச் 31ஆம் திகதியின்படி |
|---|---|---|
| ரொக்கப் பணம் மற்றும் வங்கி இருப்பு அரசு பிணையங்கள் | 4,508 | 2,387 |
| தொடர்புடைய தரப்பினரால் செலுத்த வேண்டியவை | - | - |
| கடன்கள் (தொடர்புடைய தரப்பினரால் செலுத்த வேண்டியவை தவிர்த்து) | 19,478 | 15,813 |
| பங்கு முதலீடுகள் | - | - |
| முதலீட்டு ஆதனங்கள் மற்றும் மெய் ஆதன முதலீடுகள், தோட்டம் மற்றும் உபகரணங்கள் | 324 | 359 |
| ஆதனம், தோட்டம் மற்றும் உபகரணங்கள் | 204 | 184 |
| ஏனைய சொத்துகள் | 499 | 598 |
| **மொத்த சொத்துகள்** | **25,013** | **19,341** |
| **பொறுப்புகள்** | | |
| வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை | 4 | 39 |
| தொடர்புடைய தரப்புகளின் வைப்புகளில் இருந்து செலுத்த வேண்டியவை | - | - |
| வாடிக்கையாளர்களிடம் இருந்து வைப்புகள் | 13,275 | 8,695 |
| ஏனைய கடன்கள் | 8,250 | 7,531 |
| ஏனைய பொறுப்புகள் | 473 | 321 |
| **மொத்த பொறுப்புகள்** | **22,002** | **16,586** |
| **பங்கு** | | |
| கூறப்பட்ட மூலதன சட்டபூர்வ கையிருப்பு நிதி தக்கவைக்கப்பட்டது | 2,205 | 2,205 |
| வருவாய்கள் | 589 | 465 |
| ஏனைய இருப்புகள் | 217 | 85 |
| **மொத்தப் பங்கு** | **3,011** | **2,755** |
| **மொத்தப் பொறுப்புகள் மற்றும் பங்கு** | **25,013** | **19,341** |
| **பங்கு ஒன்றின் நிகர சொத்து மதிப்பு** | **24.24** | **22.19** |

**குறிப்பு:** கூறப்பட்ட தொகை தடங்கல் மற்றும் தேய்மானத்தின் நிகர அளவாகும்.

### தேர்வு செய்யப்பட்ட முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள்

| | 2023 மார்ச் 31ஆம் திகதியின்படி | 2022 மார்ச் 31ஆம் திகதியின்படி |
|---|---|---|
| **ஒழுங்குமுறை மூலதன போதுமை (%)** | | |
| வரிசை 1 மூலதன போதுமை விகிதம் | 27.43% | 27.77% |
| மொத்த மூலதன போதுமை விகிதம் | 27.43% | 27.77% |
| வைப்பு பொறுப்புகள் விகிதத்துக்கு மூலதன நிதிகள் (%) | 22.68% | 31.68% |
| **கடன் பிரிவின் தரம் (%)** | | |
| மொத்தம் செயல்படாத கடன் விகிதம் (g), | 12.79% | 12.48% |
| நிகர - செயல்படாத கடன் விகிதம் (g), | 5.84% | 2.89% |
| முக்கிய மூலதன விகிதத்துக்கு நிகர - செயல்படாத கடன், | 30.73% | 18.20% |
| ஏற்பாட்டுப் பாதுகாப்பு விகிதம், | 63.52% | 69.63% |
| **இலாபத்தன்மை (%)** | | |
| நிகர வட்டி வரம்பு | 8.94% | 7.92% |
| சொத்துகள் மீதான வருவாய் | 1.18% | 0.62% |
| பங்கு மீதான வருவாய் | 9.80% | 4.32% |
| வருமான விகிதத்துக்கான செலவு | 84.05% | 76.69% |
| **திரவத்தன்மை (%)** | | |
| தேவையான திரவ சொத்துகளுக்கு கிடைக்கப்பெறும் திரவ சொத்துகள் (g) (குறைந்தபட்சம் 100%) | 242.50% | 231.19% |
| வெளிப்புற நிதிகளுக்கான திரவ சொத்துகள் | 15.16% | 12.84% |
| **குறிப்பாணை தகவல்** | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 75 | 56 |
| வெளி கடன் மதிப்பீடு | A- | A- |
| **கடந்த 6 மாதங்களில் செயல்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை அபராதங்கள் (h)** | | |
| தொகை (மில். ரூபா) | | |
| **ஒழுங்குமுறை வைப்பு கட்டுப்பாடுகள் (h)** | | |
| மொத்த வைப்பின் வரம்பு (மில். ரூபா) | | |
| மாதம்/ காலாண்டு/ ஆண்டு அடிப்படையில் - வைப்புகளைக் குறைத்தல் (மில். ரூபா) | | |
| வைப்புகளை முடக்குதல் (i) | | |
| **ஒழுங்குமுறை கடன் பெறுதல் கட்டுப்பாடுகள் (h)** | | |
| மொத்த கடன் பெறுதல் வரம்பு (மில். ரூபா) | | |
| மாதம்/ காலாண்டு/ ஆண்டு அடிப்படையில் - கடன் பெறுதலைக் குறைத்தல் (மில். ரூபா) | | |
| கடன் பெறுதலை முடக்குதல் (i) | | |
| **ஒழுங்குமுறை கடன் கொடுத்தல் கட்டுப்பாடுகள் (h)** | | |
| மொத்த கடன் கொடுத்தல் வரம்பு (மில். ரூபா) | | |
| மாதம்/ காலாண்டு/ ஆண்டு அடிப்படையில் - கடன் கொடுத்தலை குறைத்தல் (மில். ரூபா) | | |
| புதிய கடன் வசதிகளை வழங்குதல் மற்றும்/ அல்லது நீட்டித்தல் மீதான கட்டுப்பாடுகள் தற்போதுள்ள கடன் வசதிகளின் விதிகள் (i) | | |
| **வேறு ஒழுங்குமுறை கட்டுப்பாடுகள் (h)** | | |
| தயவு செய்து குறிப்பிடவும் | | |

ஏசியா அசட் பைனான்ஸ் பிஎல்சி இன் தலைமை நிறைவேற்று அதிகாரி, பிரதி பொது முகாமையாளர் - நிதி மற்றும் இணக்க அதிகாரி ஆகிய கீழ் கையொப்பம் இட்டிருக்கும் நாம் கூட்டாக சான்றளிக்கிறோம்:

(அ) மேலுள்ள அறிக்கை இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) விபரிக்கப்பட்ட வடிவம் மற்றும் வரையறைகளுடன் இணங்குகின்றவாறு தயாரிக்கப்பட்டுள்ளது

(ஆ) இந்த அறிக்கைகளில் உள்ளடங்கும் விபரம் உரிமம் பெற்ற நிதி நிறுவனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கையில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| கையெழுத்திட்டவர் | கையெழுத்திட்டவர் | கையெழுத்திட்டவர் |
| ரஜீவ் குணவர்தன | கீதிகா எல்வலகே | ராதிகா தில்ருக்ஷி |
| தலைமை நிறைவேற்று அதிகாரி | பிரதி பொது முகாமையாளர் - நிதி | இணக்க அதிகாரி |
| திகதி: 17/08/2023 | திகதி: 17/08/2023 | திகதி: 17/08/2023 |

**சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை**

ஏசியா அசட் பினான்ஸ் பீஎல்சி இன் பங்குதாரர்களுக்கு

**நிதி அறிக்கைகளின் தணிக்கை அறிக்கை**

**கருத்து**
31 மார்ச் 2023 இன் நிதி நிலை அறிக்கை, வருமானம், இலாப நட்ட அறிக்கை, ஏனைய விரிவான வருமான அறிக்கை, மாற்றங்களின் அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய ஏசியா அசட் பினான்ஸ் பிஎல்சியின் ("நிறுவனம்") நிதிநிலை அறிக்கைகளை நாங்கள் தணிக்கை செய்துள்ளோம். முடிவடைந்த ஆண்டிற்கான சமபங்கு மற்றும் பணப்புழக்கங்களின் அறிக்கை, நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள், பக்கங்கள் 06 முதல் 73 வரை குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம் உட்பட அனைத்தும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கைகள் 31 மார்ச் 2023 நிலவரப்படி நிறுவனத்தின் நிதி நிலை, அதன் நிதி செயல்திறன், பணப்புழக்கங்கள் ஆகியவை இலங்கை கணக்கியல் தரநிலைகளின்படி முடிவடைந்த ஆண்டிற்கான உண்மையான மற்றும் நியாயமான பார்வையை அளித்திருப்பதாக நாங்கள் கருதுகின்றோம்.

**கருத்துக்கான அடிப்படை**
இலங்கை கணக்காய்வு தரநிலைகளுக்கு (SLAuSs) இணங்க நாங்கள் எங்கள் கணக்காய்வை மேற்கொண்டோம். அந்தத் தரநிலைகளின் கீழ் எங்களின் பொறுப்புகள், எங்கள் அறிக்கையின் நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கைக்கான தணிக்கையாளரின் பொறுப்புகளில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. CA Sri Lanka (நெறிமுறைகள்) வழங்கிய நெறிமுறைகளின் கோட்பாட்டின்படி நாங்கள் சுயாதீனமான கணக்காய்வை மேற்கொண்டோம் என உறுதிப்படுத்துகிறோம். மேலும் நெறிமுறைக் கோட்பாட்டிற்கு இணங்க ஏனைய நெறிமுறை பொறுப்புகளையும் நாங்கள் நிறைவேற்றியுள்ளோம். நாங்கள் பெற்ற தணிக்கை சான்றுகள் எங்கள் கருத்துக்கு அடிப்படையை வழங்க போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் இருந்தன என நாங்கள் நம்புகிறோம்.

**முக்கிய தணிக்கை விடயங்கள்**
எங்கள் தொழில்முறை மதிப்பீட்டில், தற்போதைய காலகட்டத்தின் நிதிநிலை அறிக்கைகள் தணிக்கையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். சம்பந்தப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் அனைத்தும் எங்கள் தணிக்கையின்போது கவனத்தில் கொள்ளப்பட்டன. மேலும் எங்கள் கருத்தை உருவாக்கும் போது, இந்த விஷயங்களில் நாங்கள் தனியான கருத்தை வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
முக்கிய தணிக்கை விஷயம்

**கடன்கள் குறைபாடு மற்றும் பெறத்தக்கவை**
மார்ச் 31, 2023 நிலவரப்படி நிறுவனத்தின் மொத்தக் கடன்கள் மற்றும் பெறத்தக்க தொகை ரூ. 21.2 பில்லியன் (2022: ரூ. 17.3 பில்லியன்) மற்றும் 31 மார்ச் 2023 இல் ஆண்டுக்கான குறைபாடுகளுக்கான கொடுப்பனவு ரூ. 556 மில்லியன் (2022: ரூ. 493 மில்லியன்).

SLFRS 9 இன் படி எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு ("ECL") மாதிரியைப் பயன்படுத்தி கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் குறைபாட்டை நிறுவனம் அளவிடுகிறது. இந்த தரநிலையின் பயன்பாட்டிற்கு, கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் உட்பட, எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளை நிர்ணயிப்பதில் நிர்வாகம் குறிப்பிடத்தக்க தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். மதிப்பிடப்பட்ட எதிர்கால பணப்புழக்கங்கள், இயல்பு நிலை நிகழ்தகவுகள் மற்றும் முன்னோக்கிப் பார்க்கும் பொருளாதார எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை நிர்ணயிப்பதில் நிர்வாகம் குறிப்பிடத்தக்க தீர்மானத்தை பயன்படுத்துகிறது.

கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் முக்கியத்துவம் மற்றும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகள் ஆகியவற்றின் காரணமாக, இந்த கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் குறைபாடு ஒரு முக்கிய தணிக்கை விஷயமாக கருதப்பட்டது.

குறைபாடு வழங்கல் தனிப்பட்ட மற்றும் கூட்டு குறைபாடு அடிப்படையில் தனித்தனியாக கருத்தில் கொள்ளப்படுகின்றது.

ஒரு கூட்டு அடிப்படையிலான குறைபாடு வழங்கல் கணக்கெடுப்பில் புள்ளிவிவர மாதிரிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த மாதிரிகளுக்கான பின்வரும் உள்ளீடுகளுக்கு குறிப்பிடத்தக்க நிர்வாகத் தீர்மானம் தேவைப்படுகிறது:
- இயல்புநிலை நிகழ்தகவு (PD)
- இயல்புநிலை வெளிப்பாடு (EAD)
- இழப்பு கொடுக்கப்பட்ட இயல்புநிலை (LGD)
- பொருளாதார காரணி சரிசெய்தல் (EFA)

தனிநபர் அடிப்படையில் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளை மதிப்பிடும்போது அத்தகைய மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களுக்கு நிர்வாகம் குறிப்பிடத்தக்க தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்:

- கடன், முற்பணம், குத்தகை அல்லது வாங்கும் வாடகை ஆகியவற்றில் கடன் குறைபாடு உள்ளதா என்பதைத் தீர்மானிக்கவும்
- பிணையத்தின் போதுமான தன்மை மற்றும் மீட்டெடுக்கக்கூடிய தன்மையை மதிப்பீடு செய்யவும்.
- சேகரிக்க எதிர்பார்த்திருக்கும் பணப்புழக்கங்களைத் தீர்மானிக்கவும்
- எதிர்கால பணப்புழக்கங்களின் நேர காலத்தை தீர்மானிக்கவும்.

குறைபாடு கொடுப்பனவு மதிப்பீட்டில் நடைமுறையில் உள்ள பேரளவு (மேக்ரோ) பொருளாதார நிலைமைகளின் தாக்கம் தொடர்பாக நிர்வாகத்தால் பயன்படுத்தப்படும் குறிப்பிடத்தக்க தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களின் முக்கிய பகுதிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும்:

- நிலவும் மேக்ரோ பொருளாதார நிலைமைகள் மற்றும் தொடர்புடைய தொழில்துறை பிரதிபலிப்புகளின் சாத்தியமான தாக்கங்கள் (உதாரணம்: அரசாங்க ஊக்கப் பொதிகள் மற்றும் நிறுவனம் வழங்கிய கடன் தடை நிவாரண நடவடிக்கைகள்)
- குறைபாடு கொடுப்பனவு மதிப்பீட்டில் நடைமுறையில் உள்ள மேக்ரோ பொருளாதார நிலைமைகளின் தாக்கம் தொடர்பான நிர்வாகத்தால் பயன்படுத்தப்படும் குறிப்பிடத்தக்க தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களின் முக்கிய பகுதிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும்: அத்தகைய ஊக்குவிப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் காரணமாக வாடிக்கையாளர் ஒப்பந்தங்கள் கணிசமாக மாற்றப்பட்டதா இல்லையா என்பதை தீர்மானித்தல் மற்றும் பாதிக்கப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்களில் அங்கீகரிக்கப்பட்ட வட்டி வருமானத்தின் அளவு தொடர்பான விளைவுகள்
- எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளைப் பாதிக்கக்கூடிய மேக்ரோ பொருளாதார நிலைமைகளின் பரந்த அளவிலான சாத்தியமான பொருளாதார விளைவுகள் மற்றும் சாத்தியமான தாக்கம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மேக்ரோ பொருளாதார சூழ்நிலைகளை உருவாக்குதல் மற்றும் ஒருங்கிணைப்பது உட்பட, முன்னோக்கிப் பார்க்கும் மேக்ரோ பொருளாதார காரணிகள்

கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் குறைபாடுகளுடன் தொடர்புடைய வெளிப்பாடுகள் பின்வரும் குறிப்புகளில் நிதிநிலை அறிக்கைகளில் வரையறுக்கப்பட்டுள்ளன:

- குறிப்பு 11 - குத்தகை வாடகை பெறத்தக்கவைகள், வாடகை கொள்முதல் மற்றும் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான குறைபாடு கட்டணம்
- குறிப்பு 18.8 - கடன் மற்றும் முற்பணங்கள்
- குறிப்பு 18.7 - பணமதிப்பு நீக்கப்பட்ட செலவில் நிதி சொத்துக்கள் - வாடகை பெறத்தக்கவை மற்றும் வாடகைக்கு வாங்குதல்

முக்கிய தணிக்கை விஷயத்தை எங்கள் தணிக்கை எவ்வாறு எடுத்துரைத்தது
எங்கள் நடைமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியது:

- நிர்வாகத்தின் செயல்முறையைப் பற்றிய புரிதலை நாங்கள் பெற்றுள்ளோம். மேலும்,கடன் தோற்றம், கடன் கண்காணிப்பு மற்றும் கடன் சரிசெய்தல் மீதான சோதனைக் கட்டுப்பாடுகளை பரிசோதித்தோம்.
- குறைமதிப்பீட்டின் மீதான கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு, செயலாக்கம் மற்றும் செயல்திறனை மதிப்பீடு செய்தோம், இதில் மேற்பார்வையின் அளவை மதிப்பீடு செய்தல், மதிப்பாய்வு மற்றும் கடன் குறைபாடு கொள்கைகள் மற்றும் நிர்வாக சபையினரின் நடைமுறைகள் ஆகியவையும் உள்ளடங்கும். SLFRS 9: நிதிக் கருவிகளின் தேவைகளுடன் ஒப்பிட்டுப் பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகள் மற்றும் கடன் குறைபாடு முறைகளின் சரியான தன்மையை மதிப்பீடு செய்தோம், குறிப்பாக நிலவும் மேக்ரோ பொருளாதார நிலைமைகள் மற்றும் அரசாங்கத்தின் சிறந்த பதில்களின் அடிப்படையில் மோசமான மற்றும் மிகவும் நிலையற்ற பொருளாதார சூழ்நிலைகளின் பின்னணியில் . எங்கள் அறிக்கையின் திகதிவரை கிடைத்த தகவல்களின் அடிப்படையில் எங்களது மதிப்பீடு முன்னெடுக்கப்பட்டது.
- அடிப்படைக் கணக்கீடுகளையும் தரவுகளையும் நாங்கள் பரிசோதித்தோம்.

மேலே உள்ளவற்றைத் தவிர, பின்வரும் குறிப்பிட்ட நடைமுறைகளையும் நாங்கள் கடைபிடித்தோம்:

குறைபாட்டிற்காக கூட்டாக மதிப்பிடப்பட்ட கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்:
- நிறுவனத்தின் ஆதார ஆவணங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைப்புகளில் உள்ள தகவல்களை ஒப்புக்கொள்வதன் மூலம் குறைபாடு கணக்கீடுகளில் பயன்படுத்தப்படும் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளில் உள்ள அடிப்படைத் தகவலின் முழுமையை மதிப்பீடு செய்தோம்.
- அடிப்படை வழிமுறைகள் மற்றும் மேலாண்மை மேலடுக்குகளில் நிர்வாகத்தால் பயன்படுத்தப்படும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் நியாயமானவையா என்பதை நாங்கள் மதிப்பிட்டோம். எங்கள் சோதனையில் பயன்படுத்தப்படும் முன்னோக்கிய தகவலின் நியாயத்தன்மையை மதிப்பீடு செய்தல், பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் அந்த காட்சிகள் ஒவ்வொன்றிற்கும் ஒதுக்கப்பட்ட நிகழ்தகவு, எடையிடுதல் ஆகியவை உள்ளடங்கும். மேலும், நிலவும் மேக்ரோ பொருளாதார நிலைமைகள் தொடர்பான பொருளாதார நிச்சயமற்ற தன்மை குறித்த நிறுவனத்தின் பரிசீலனைகளின் நியாயத்தன்மையையும் நாங்கள் மதிப்பிட்டோம்.

குறைபாடுகளுக்காக தனித்தனியாக மதிப்பிடப்பட்ட கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்
- குறைபாடு நிகழ்வு ஏற்பட்டதா என்பதைத் தீர்மானிக்க நிர்வாகத்தால் பயன்படுத்தப்படும் முக்கிய அளவுகோல்களை நாங்கள் மதிப்பிட்டோம்
- குறைபாடு குறிகாட்டிகள் இருந்த இடத்தில், எதிர்பார்க்கப்படும் எதிர்கால பணப்புழக்கங்கள், தள்ளுபடி விகிதங்கள் மற்றும் வைத்திருக்கும் பிணையத்தின் மதிப்பீடு உள்ளிட்ட நிர்வாகத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால மீட்டெடுப்புகளின் நியாயத்தன்மையை நாங்கள் மதிப்பிட்டோம்.
- உயர்ந்த இடர் தொழில்கள், எடுக்கப்பட்ட மூலோபாய பதிலளிக்கக்கூடிய நடவடிக்கைகள், இணை மதிப்புகள் மற்றும் எதிர்கால பணப்புழக்கங்களின் மதிப்பு மற்றும் நேரம் ஆகியவற்றில் நடைமுறையில் உள்ள மேக்ரோ பொருளாதார நிலைமைகள் மீது குறிப்பிட்ட கவனம் செலுத்தி செய்யப்பட்ட ஏற்பாடுகளின் நியாயத்தன்மையை நாங்கள் மதிப்பீடு செய்தோம்.

அரசாங்க ஊக்குவிப்பு மற்றும் கடன் தடை நிவாரண நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு வாடிக்கையாளர் ஒப்பந்தங்கள் கணிசமாக மாற்றப்பட்டதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கவும் அதன் விளைவாக ஏற்பட்ட கணக்கியல் தாக்கங்களைத் தீர்மானிக்கவும், தீர்ப்புகளின் சரியான தன்மை, கணக்கீடுகளின் நியாயத்தன்மை மற்றும் தரவு ஆகியவற்றையும் மதிப்பீடு செய்தோம்

அத்துடன்,
அத்தகைய பாதிக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களில் அங்கீகரிக்கப்பட்ட வட்டி வருமானத்தின் நியாயத்தன்மையை மதிப்பீடு செய்தோம். தொடர்புடைய நிதிநிலை அறிக்கை வெளிப்பாடுகளின் போதுமான தன்மையையும் நாங்கள் மதிப்பிட்டோம் ஏனைய தகவல்கள்:
ஏனைய தகவல்களுக்கு நிர்வாகமே பொறுப்பாகும், ஏனைய தகவல்கள் ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கியது. இந்த தணிக்கை அறிக்கையின் திகதிக்குப் பின்னர் வருடாந்த அறிக்கை எங்களுக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிதிநிலை அறிக்கைகள் பற்றிய எங்கள் கருத்து மற்ற தகவல்களை உள்ளடக்கவில்லை. மேலும், நாங்கள் எந்த விதமான உத்தரவாத முடிவையும் வெளிப்படுத்தவில்லை.

நிதிநிலை அறிக்கைகளின் எங்கள் தணிக்கை தொடர்பாக, மேலே இனம் காணப்பட்ட பிற தகவல்கள் கிடைக்கும்போது அவற்றை வாசிப்பதும் அவ்வாறு செய்யும்போது, கிடைக்கும் மற்ற தகவல்கள் நிதிநிலை அறிக்கைகளுடனோ அல்லது தணிக்கையில் பெறப்பட்ட எமது முடிவுகளுக்கோ முரணாக உள்ளதா அல்லது அதன் பொருள் தவறாகத் தோன்றுகிறதா என்பதைக் கருத்தில் கொள்வதும் எங்கள் பொறுப்பாகும். .
ஆண்டறிக்கையை வாசிக்கும்போது, அதில் தவறான தகவல்கள் இருப்பதாக நாங்கள் முடிவு செய்யும் பட்சத்தில் நிறுவனத்தின் ஆளுமைக்குப் பொறுப்பாக உள்ளவர்களிடம் அந்த விஷயத்தைத் தெரிவிக்கவேண்டிய கடப்பாடு எங்களுக்கு உள்ளது .

நிர்வாகத்தினதும் ஆளுகையாளர்களினதும் நிதிநிலை அறிக்கைகளுக்கான பொறுப்புகள்:

இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான பார்வையை வழங்கும் நிதி அறிக்கைகளை, மோசடி அல்லது பிழைகளைத் தவிர்த்து தயாரிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவனத்தை கலைக்க நினைக்கும் வரையில் அல்லது நிறுவனத்தின் செயற்பாடுகளை நிறுத்துதல் அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர யதார்த்தமான மாற்றுவழி எதுவும் இல்லை என்ற நிலை தோன்றும் வரையில் நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பது நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

நிர்வாகத்தின் ஆளுமைக்குப் பொறுப்பானவர்கள் நிறுவனத்தின் நிதி அறிக்கை செயல்முறையை மேற்பார்வையிடும் கடப்பாட்டைக் கொண்டிருப்பார்கள்..

நிதி அறிக்கைகளின் தணிக்கைக்கான தணிக்கையாளரின் பொறுப்புகள்

நிதிநிலை அறிக்கைகள் ஒட்டுமொத்தமாக தவறான அறிக்கையிலிருந்து விடுபட்டுள்ளதா, அல்லது மோசடிகள் அல்லது பிழைகள் ஏற்பட்டுள்ளதா என்பதை பற்றிய நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதும், எங்கள் கருத்தை உள்ளடக்கிய தணிக்கை அறிக்கையை வெளியிடுவதும் எங்கள் நோக்கங்களாகும். நியாயமான உத்தரவாதம் என்பது ஒரு உயர் நிலை உத்தரவாதமாகும் எனினும் ஸ்டுயுரளுள-க்கு இணங்க நடத்தப்படும் ஒரு தணிக்கையானது தவறான அறிக்கையை எப்போதும் கண்டறியும் என்பதற்கு உத்தரவாதம் கிடையாது. . தவறான அறிக்கைகள் மோசடி அல்லது பிழையிலிருந்து எழலாம், மேலும் அவை தனித்தனியாகவோ அல்லது மொத்தமாகவோ இந்த நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயனர்களின் பொருளாதார முடிவுகளை நியாயமான முறையில் பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் நாங்கள்,
SLAuS களுக்கு இணங்க ஒரு தணிக்கையின் ஒரு பகுதியாக, நாங்கள் தணிக்கை முழுவதும் தொழில்முறை மதிப்பீட்டைப் பயன்படுத்துகிறோம் மற்றும் தொழில்முறை சந்தேகத்தை பராமரிக்கிறோம்:
- மோசடி அல்லது பிழையின் காரணமாக, நிதிநிலை அறிக்கைகளின் தவறான அறிக்கையின் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பீடு செய்தல், அந்த அபாயங்களுக்கு பதிலளிக்கும் வகையில் தணிக்கை நடைமுறைகளை வடிவமைத்து செயல்படுத்துதல் மற்றும் எங்கள் கருத்துக்கு அடிப்படையை வழங்க போதுமான மற்றும் பொருத்தமான தணிக்கைச் சான்றுகளைப் பெறுதல். மோசடி, வேண்டுமென்றே புறக்கணிப்பு, தவறான விளக்கங்கள் அல்லது உள் கட்டுப்பாட்டை மீறுதல் போன்றவற்றை உள்ளடக்கியதால், மோசடியின் விளைவாக ஏற்படும் தவறான அறிக்கையைக் கண்டறியாத ஆபத்து, பிழையின் விளைவாக ஏற்படும் ஒன்றை விட அதிகமாக உள்ளது.
- சூழ்நிலைக்குப் பொருத்தமான தணிக்கை நடைமுறைகளை வடிவமைப்பதற்காக தணிக்கை தொடர்பான உள் கட்டுப்பாடு பற்றிய புரிதலைப் பெற்றுக் கொள்ளுங்கள். எனினும் இந்தப் புரிதல் நிறுவனத்தின் செயல்திறன் மற்றும் குழுவின் உள் கட்டுப்பாடு பற்றிய கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படுவதல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.
- பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகளின் சரியான பிரயோகம், கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் நிர்வாகத்தால் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்பாடுகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்யவும்.
- நிறுவனத்தின் தொடர்ந்த செயற்பாடுகளின் மீதான அக்கறையுடன் நிர்வாகத்தின் பயன்பாட்டின் சரியான தன்மையை முடிவு செய்யுங்கள் மேலும் பெறப்பட்ட தணிக்கை சான்றுகளின் அடிப்படையில், நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான ஒரு பொருளில் நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பதையும் இந்த நிலை தொடர்ந்தால் நிறுவனத்தின் எதிர்கால செயற்பாடுகளில் ஒரு தொய்வு நிலை ஏற்படலாம் என்ற சந்தேகத்தையும் கவனத்தில் கொண்டு செயற்படுங்கள். ஏதாவது ஒரு அம்சத்தில் நிச்சயமற்ற தன்மை இருப்பதாக நாங்கள் முடிவு செய்தால், நிதிநிலை அறிக்கைகளில் உள்ள தொடர்புடைய வெளிப்பாடுகள் அல்லது அத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக இல்லாவிட்டால், எங்கள் கருத்தை மாற்றுவதற்கு எங்கள் தணிக்கையாளரின் அறிக்கையின் கவனத்தை ஈர்க்க வேண்டும். எங்கள் தணிக்கையாளரின் அறிக்கையின் தேதி வரை பெறப்பட்ட தணிக்கை சான்றுகளின் அடிப்படையிலேயே எங்கள் முடிவுகள் உள்ளன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகள் நிறுவனத்தின் தொடர்ந்த செயற்பாட்டுக்கு ஒரு முட்டுக்கட்டையாக அமையக் கூடும்.
- வெளிப்படுத்தல்கள் உட்பட நிதிநிலை அறிக்கைகளின் ஒட்டுமொத்த விளக்கக்காட்சி, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மற்றும் நிதிநிலை அறிக்கைகள் நியாயமான விளக்கக்காட்சியை அடையும் விதத்தில் அடிப்படை பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதை மதிப்பீடு செய்யவும்.

தணிக்கையின் திட்டமிடப்பட்ட நோக்கம், காலம், குறிப்பிடத்தக்க தணிக்கை கண்டுபிடிப்புகள் மற்றும் எங்கள் தணிக்கையின் போது நாங்கள் அடையாளம் காணும் உள் கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட, அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் நிர்வாகத்தின் ஆளுமையாளர்களாக பொறுப்பு ஏற்றுள்ளவர்களுடன் நாங்கள் தொடர்பு கொள்கிறோம்.

சுதந்திரம் தொடர்பான நெறிமுறைக் கோட்பாட்டின்படி நாங்கள் நெறிமுறைத் தேவைகளுக்கு இணங்கியுள்ளோம் என்ற அறிக்கையை ஆளுமைக்குப் பொறுப்பானவர்களுடன் சம்பந்தப்பட்ட இடங்களில் பொருத்தமான பாதுகாப்புகளுடன் வழங்குகிறோம்.

ஆளுமைக்குப் பொறுப்பானவர்களுடன் தொடர்பு கொண்ட விஷயங்களில் இருந்து நடப்பு காலகட்டத்தின் நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என நாம் கருதுபவை முக்கிய தணிக்கை விஷயங்களாகும். இந்த விஷயத்தைப் பற்றிய பொது வெளிப்பாட்டை சட்டம் அல்லது ஒழுங்குமுறை தடுக்காத வரையில் அவற்றை எங்கள் தணிக்கை அறிக்கையில் விவரிக்கிறோம், மிகவும் அரிதான சூழ்நிலைகளில், ஒரு விஷயத்தை எங்கள் அறிக்கையில் தெரிவிக்கக்கூடாது என்று நாங்கள் தீர்மானிக்கிறோம், ஏனெனில் அவ்வாறு செய்வதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படும். பொது நலன்களை விட அதிகமாக இருக்கக் கூடும்

**ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய அறிக்கை**
2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் 163 (2) ஆம் பிரிவின்படி, தணிக்கைக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நாங்கள் பெற்றுள்ளோம், மேலும் எங்கள் கணக்காய்வின்படி நிறுவனம் முறையான கணக்கியல் பதிவுகளை வைத்திருக்கின்றது என்பது தெளிவாகின்றது.

இந்த சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கையில் கையொப்பமிடுவதற்கு அதிகாரம் பெற்றவரின் CA ஸ்ரீலங்கா உறுப்பினர் எண் 4324 ஆகும்.

பட்டய கணக்காளர்கள்
கொழும்பு,
28 ஏப்ரல் 2023
கையொப்பம்
HSR/dm

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# நிதி அறிக்கைகள்

## 2023 ஜுன் 30இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கானது

(இலங்கை மத்திய வங்கியின் திருத்தப்பட்ட
2019.01.18ஆம் திகதிய பணிப்புரைக்கு அமைவானவை)

## வருமானக் கூற்று

| | குறிப்பு | வங்கி: முடிவடைந்த 6 மாதங்களுக்கானது 30.06.23 ரூ. '000 | 30.06.22 ரூ. '000 | மாற்றம் % | முடிவடைந்த காலாண்டிற்கானது 30.06.23 ரூ. '000 | 30.06.22 ரூ. '000 | மாற்றம் % | குழுமம்: முடிவடைந்த 6 மாதங்களுக்கானது 30.06.23 ரூ. '000 | 30.06.22 ரூ. '000 | மாற்றம் % | முடிவடைந்த காலாண்டிற்கானது 30.06.23 ரூ. '000 | 30.06.22 ரூ. '000 | மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமானம்** | | 56,057,501 | 27,639,100 | 103 | 27,176,625 | 15,452,602 | 76 | 56,356,799 | 27,951,273 | 102 | 27,328,286 | 15,597,528 | 75 |
| வட்டி வருமானம் | | 50,736,975 | 25,886,690 | 96 | 24,822,277 | 14,707,408 | 69 | 50,738,151 | 25,887,277 | 96 | 24,823,097 | 14,707,403 | 69 |
| வட்டிச் செலவினம் | | 35,261,675 | 14,894,647 | 137 | 17,691,878 | 8,486,630 | 108 | 35,201,660 | 14,869,369 | 137 | 17,660,595 | 8,470,852 | 108 |
| **தேறிய வட்டி வருமானம்** | | 15,475,300 | 10,992,043 | 41 | 7,130,399 | 6,220,778 | 15 | 15,536,491 | 11,017,908 | 41 | 7,162,502 | 6,236,551 | 15 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | | 2,542,370 | 1,505,362 | 69 | 1,180,586 | 711,744 | 66 | 2,541,918 | 1,506,002 | 69 | 1,180,440 | 711,905 | 66 |
| கழி: கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | | 597,468 | 322,138 | 85 | 300,093 | 167,669 | 79 | 597,468 | 322,138 | 85 | 300,093 | 167,669 | 79 |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | | 1,944,902 | 1,183,224 | 64 | 880,493 | 544,075 | 62 | 1,944,450 | 1,183,864 | 64 | 880,347 | 544,236 | 62 |
| வியாபார நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம் | 5 | 1,434,587 | (1,006,843) | 242 | 46,042 | (2,517,811) | 102 | 1,434,587 | (1,006,843) | 242 | 46,042 | (2,517,811) | 102 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் நியமிக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் மூலமான தேறிய இலாபம்/நட்டம் | 6 | (42,212) | 156,732 | (127) | 434,930 | 2,429,591 | (82) | (42,212) | 156,732 | (127) | 434,930 | 2,429,591 | (82) |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நிதிச் சொத்துகளின் நியாயப் பெறுமதியின் நியாய மதிப்பீட்டில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | | 782,104 | 10,407 | 7,415 | 649,314 | 170 | 381,849 | 782,104 | 10,407 | 7,415 | 649,314 | 170 | 381,849 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் - (தேறியது) | 7 | 603,677 | 1,086,752 | (44) | 43,476 | 121,500 | (64) | 902,251 | 1,397,698 | (35) | 194,463 | 266,270 | (27) |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | | 20,198,358 | 12,422,315 | 63 | 9,184,654 | 6,798,302 | 35 | 20,557,671 | 12,759,766 | 61 | 9,367,598 | 6,959,007 | 35 |
| கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பெறுமதி குறைப்பு | | | | | | | | | | | | | |
| ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து கடன்களும் வருமதிகளும் | | 7,786,914 | 6,225,054 | 25 | 3,106,917 | 3,472,506 | (11) | 7,786,914 | 6,242,553 | 25 | 3,106,917 | 3,490,005 | (11) |
| ஏனைய நிதியியல் சொத்துக்கள் | | 309,487 | 585,410 | (47) | 298,568 | 520,730 | 43 | 309,487 | 585,410 | (47) | 298,568 | 520,730 | 43 |
| ஏனையவை | | - | (2,927) | 100 | - | (2,927) | 100 | - | (2,927) | 100 | - | (2,927) | 100 |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | | 12,101,957 | 5,614,778 | 116 | 5,779,169 | 2,807,993 | 106 | 12,461,270 | 5,934,730 | 110 | 5,962,113 | 2,951,199 | 102 |
| தொழிற்பாட்டு செலவினம் | | | | | | | | | | | | | |
| ஆளணிச் செலவினங்கள் | | 2,260,322 | 2,252,744 | 0 | 1,030,226 | 1,104,692 | (7) | 2,391,534 | 2,368,747 | 1 | 1,098,243 | 1,165,651 | (6) |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு | | 559,527 | 559,906 | (0) | 286,798 | 284,751 | 1 | 591,528 | 590,300 | 0 | 298,153 | 300,014 | (1) |
| ஏனைய செலவினங்கள் | | 2,667,926 | 2,018,289 | 32 | 1,333,411 | 1,021,419 | 31 | 2,633,508 | 1,981,866 | 33 | 1,309,244 | 991,985 | 32 |
| **மொத்த தொழிற்பாட்டு செலவினங்கள்** | | 5,487,775 | 4,830,939 | 14 | 2,650,435 | 2,410,862 | 10 | 5,616,570 | 4,940,913 | 14 | 2,705,640 | 2,457,650 | 10 |
| **நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் கடன் மீளளிப்பு விதிப்பனவுக்கு முந்திய செயற்பாட்டு இலாபம்** | | 6,614,182 | 783,839 | 744 | 3,128,734 | 397,131 | 688 | 6,844,700 | 993,817 | 589 | 3,256,473 | 493,549 | 560 |
| நிதி சேவைகளுக்கான வரி | | 1,504,450 | 452,745 | 232 | 702,668 | 209,300 | 236 | 1,504,450 | 452,745 | 232 | 702,668 | 209,300 | 236 |
| **நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் கடன் மீளளிப்பு விதிப்பனவுக்கு பிந்திய செயற்பாட்டு இலாபம்** | | 5,109,732 | 331,094 | 1,443 | 2,426,066 | 187,831 | 1,192 | 5,340,250 | 541,072 | 887 | 2,553,805 | 284,249 | 798 |
| துணை மற்றும் கூட்டுமுயற்சி கம்பனிகளின் பங்குகள் மீதான இலாபம் | | - | - | - | - | - | - | 526,340 | 149,110 | 253 | 311,673 | 79,638 | 291 |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | | 5,109,732 | 331,094 | 1,443 | 2,426,066 | 187,831 | 1,192 | 5,866,590 | 690,182 | 750 | 2,865,478 | 363,887 | 687 |
| வரிச் செலவினங்கள் | | 1,904,455 | (181,889) | 1,147 | 969,528 | 41,405 | 2,242 | 1,943,332 | (134,101) | 1,549 | 1,004,174 | 66,468 | 1,411 |
| **காலப்பகுதிக்கான இலாபம்** | | 3,205,277 | 512,983 | 525 | 1,456,538 | 146,426 | 895 | 3,923,258 | 824,283 | 376 | 1,861,304 | 297,419 | 526 |
| **சாட்டத்தக்கவர்கள்** | | | | | | | | | | | | | |
| வங்கியின் பங்குதாரர்கள் | | 3,205,277 | 512,983 | 525 | 1,456,538 | 146,426 | 895 | 3,838,049 | 754,462 | 409 | 1,823,733 | 267,772 | 581 |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | | - | - | - | - | - | - | 85,209 | 69,821 | 22 | 37,571 | 29,647 | 27 |
| **காலப்பகுதிக்கான இலாபம் – அறிக்கையிடப்பட்டது** | | 3,205,277 | 512,983 | 525 | 1,456,538 | 146,426 | 895 | 3,923,258 | 824,283 | 376 | 1,861,304 | 297,419 | 526 |
| பங்கொன்றுக்கான அடிப்படை ஈட்டல்கள் - ரூபா | | 7.74 | 1.50 | 416 | 3.52 | 0.43 | 718 | 9.27 | 2.20 | 322 | 4.41 | 0.78 | 462 |

## இலாபம் அல்லது நட்டக்கூற்று மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

| | வங்கி: முடிவடைந்த 6 மாதங்களுக்கானது 30.06.23 ரூ. '000 | 30.06.22 ரூ. '000 | மாற்றம் % | முடிவடைந்த காலாண்டிற்கானது 30.06.23 ரூ. '000 | 30.06.22 ரூ. '000 | மாற்றம் % | குழுமம்: முடிவடைந்த 6 மாதங்களுக்கானது 30.06.23 ரூ. '000 | 30.06.22 ரூ. '000 | மாற்றம் % | முடிவடைந்த காலாண்டிற்கானது 30.06.23 ரூ. '000 | 30.06.22 ரூ. '000 | மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலப்பகுதிக்கான இலாபம் | 3,205,277 | 512,983 | 525 | 1,456,538 | 146,426 | 895 | 3,923,258 | 824,283 | 376 | 1,861,304 | 297,419 | 526 |
| **காலப்பகுதிக்கான ஆண்டிற்கான வரி நீங்கலான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/(செலவினம்)** | | | | | | | | | | | | |
| **வருமான அறிக்கைக்கு மீள் வகைப்படுத்தப்படவிருக்கும் விடயங்கள் நியாயப் பெறுமதி ஒதுக்கத்தில் (ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானக் கடன் பத்திரத்தின் ஊடான நியாயப் பெறுமதி) நகர்வு:** | | | | | | | | | | | | |
| நியாயப் பெறுமதியில் நிகர மாற்றம் | 2,344,316 | 814,474 | 188 | 1,435,824 | 2,316,925 | 38 | 2,344,316 | 814,474 | 188 | 1,435,824 | 2,316,925 | 38 |
| வருமான அறிக்கைக்கு மீள்வகைப்படுத்தப்பட்டது | 117,769 | (257,535) | 146 | 61,278 | - | 100 | 117,769 | (257,535) | 146 | 61,278 | - | 100 |
| கூட்டு முயற்சி மற்றும் துணை நிறுவனப் பங்குரிமையில் ஏனைய அனைத்துமுள்ளடங்கும் வருமானத்தின் பங்கு | - | - | - | - | - | - | (334,646) | 787,646 | (142) | (151,242) | 288,143 | (152) |
| ஹெஜிங் ஒதுக்கத்தில் நகர்வு: | | | | | | | | | | | | |
| பணப் பாய்ச்சல் ஹெஜ் - நியாயப் பெறுமதி மாற்றத்தில் செயற்படு பகுதி | (6,443,557) | 6,674,257 | 197 | (5,382,677) | 749,678 | (818) | (6,443,557) | 6,674,257 | (197) | (5,382,677) | 749,678 | (818) |
| பணப் பாய்ச்சல் ஹெஜ் - வருமான அறிக்கைக்கு மீள்வகைப்படுத்தப்பட்டது | 6,941,250 | (20,268,216) | 134 | 2,542,500 | (8,458,992) | 130 | 6,941,250 | (20,268,216) | 134 | 2,542,500 | (8,458,992) | 130 |
| தொடர்புடைய ஒத்திவைக்கப்பட்ட வரி | (887,882) | 3,312,378 | (127) | 390,315 | 2,290,046 | (83) | (887,882) | 3,312,378 | (127) | 390,315 | 2,290,046 | (83) |
| **வருமான அறிக்கைக்கு மீள்எறிக்கையிட்ட மொத்த ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானம்/(செலவினம்)** | 2,071,896 | (9,724,642) | 121 | (952,760) | (3,102,343) | 69 | 1,737,250 | (8,936,996 ) | 119 | (1,104,002) | (2,814,200) | 61 |
| **வருமான அறிக்கைக்கு மீள் வகைப்படுத்தப்படாத விடயங்கள்** | | | | | | | | | | | | |
| நியாயப் பெறுமதி ஒதுக்கங்களில் நகர்வு (FVOCI பங்குரிமைப் பத்திரங்கள்): | | | | | | | | | | | | |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில் பங்குரிமை முதலீடுகள் - நியாயப் பெறுமதியில் மாற்றம் நீங்கலாக | 2,758,821 | (4,728,694) | 158 | 724,447 | (2,026,300) | 136 | 2,758,821 | (4,717,649) | 158 | 724,447 | (2,015,255) | 136 |
| கூட்டு முயற்சி மற்றும் துணை நிறுவனப் பங்குரிமையில் ஏனைய அனைத்துமுள்ளடங்கும் | - | - | - | - | - | - | - | 405 | (100) | - | 405 | (100) |
| **வருமான அறிக்கைக்கு மீள்எறிக்கையிடப்படாத மொத்த ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானம்** | 2,758,821 | (4,728,694) | 158 | 724,447 | (2,026,300) | 136 | 2,758,821 | (4,717,244) | 158 | 724,447 | (2,014,850) | 136 |
| **காலப்பகுதிக்கான ஏனைய அனைத்துமுள்ளடக்கிய (செலவினம்)/வருமானம், வரி நீங்கலாக** | 4,830,717 | (14,453,336 ) | 133 | (228,313) | (5,128,643) | 96 | 4,496,070 | (13,654,240) | 133 | (379,556) | (4,829,050) | 92 |
| **காலப்பகுதிக்கான மொத்த ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானம் பின்வருவோருக்குச் சாட்டத்தக்க மொத்த** | 8,035,994 | (13,940,353) | 158 | 1,228,225 | (4,982,217) | 125 | 8,419,328 | (12,829,957) | 166 | 1,481,748 | (4,531,631) | 133 |
| **அனைத்தையுமுள்ளடக்கிய (செலவினம்)/வருமானம்:** | | | | | | | | | | | | |
| வங்கியில் பங்குரிமை வைத்திருப்பவர்கள் | 8,035,994 | (13,940,353) | 158 | 1,228,225 | (4,982,217) | 125 | 8,334,119 | (12,899,778) | 165 | 1,444,177 | (4,561,278) | 132 |
| கட்டுப்பாட்டைக் கொண்டிராத பங்குதாரர்கள் | - | - | | - | - | | 85,209 | 69,821 | 22 | 37,571 | 29,647 | 27 |
| **காலப்பகுதிக்கான மொத்த ஏனைய அனைத்துமுள்ளடக்கிய (செலவினம்)/வருமானம்** | 8,035,994 | (13,940,353) | 158 | 1,228,225 | (4,982,217) | 125 | 8,419,328 | (12,829,957) | 166 | 1,481,748 | (4,531,631) | 133 |

## காசுப்பாய்ச்சல் கூற்று

| ஜுன் 30இல் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கானது | வங்கி 2023 ரூ. '000 | வங்கி 2022 ரூ. '000 | குழுமம் 2023 ரூ. '000 | குழுமம் 2022 ரூ. '000 |
|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்** | | | | |
| பெறப்பட்ட வட்டி | 33,659,459 | 20,962,991 | 33,654,711 | 20,967,353 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | (30,593,464) | (14,602,099) | (30,578,334) | (14,581,391) |
| பெறப்பட்ட தேறிய கட்டணம் | 2,467,293 | 1,501,385 | 2,467,293 | 1,501,385 |
| தேறிய விற்பனை வருமானம் | 10,851 | 20,037 | 10,851 | 20,037 |
| முன்பு பதிவழிக்கப்பட்ட கடன்களின் மீளப்பெறுகை | - | 130,521 | - | 130,521 |
| ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்தவை | 69,728 | (17,605) | 335,495 | 272,437 |
| ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவு | (3,072,532) | (2,476,747) | (2,905,042) | (2,476,057) |
| ஊழியர்களுக்கான பணக் கொடுப்பனவுகள் | (2,330,660) | (2,545,130) | (2,683,911) | (2,913,351) |
| நிதிச்செலவுகள் மீதான வரி | (1,467,599) | (323,079) | (1,467,599) | (323,079) |
| செயற்பாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் மாற்றத்திற்கு முன் செயற்பாட்டுக் காசுப் பாய்ச்சல் | (1,256,924) | 2,650,274 | (1,166,536) | 2,597,855 |
| **செயற்பாட்டுச் சொத்துக்களின் (அதிகரிப்பு)/வீழ்ச்சி:** | | | | |
| ஒழுங்குபடுத்தல் அல்லது நாணயக் கட்டுப்பாட்டு நோக்கத்திற்காக மத்திய வங்கியில் வைத்திருக்கும் வைப்புக்கள் | 5,886,596 | 1,383,834 | 5,886,596 | 1,383,834 |
| நிலைமாற்றப்பட்ட பெறுமதியில் நிதிச் சொத்துகள் - ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் அவர்களிடமிருந்தான வருமதிகள் | 7,045,774 | (29,117,365) | 7,045,774 | (29,117,365) |
| ஏனையவை | 1,559,159 | 8,844,699 | 1,453,241 | 9,381,377 |
| **செயற்பாட்டுப் பொறுப்புக்களின் அதிகரிப்பு/(வீழ்ச்சி):** | | | | |
| வைப்பாளர்களிடமிருந்து நிலைமாற்றப்பட்ட நிதியியல் பொறுப்புக்கள் | 17,070,920 | 23,469,555 | 17,036,426 | 22,971,568 |
| பேரம் பேசக்கூடிய வைப்புச் சான்றிதழ்கள் | (903,095) | (310,017) | (903,095) | (310,017) |
| ஏனையவை | 677,177 | (538,615) | 763,850 | (539,513) |
| வருமான வரிக்கு முந்திய செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான/(பயன்படுத்தப்பட்ட) நிகர பணப் பாய்ச்சல் | 30,079,607 | 6,382,365 | 30,116,256 | 6,367,740 |
| செலுத்தப்பட்ட மிகை வரி | - | (616,245) | - | (618,288) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (1,624,035) | (843,882) | (1,680,730) | (871,764) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான/(பயன்படுத்தப்பட்ட) நிகர பணப் பாய்ச்சல்** | 28,455,572 | 4,922,238 | 28,435,526 | 4,877,688 |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்** | | | | |
| உப நிறுவனங்கள், கூட்டு முயற்சி மற்றும் துணை நிறுவனத்திடமிருந்து கிடைத்த பங்கிலாபங்கள் | - | - | (89,861) | - |
| ஏனைய முதலீடுகளிலிருந்து கிடைத்த பங்கிலாபம் | 46,396 | 1,072,839 | 46,396 | 1,072,839 |
| பெறப்பட்ட வட்டி | 15,953,923 | 3,078,331 | 16,017,399 | 3,099,770 |
| அரசாங்கப் பிணையங்கள் - தேறியது | (55,578,970) | 12,045,798 | (55,578,970) | 12,045,798 |
| பிணையங்களின் விற்பனை மற்றும் மீட்பு மூலமான வருமானம் | 180,016 | 99,305 | 180,016 | 114,342 |
| பிணையங்களின் கொள்வனவு | (237,068) | (802,499) | (237,068) | (802,499) |
| காணி ஆதனம், உபகரணங்கள், மற்றும் முதலீட்டுச் சொத்துக்களின் கொள்வனவு | (540,970) | (467,088) | (549,512) | (471,381) |
| முதலீட்டுச் சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள் விற்பனை மூலமான வருமானம் | - | 7,768 | - | 7,768 |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான நிகர காசுப் பாய்ச்சல்** | (40,176,673) | 15,034,454 | (40,211,600) | 15,066,637 |
| **நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்** | | | | |
| தொகுதிக்கடன்களின் மீட்பு | (2,913,470) | - | (2,913,470) | - |
| தொகுதிக்கடன்களின் வழங்கல் | - | 3,620,001 | - | 3,620,001 |
| இடைக்கால மற்றும் நீண்டகால கடன்கள் | 1,328,523 | 2,828,944 | 1,328,523 | 2,828,944 |
| ஏனைய கடன்படுகை (நிகர) | 7,002,500 | (251,216) | 7,002,500 | (251,216 ) |
| இடைக்கால மற்றும் நீண்டகால கடன்களின் மீளளிப்பு | (4,924,859) | (13,802,569) | (4,924,859) | (13,802,569 ) |
| வழங்கப்பட்ட பங்கிலாபம் | (120,878) | 673 | (31,016) | 673 |
| **நிதி நடவடிக்கைகள் மூலமான நிகர காசுப் பாய்ச்சல்** | 371,816 | (7,604,167) | 461,678 | (7,604,167) |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் நிகர (குறைப்பு)/அதிகரிப்பு | (11,349,285) | 12,352,525 | (11,314,396) | 12,340,158 |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 31,347,257 | 16,976,261 | 31,369,128 | 17,023,406 |
| **காலப்பகுதியின் முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | 19,997,972 | 29,328,786 | 20,054,732 | 29,363,564 |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவையை நிதி நிலைமை கூற்றில் உள்ள பெறுமதிகளுடன் இணக்குதல்** | | | | |
| வங்கியிலுள்ள இருப்புக்கள் | 12,551,455 | 16,387,723 | 12,573,755 | 16,422,501 |
| வங்கியிலுள்ள இருப்புக்கள் | 7,446,517 | 12,941,063 | 7,480,977 | 12,941,063 |
| | 19,997,972 | 29,328,786 | 20,054,732 | 29,363,564 |

இலங்கை கணக்கியல் கொள்கைகளின் தேவைக்கு ஏற்ப இணை, துணை, கூட்டு முயற்சி கம்பனிகளுக்கான வங்கியின் பெறுபேறுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## நிதியியல் நிலைமைக் கூற்று

| உள்ளவாறு | குறிப்பு | வங்கி: 30.06.2023 இல் இ.ரூ. '000 | 31.12.2022 இல் இ.ரூ. '000 கணக்காய்வு செய்யப்பட்டது | மாற்றம் % | குழுமம்: 30.06.2023 இல் இ.ரூ. '000 | 31.12.2022 இல் இ.ரூ. '000 கணக்காய்வு செய்யப்பட்டது | மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | 12,551,455 | 16,122,565 | (22) | 12,573,755 | 16,126,635 | (22) |
| மத்திய வங்கியுடனான மீதிகள் | | 3,144,273 | 9,030,868 | (65) | 3,144,273 | 9,030,868 | (65) |
| வங்கிகளிலுள்ள இருப்புக்கள் | | 7,446,517 | 15,224,692 | (51) | 7,480,977 | 15,242,493 | (51) |
| பெறுதி நிதிச் சொத்துகள் | | 14,088,439 | 20,473,544 | (31) | 14,088,439 | 20,473,544 | (31) |
| இலாப நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள் | | 1,076,365 | 1,429,149 | (25) | 1,076,365 | 1,429,149 | (25) |
| குறைக்கப்பட்ட பெறுமதியில் நிதிச் சொத்துகள் - வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் வங்கிகளிடமிருந்தான வருமதிகள் | | 815,141 | - | 100 | 815,141 | - | 100 |
| குறைக்கப்பட்ட பெறுமதியில் நிதிச் சொத்துகள் - ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் அவர்களிடமிருந்தான வருமதிகள் | 8 | 342,447,655 | 369,072,030 | (7) | 342,447,655 | 369,072,030 | (7) |
| நிலைமாற்றப்பட்ட பெறுமதியில் நிதிச் சொத்துகள் - கடன் மற்றும் ஏனைய பத்திரங்கள் | | 51,563,523 | 50,947,926 | 1 | 51,563,523 | 50,947,926 | 1 |
| ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள் | | 120,893,336 | 63,319,060 | 91 | 120,893,336 | 63,319,060 | 91 |
| துணைக் கம்பனிகளிலான முதலீடுகள் | | 237,035 | 237,035 | 0 | - | - | - |
